D 6943

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பக்தை மீராவின் பதாவளிகள்

(மூலமும், தமிழில் மொழியாக்கமும்)



ஆசிரியர் பிரசுரகர்த்தா :

எஸ். ஜகந்நாராயணன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

38, ராமகிருஷ்ண நகர், சென்னை-28.

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

पुस्तकालय

गुरुकुल काँगड़ी विश्वविद्यालय, हरिद्वार

वर्ग संख्या……—……—……आगत संख्या……………

पुस्तक-वितरण की तिथि नीचे अंकित है। इस तिथि सहित २० वें दिन तक यह पुस्तक पुस्तकालय में वापिस आ जानी चाहिए। अन्यथा १० पैसे के हिसाब से विलम्ब-दण्ड लगेगा।

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மீரா பஜன்

(பக்த மீராவின் பதா வளிகள்)
மூலமும் தமிழாக்கமும்

DONATION 6943

★

पुस्तकालय
पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

ஆசிரியர் :
எஸ். ஜகந்நாராயணன்

★

பதிப்பாசிரியர் :
எஸ். ஜகந்நாராயணன்
88, ராமகிருஷ்ண நகர், சென்னை-28.
1976

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

© எஸ் ஜகந்நாராயணன்
38, ராமகிருஷ்ணா நகர், சென்னை-28

முதற்பதிப்பு: ஜனவரி 1976

MEERA-BAJAN
(Tamil Translation)

அப்பர் அச்சகம், சென்னை-1

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Dr. V. RAGHAVAN, M.A., Ph.D.
Professor of Sanskrit, (Retd.,)
UNIVERSITY OF MADRAS
Jawaharlal Nehru Fellow (1969-70)

7, Sri Krishnapuram Street,
Royapettah,
MADRAS - 600014.

FOREWORD

I have great pleasure in writing a Foreword to one more work of Sri S. Jagannarayanan, the latest on Mira Bai and her songs. He has not only been working on devotional literature but has also, thereby, been contributing to the laudable work of bringing to the Tamil-reading public the great contributions of the North.

The life of Mira Bai is well known in the South through Harikatha, and also through the films. Musicians sing some of her songs at the end of their concerts. Among votaries of the **Bhajan,** more songs of hers are in vogue and it is more so recently with the growth of **Bhajan**-groups in the city.

Mira is one of the brightest stars in the galaxy of the Saint-Singers of India. She was the grand-daughter of Rao Dadauji, Chief of Medta in Rajasthan, was married to Bhoja, son of Rana Sangha of Chitoda, but became widowed early. According to another account, she was the Queen of the better known Rana Kumbha. But it is to the King of Kings that she really became the bride. Her songs frequently refer to a few crucial incidents of her life, the Rana's jealousy and anger against her, and his attempts to kill her by sending her a cup of poison, which, by the grace of her Lord, Sri Krishna, turned into nectar, as also a serpent as girdle. The story is in the recurring pattern seen in the lives of Saints, their struggle in the midst of hostile surroundings, their trials and tribulations, and the sufferings they bore and the sacrifice of everything mundane that they readily made in their consuming love of the Lord and their unbounded faith in Him.

Mira's songs too conform to the nature, style and subject matter of the songs of other Saint-Singers. Rich in

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

poetic quality (see especially the songs on the background of the Seasons), fancies, and imagery and homely analogies (songs 227, 228), the songs depict every phase and stage of the love of God, praise of His qualities, the value of the company of the godly souls (**Satsanga**), longing in separation, despair, finding fault with Him, affirmation of faith in Him, abandonment of all other desires. the different forms of Bhakti like reciting the Lord's Name (**Nama**), **Dasya** (Service), **Saranagati** (Surrender) and laying all the burden at His feet, as also the more excruciating states of the divine passion leading to physical breakdown, madness and near death. Her conduct had naturally become abnormal, like that of all those in holy madness, inviting the derision and calumny of the public.

The songs mention often **Satsanga**, the necessary first step, and reveal also Mira's acquaintance with the whole Bhakti-tradition, its exemplars and its literature. The knowledge of the **Upanishads** (see the reference to their '**Neti Neti**' in song 66), the legends and stories of the **Bhakti**-lore. especially the **Bhagavata Purana**, the Bible of this path, the lives of the Mahratta Saints, Chaitanya, all this makes Mira's outpourings a legitimate and integral part of the literature of the **Bhakti-sampradaya**. They not only embody all the tenets of the School but also form an inspiration to the votaries of the School.

The author has done well to give here the original texts of the songs in Devanagari so that those in the South who use them may pronounce the texts correctly. The Tamil renderings are done in simple style and with a spirit of devotion. The book will be welcomed by votaries of both **Bhakti** and Music.

Madras
2—3—1976

Dr. V. RAGHAVAN

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விண்ணப்பம் (முன்னுரை)

அடியேனுக்கு வடநாட்டில் சங்கீத மேதையாக விளங்கிய பக்த மீராதேவியின் பதாவளிகளைத் தொகுத்து அதன் அர்த்த பாவங்களுடன் சாகித்யங்களையும் அளிக்க வேண்டும் என்கிற அவா நெடுநாட்களாக இருந்தது. மீராதேவியின் பதாவளி ராஜஸ்தானி மொழியில் எழுதப்பெற்றது. இந்த மொழி மிக்க கடினமானது; வழக்கத்திலும் பேச்சு முறைகளிலும் தனிப்பட்டு விளங்கியது. இதைத் தவிர மீராதேவியின் பக்தியனுபவம் ஒரு விதத்தில் சாலச் சிறந்தது. தென்னாட்டில் விளங்கிய ஆண்டாள் மாதிரி இவளும் (மீராதேவியும்) பெண் வடிவத்திலிருந்துதான் நாயகி, க்ருஷ்ணன் நாயகன் என்ற பாவத்தை அடைந்து பதாவளிகளை இயற்றினாள். ஆகையினால், மீராதேவியின் பதாவளிகள் பக்திசமாதியின் உச்சநிலையாகும்.

மீராதேவி வாழ்ந்துவந்த காலம் சம். 1555 - 1560. ராஜஸ்தானில் பிறந்தவள். இவளுடைய சாகித்தியங்கள் கண்ண பெருமானை அடிப்பற்றிக்கொண்டு "கிரிதரநாகர்" என்ற முத்திரையுடன் தன் பெயரான மீராதேவியுடனும் அமைக்கப்பட்டுள்ளன. சிலர் இவள் இளம் வயதில் தன் கணவனை இழந்து போனதால், பக்தி இயக்கத்தில் ஈடுபட்டாள் என்று கருதுகின்றனர். இவளுடைய பிறப்பிடம் ராஜஸ்தானில் மேவார் நாட்டில் உள்ள குர்க்கி என்னும் இடத்திலுள்ளது. இவளுக்குக் கண்ணன் மீது பக்தி மிக இளம் வயதிலேயே ஏற்பட்டிருந்தது. தன் கணவன் காலமானதிலிருந்து இந்த பக்தி வளர்ந்து பெரிதாகி விட்டது. அந்தப் பெரும் பக்தி ஈடுபாட்டினால் ஏற்பட்ட கவிதாவளிகள் மாதுர்ய பாவத்துடன் பக்திபூர்வமாக விளங்கின. ஆகவே ஒரு பதாவளியில் அவள் சொல்கிறாள் :

"எனக்குக் கிரிதர கோபாலைத்தவிர வேறு ஒரு நாதன் கிடையாது. அவனே மயில் இறகை முகுடம் அணிந்து எனக்குப் பதியாக விளங்குகிறான்."

இந்த பக்தி வேரூன்றிப் பெரிய மரமாக வளர்ந்தும் அவளுக்குப் பல இன்னல்கள் சுற்றத்தாரிடமிருந்து ஏற்பட்டன. அவற்றையெல்லாம் மீராதேவி தன் ஆத்ம கதையாகச் சொல்லி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருக்கிறுள். ஒருசமயம் சாதுக்களின் சேர்க்கையின்மூலம் அவளுக்கு மனநிம்மதி ஏற்பட்டபோது; அவள் பல துக்கங்களைத் தன் சுற்றத்தாரிடமிருந்து அடைந்தாள்; அவளுடைய வருத்தம் எல்லை மீறிப் போனதால் கோஸ்வாமி துளசிதாசருக்கு அவள் கடிதம் ஒன்று எழுதினுள். அதற்குத் துளசிதாசர் பதில் அளித்தார். அந்தப் பதில் அவருடைய நூலான வினயபத்ரிகாவில் இடம் பெற்றுள்ளது. துளசிதாசர்:

"எவர்களுக்கு இராமனிடமும் வைதேகி(சீதை)யிடமும் பிரியமில்லையோ, அவர்கள் மிக்க சினேகிதர்களாக இருந்தாலும் உனக்குப் பகைவர்களே ஆவர். அவர்களை நீ அறவே நீக்கிவிட வேண்டும்"

என்று பதில் அளித்தார். ஆகவே, மீராதேவி சாதுக்களின் கூட்டத்தில் நெருங்கித் தொடர்புகொண்டு தன்னிடத்தைவிட்டு அகன்றுள்.

மீராபாயின் அனுபவங்கள் பக்தியின் உச்சநிலையைச் சித்திரிக்கின்றன. அவற்றைக் கொண்ட பதாவளிகளாகப் பாடும்போது சாகித்தியத்தின் கௌரவம், ஞானபூர்த்தி, கோமள பாவம், அந்த பக்தியோகத்தைச் சாதனையாகச் செய்து முடிப்பதற்கு வேண்டிய ஊக்கம், விடாமுயற்சி, காதலின் ஆழ்ந்த பண்பு, விரகதாபங் கொண்ட பெண்ணின் துக்கங்கள் இவையெல்லாம் அனைவர் மனத்தையும் உருக்குவதாக இருக்கின்றன

இவற்றைப் பாடிப்பாடி நாமும் பக்தியின் உச்சநிலையை அடையலாம். ஆகவே, மீராவின் பதாவளிகள் சாதனமாகவும், பக்தியின் முடிவாகவும் இன்றும் என்றும் விளங்குகின்றன. இந்தச் சுய அனுபவக் களிப்பை மீராவைப்போல் நாம் ஏன் அடையக் கூடாது?

மீரா பதாவளியைப் பாடும் ராகமும், வழியும் யாது எனக் கேள்வி பிறக்கும். பழைய மரபுப்படி இசை நெறியில் மீரா பதாவளிகளோ, துளசி பஜனைக் கீர்த்தனைகளோ இப்பொழுது பாடப்படுவதில்லை. இந்த நூலில் இன்னொரு பகுதியில் வட இந்தியராகங்களின் பெயர்களை குறிப்பிட்டிருக்கிறேன். இவற்றில் சில நம் கர்நாடக இசைக்கு ஏற்றவையாக இருக்கின்றன. ஜயதேவர் இயற்றிய கீத கோவிந்தத்தைப் பாடுவதிலும், நமது ராக மரபு, வட இந்திய ராகங்களினின்றும் வேறுபட்டிருக்கின்றது. ஆகவே, அவரவர்களின் மனோதர்மப்படியும், சாரீர வசதிக்கு ஏற்றபடியும் ராகங்களை அமைத்துக்கொண்டு பாடினுல் அதுவே சிறந்ததாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந் நூலைத் தமிழிலும், இந்தியிலும் அச்சிட வேண்டியதாயிற்று. இந்தியில் அச்சிடப்பட்ட பாகம் புதுதில்லியிலுள்ள மஹாஜன்பிரஸ் அவர்களால் அச்சிடப்பட்டது. தமிழாக்கம் சென்னையிலுள்ள அப்பர் அச்சகத்தின் உதவியினால் அச்சிடப்பட்டது. திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆட்சியாளர் உயர்திருவாளர் தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை அவர்களும், பொது மேலாளர் உயர்திரு இரா. கல்யாணசுந்தரனார் அவர்களும் எனக்கு உதவியுள்ளார்கள். எனக்கு இன்னும் பலர் இந்தப் பணியில் உதவி செய்தனர். முக்கியமாக என் நண்பர் அரிமளம் R. சீனிவாசராகவன் அவர்களை நான் குறிப்பிடவேண்டும்; இதற்கு T. V. சுந்தரம் சாரிடீஸ் அவர்களும் சிறிது பொருளுதவி செய்துள்ளனர். மத்திய அரசாங்கத்தின் சிக்ஷா நிலையமும் பொருளுதவி செய்ய வாக்களித்தனர். மேற்கண்ட அனைவருக்கும் நான் கடமைப்பட்டு இருப்பதோடு என் உள்ளார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந் நூல் என் நண்பர்களான T. V. S. நிறுவனத்தைச் சார்ந்த T. S. கிருஷ்ணா அவர்களுக்கும், அவருடைய அன்புள்ள மனைவியார் திருமதி அம்புஜம் கிருஷ்ணா அவர்களுக்கும் எனது ஆழ்ந்த அன்பின் நட்பின் பழமாக அளிக்கப்பட்டது.

38, இராமகிருஷ்ணாநகர், சென்னை-28.
புதன்கிழமை, இராட்சசவருடம்
சித்திரை மாதம் 31-ம் தேதி
14-5-1975
மிருகசீரிடம் அட்சய திருதியை

இப்படிக்கு,
ஸ்ரீநிவாஸ ஜகந்நாருயணன்

சுபம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மீரா பஜன்

அவதாரிகை

இங்கே மீராபாஈ என்னும் பக்தையின் பதாவளிகளைப் பொருளுடன் வழங்கியிருக்கிறேன். ராஜஸ்தானில் வீரம் எவ்வாறு சிறந்ததாகப் போற்றப்படுகிறதோ, அதுபோல மீராவின் பஜனைக் கீர்த்தனங்களும் போற்றபடுகின்றன.

மீராவின் பிறந்தநாள் இன்றும் சரிவர யாருக்கும் தெரியாது; அதுபோல, அவளுடைய வாழ்க்கை வரலாறும் சரிவரத் தெரியவில்லை. மிச்ரபந்து, ஆசாரியர் ராமசந்திர சுக்லர் போன்றவர்கள் சம்வத்சரம் 1573 - ல் இவள் தோன்றினாள் என்று சொல்கின்றார்கள்; இன்னும் சிலர் சம்வத்சரம் 1555 என்றும் சம்வத்சரம் 1550 என்றும் சம். 1560 என்றும் வாதிக்கின்றனர். மீரா ராணா கும்பரின் மனைவி என்று பொதுவாகச் சொல்லப்பட்டாலும் அதன் முழுவிவரங்கள் நமக்குக்கிடையாது. சித்தூரில் கும்பராணாவினால் 1505-ல் ஒரு கோவில் கட்டப்பட்டது; அதற்குப் பக்கத்தில் சிறிய கோவில் ஒன்று மீராவின் கோவில் என்று சொல்லப்பட்டு வருகிறது. அதன் காரணமாக, கர்னல் டாட் (Tod) என்பவர் மீராவை கும்பராணாவின் பத்தினி என்று சாதிக்கிறார். இதை மறுத்து, முன்ஷி தேவி பிரசாத் என்பவர் ஆதாரம் காட்டியிருக்கிறார். கும்பராணா கி.பி. 1467-ல் போரில் கொல்லப்பட்டார். மீராவின் தாத்தா Duda மேர்த்தா (Merta) (near Jodhpur) என்னும் இடத்திற்கு அரசரானார். மீராவின் தந்தை ரதன்சிங் என்பவர் 59 வருடங்களுக்குப் பின் நடந்த (சம். 1573) (A. D 1510) கண்வா போரில் கொல்லப்பட்டார் என்றும், போஜராஜன் என்பவருக்கு அவள் மணம் செய்விக்கப்பட்டாள் என்றும், மாற்றுவிபரங்களையும் காணலாம். மீராவின் பிறந்த வருடம் A.D 1494 (சம். 1555); இறந்த வருடம் A.D 1546 (சம். 1603). இறந்த இடம் துவாரகை என்று சிலர் ஆதாரபூர்வமாகக் காட்டியுள்ளார்கள். துவாரகையில் பல வருடங்கள் தங்கியதாகவும், அங்கேயே இறந்ததாகவும் சொல்லுகிறார்கள்.

மீராவும் துளசிதாசரும்

மீராவும் துளசிதாசரும் சமகாலமென்றும், துளசிதாசருக்கு ஒரு கடிதம் மீரா எழுதினாள் என்றும் சொல்லப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படுகிறது. சொந்தமக்கள் (உறவினர்கள்) அவளைத் துன்புறுத்தினர் என்றும், சாதுக் கூட்டத்தையே அவள் விரும்பியதாகவும், அவர்களே தன் அன்னை தந்தைக்குச் சமானமானவர்கள் என்றும், அந்தக் கடிதத்தில் எழுதப் பட்டதாகவும் வரலாறுகள் வழங்குகின்றன. இதற்குத் துளசிதாசர் பதில் அனுப்பியதாகவும், இராமனும் வைதேகியுமே எல்லோருக்கும் அன்னையும் தந்தையுமாவர் என்றும், அவர்களே மங்களகாரிகள் என்றும், எழுதியதாகப் பதாவளி ஒன்றை ஆதாரமாகக் காட்டுகிறார்கள். (விநயபத்ரிகா)

மீராவும் அக்பரும்

மீராவின் பக்தியைக்கேட்டு அக்பரும், பிரபல சங்கீத சிரோன்மணி தான்சேனும் மாறுவேடத்தில் வந்து மீராவின் இசையைக் கேட்டதாகச் சொல்கிறார்கள். மீராவின் பதாவளி ஒன்றில், ''லென்பரசோ அக்பர் ஆயோ, தான்ஸேன் கோஸாத்,'' ராகம் ''தான்'' இதிஹாஸ் ஸ்ரவண்கரி, நாங் நாங் சிரிமாத் மீராகே பிரபு கிரதர் நாகர், கீன்ஹாம் மோஹி ஸநாத்'' என்று காணப்படுகிறது. இந்தச் சந்திப்பை ''பிரியாதாஸ்'' என்பவரும் எழுதியிருக்கிறார்.

மீராவின் உண்மைக் கதை எவ்வாறிருப்பினும் மீராவின் பக்தி பல மேதைகளால் புகழப்பட்டுக் கவிதை வடிவில் விளங்குகிறது. மீரா ''பாஈ'' என்கின்ற பதத்தில் ''பாஈ'' என்கிற ஒலிவழக்கு கபீர் தாசரால், மீராவின் குரலாக, ''பரமாத்மா அல்லது ஈச்வரரின் பத்னி,'' என்று பொருள் படும்படி சில தோஹாக்களில் இயற்றப்பட்டது என்று டாக்டர் படத்வால் என்பவர் சொல்லுகிறார். அவளுடைய பக்தி தெய்வீகமானது; தன்னையே கிரிதரநாகரின் பத்தினியாக ஆக்கிக் கொண்டாள். மீரா என்னும் சொல்லிற்குப் பல கவிஞர்கள் பல பொருள்களை அளித்திருக்கிறார்கள்.

இவ்வளவு விவாதங்களுக்குப் பின்பு தெளிவாகச் சில செய்திகள் தெரியவருகின்றன. அவளுடைய திருமணம் 1573 - ல் (கி. பி. 1512-ல்) மேவாட் மகாராணு ஸாங்கா என்பவரின் மூத்த புதல்வர் கும்பர், போஜ்ராஜ் என்பவருடன் ஏற்பட்டது. அவள் ஒரு கண்ணன் விக்கிரகத்துடன் வந்ததாகவும், கிராமிய கணவன் - மனைவி வாழ்க்கையில் ஈடுபடவில்லை என்றும் சிலர் சொல்கிறார்கள். இன்னும் சிலர் அவளுடைய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கணவர் சம். 1570-ல் இயற்கையாக இறந்ததாகவும், அவள் விதவையானுள் என்றும், அதனுல் வைராக்கியம் ஏற்பட்டதாகவும் சொல்கிருர்கள். இவளுக்கு யார் குரு என்பதிலும் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருக்கிறது. அவளுடைய பதாவளிகளில் "ரைதாஸ்" என்பவரைக் குறிப்பிடுகிருர். இன்னும் சிலர் துளசிதாசரையும், விட்டல்நாதி என்பவரையும், ஜீவகோஸ்வாமி என்பவரையும் குறிப்பிடுகிருர்கள்.

மீராவின் துக்கங்கள்

உண்மையாகவே மீரா கும்பராணுவினுல் ஏற்படுத்தப்பட்ட துக்கவேதனைகளை அனுபவித்தாளா? பல பதாவளிகளில், ராணு நஞ்சு கொடுத்ததாகவும், கயிற்றினுல் கட்டிப் போட்டதாகவும், பாம்பைக் கடிக்கச் சொன்னதாகவும் நாம் காண்கிருேம். இவ்விதம் துன்பங்களைக் கொடுத்த ராணு யார்? நாடோடி மக்கள்,"மீராவின் கணவன் போஜராசனுக்குப் பின்பு பட்டமேறிய மேவாட் அரசன் விக்கிரமாதித்யன்' என்று சொல்லுகிருர்கள். (அவளை மீண்டும் திருமணம் செய்து கொள்வதற்கு ஏற்படுத்தப்பட்ட இன்னல்களான உபாயங்கள் என்று சொல்லுகிருர்கள்). ஆனுல், சாதுமக்கள் இதை ஒப்புக் கொள்ளவில்லை.

பின்பு மீரா ஏன் மேவாடைவிட்டுத் துவாரகை சென்ருள்? வரலாற்று ஆய்வாளர்கள் ராணு மாளதேவ் என்பவர் சம். 1565-ல் மேவாடைக் கைப்பற்றிய படியால் மீரா பிருந்தாவனத்திற்குச் செல்ல நேர்ந்தது என்கின்ருர்கள். அங்கேதான் கண்ணனைப் பற்றிப் பல பாடல்கள் இயற்றப்பட்டன என்று கவிகள் சொல்கிருர்கள். இங்கேதான் ஜீவகோஸ்வாமியை மீரா சந்தித்தாள் என்று சொல்கிருர்கள். (ஜீவகோஸ்வாமி பெண்களைப் பார்ப்பதில்லை என்கிற விரதம் கொண்டவராகவும், அதற்குப் பதிலாக, மீரா மதுராபுரிவாசிகளுக்குக் கணவன் கண்ணன் தானே என்றும், அனைவரும் பெண் குடிமக்களே என்றும் சொன்னதாகச் சொல்கிருர்கள்.) இந்தப் பதிலைப் பார்த்த கோஸ்வாமி வெறுங்காலுடன் மீராவைச் சந்திக்க ஓடிவந்தார் என்று சொல்கிருர்கள். மீரா சம். 1600 - ல் பிருந்தாவனத்தை விட்டுத் துவாரகை சென்றதாகவும் மீராவின் ஒன்று விட்ட தம்பி மீண்டும் எதிரியிடமிருந்து மேவாடைக் கைப்பற்றியதாகவும் சொல்லுகிருர்கள். அவனுல் பல தடவைகள் மீரா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அழைக்கப்பட்டும், மீரா துவாரகையை விட்டு, மேவாடை மீண்டும் அடைய விரும்பவில்லை. ராணு கட்டாயப்படுத்தினுர். இதற்கு மீரா ஒரு பதாவளியைக் கவனம் செய்து பதில் அனுப்புவித்தாள் என்று சொல்லப்படுகிறது. மீராவுக்கு எவ்விதம் இறப்பு ஏற்பட்டது என்பதும் ஆராய்ச்சிக் குரியதாக இருக்கிறது. அனைவரும் அவளுடைய இறந்த ஆண்டு சம்வத்சரம் 1630 (கி. பி. 1569-ல்) என்று முடிவு செய்துள்ளார்கள்.

மொத்தத்தில் மீரா சம். 1560 - ல் ராஜஸ் தானில் குட்கி என்கிற இடத்தில் பிறந்தாள். தூதாஜிக்குப் பெயர்த்தியும் ஜோத்பூரின் ராணு ரத்னசிங்கிற்கும் புதல்வி யாகவும் பிறந்தவள். சம். 1573 - ல் மேவாட் ராஜபுத்திரன் போஜராஜனை மணந்தாள். கணவன் இறந்தபின்பு, மீரா வின் மனம் உடைந்து போய்விட்டது. பின்பு வைராக்கிய மனப் பான்மையுடன் வாழ்ந்து வந்ததாகவும், கண்ணன் பக்தியையே ஆதாரமாகக்கொண்டு, வாழ்க்கையை நடத்தியதாகவும் தெரியவருகிறது. மேவாடின் ஆட்சி வேறொரு ராஜபுத்திரருக்கு மாற, மீரா பிருந்தாவனம் போக நேர்ந்தது. அங்கிருந்து அவள் துவாரகை சென்று பல ஆண்டுகள் தங்கிய பின்பு உயிர் நீத்தாள் என்று தெரிய வருகிறது.

மீராவின் கவிதைகள் (பதாவளிகள்)

தன்னை ஜோகீ(யோகீ) என்று பல தடவைகள் பல கவிதைகளில்சொல்லிக்கொள்கிருள். பக்தியை யோக மார்க்க மாகக் கடைப் பிடிப்பவள் என்று தன்னை அறிவித்துக் கொள் கிருள். அதனுல் இவளுடைய கவிதைகளை "நாத்" சம்பிரதாயத் தவர்களும், "சந்த" சம்பிரதாயத்தவர்களும், "வைஷ்ணவ" சம்பிரதாயத்தவர்களும் ஒப்புக் கொள்கிருர்கள். "மஹா விசுவாசம்" எனப்படும், பகவானிடமுள்ள நம்பிக்கை கலந்த துக்கங்களை அனுபவிப்பவளாய், தன்னை ஒரு 'விரகிணி' (பிரி வாற்ருமையால் வருந்தும்) ஆத்மாவாகப் பாவிப்பதால், தனக்குப் பெருமகிழ்வு ஏற்படுவதாக அவள் கற்பித்துக் கொண்டிருக்கிருள். இந்தத் துக்கங்களினுல் ஏற்பட்ட அனுப வங்களைச் சொல்வதே அவளுடைய கவிதைகள். அவளுடைய ஆராதனை மூர்த்தி "கிரிதர் நாகர்," கண்ணனுகவே இருந்தது. கண்ணனைப் பல பெயர்களால் அழைக்கிருள், (எ-டு.) பிரியத மன் ஜோகியா ரமேயா, கிரிதர் கோபால், "மன்மோஹன்"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்கிற பெயர்களை "நாத்" சம்பிரதாயத்தார் ஒப்புக்கொள்கிருர்கள். "ரமேயா" என்கிற பெயரை (ராம், ரமேயா, அவிநாசி, ஹரி,) "சந்த" சம்பிரதாயத்தைச் சார்ந்தவர்கள் ஒப்புக் கொள்கிருர்கள். சிரவணம், கீர்த்தனம் போன்ற ஒன்பது வழிகளால் அரிபக்தி செய்ய விரும்பும் வைணவ சம்பிரதாயத்தார்கள் மீராவின் கவிதைகளில் ஒன்பதுவித பக்தி நெறியைக் காண்கிருர்கள்.

மீராவின் பக்திக் காதல்

நாயகநாயகீ பாவம் இயற்கையாகவே மீராவிடம் பொருந்தியுள்ளது. தமிழ்நாட்டின் ஆண்டாளைப் போல மீராபாஈ விளங்குகிருள். மீரா தன்னைக் கண்ணனின் காதலியாகப் பாவித்து, இயற்கையான காதல் ஆர்வத்துடன், எளிமையான வசனங்களால் தன்னுடைய காதலுணர்வை வெளிப்படுத்துகிருள். "ராமசந்திர சுக்லா" என்பவர் சொல்கிருர், "கபீர்தாசர் கூடத் தம்மை இராமனுக்குப் பெண்ணுகப் பாவனை செய்து கவிதைகளை இயற்றினுர். ஆனுல் மீராவின் கவிதைகளில் காணப்படும் கவிதை நயங்களும், இயற்கையான காதலன்பும், சொற்களின் எளிமையும், கபீர்தாசரின் சுலோகங்களில் காணப்படுவதைவிட மிகுதியாக இருக்கின்றன. இதற்குக் காரணம் மீரா இயற்கையாகவே கண்ணனுக்குகாகவே "பெண்ணுகப்" படைக்கப் பட்டாள். அதனுல், அவளுடைய கவிதைகள் இனிமையுடையனவாகவும், சிருங்கார நிறைவாகவும், பதியன்பில் உச்சநிலையை அடைவதாகவும் இருக்கின்றன. பதியன்பும் பக்திசாரமும் ஒருங்கே சேர்ந்து, மீராவின் இசை மிக்க இனிமையாக விளங்குகின்றது. பிறர் கவிதைகளில் இவை அருகியே காணப்படுவன.

மீராவின் சாகித்திய சங்கீத மேன்மை

மீராவின் சாகித்தியம் மிக்க இனிமையாக இருக்கிறபடியால், சங்கீதத்திற்கு மிக்க பயன்படுகிறது. சாகித்தியத்திற்கும் சங்கீதத்திற்குமுள்ள இயற்கையான நேச உறவை வெளிப்படுத்துவதில் மீராவின் கவிதைகள் மிக உன்னதமாக இருக்கின்றன. கண்ணன் பக்திக் கவிதைகளில் சங்கீத மதிப்பு மிக்கிருந்தபோதிலும், கீதகோவிந்தத்திற்குச் சமமாக மீராவின் கவிதைகள் இனிமையிலும் பொருள்பொதிவிலும் சிறந்து விளங்குகின்றன. சொல்மைப்புகள், ஒலிநயங்கள், இசைவகைகளுக்குத் தகுந்தவாறு பயன்படுத்தப்பட்டிருப்பதால், மீராவின் கவிதைகள் மிகச் சிறப்பாக விளங்குகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இயல் இசை நாடகம் ஆகிய மூன்றுக்கும் பயன்படும்படி சாகித்தியமும் சங்கீதமும் மேன்மையாக விளங்குகிறது. எடுத்துக் காட்டாக டாக்டர் சகுந்தலா துபே என்பவர்கள் சொல்வதைக் கவனிக்கவும், "சூர்தாஸ், கபீர், துளசி, மீரா ஆகியோர் அனைவருமே உள்ளத்துணர்ச்சிகளின் அனுபவங்களை எழுதினர்; ஆனால், ஒவ்வொருவருடைய அனுபவங்கள் ஒவ்வொரு முறையில் சிறந்து விளங்குகின்றன எனச் சொல்லலாம். பக்தனுடைய பாரதந்திரிய (அனுரூப) உணர்ச்சிகளின் தீவிரம் பகவானுடைய உண்மைவடிவத்தைக் கற்பனை செய்வதில் மீராவின் வாயிலிருந்து வரும் சொற்கள் உச்சநிலையை அடைகின்றன; ஆதலால் பாவனை உணர்ச்சிகள் சிறந்திருக்கின்றன." கபீர் தம்முடைய கவிதைகளில் தம் மெய்யுணர்வனுபவங்களைச் சொல்லியிருக்கிறார். வித்யாபதி என்னும் இந்திக் கவிஞர் தம்முடைய காதலுணர்வின் அனுபவங்களைச் சித்திரித்திருக்கிறார். சூர்தாஸ் மனோபாவத்தையும் இசையையும் இணைத்து, இனிமையாக விளக்கம் செய்திருக்கிறார். துளசிதாசரோ, ஆத்மவிசாரதத்துவத்தில் மூழ்கி, தம்முடைய சொந்தக் கருத்துகளைத் திட்டப்படுத்தியிருக்கிறார். மீராவோவெனில் இவர்கள் அனைவருடைய சிறப்புகளையும் ஒருங்கிணைத்து, தன் கவிதைகளால் தன் கருத்துகளையும் அனுபவங்களையும் காதலன்பின் தீவிர உணர்ச்சிகளையும் விவரித்திருக்கிறாள். இவளுடைய கவிதைகளில் ஒவ்வொரு சொல்லும் இசைமயமாக இருக்கிறது. தன் ஆத்மகதையுடன், மெய்யுணர்வுண்மைகளையும் அவள் வெளிப்படுத்துகின்றபடியால், இராகமும் இசையும் பாவ உணர்ச்சிகளுடன் மேம்பட்டு விளங்குகின்றன.

ராக வரிசைகள்

அவளால் இயற்றப்பட்ட பதாவளிகளின் ராக இசைகள் ராக வரிசைகளில் இதுதான் சரியான ராகம் என்று சொல்லுவதற்கில்லை. எல்லாவகையான ராகங்களும் ராகினிகளும் காணப்படுகின்றன. சூர்தோஸ் கவிதைகளில், 87 ராகங்கள் காணப்படுகின்றன. மீராவின் கவிதைகளில் அனேக ராக ராகினிகள் காணப்படுகின்றன. உதாரணமாக, திலங்கு, லலித், ஹமீர், கன்னடா, திரிவேணி, கூர்ஜரி, நீலாம்புரி, முல்தானி, மால்கோஷ், காமோத், ஜெஞ்ஜோட்டி, படமஞ்சரி, குணகலி, மாண்டு, தாணி, பீலு பர்ப்பா, பூரிகல்யாண், கமாஸ், அக்நாபஹாடி, ஜான்புரி, ஸோஹ்னி, பிலாவல், பீஹாக், ஸாரட் ஸூக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸாரட், ச்யாம் கல்யாண், ராம்கலி, தர்பாரி, மலாஹர், பீஹாகி, கனுஸ்ரீ, ஜோகியா, ஹோலி, பாகேஷ்வரி, ஆனந்த பைரவி, பைரவி, தோடி, அசாவேரி, சாரங்கா, கலிங்டா, பரேஸ், காபி, பிரபாதி, தடார், ஹமீர், இவை போன்றவை. இவைகளின் பெயர்கள்தாம் எனக்குக் கிடைத்தன; எந்த எந்த உருப்படிகள் எந்த எந்த ராகத்தில் பாடியிருக்கிறாள் என்பது பூராவும் எனக்குச் சரியாகக் கிடைக்கவில்லை. பலபேர்களைக் கேட்டுவிட்டேன். சில ராகங்கள் சில பதாவளிகளுக்கு சம்பிரதாயமாகப் பாடப்படுகின்றன. இவையும் காலத்தின் போக்கில் மறைந்து போயிருக்கின்றன. ஆகவே அவரவர்கள் தங்கள் குரலின் அமைப்புப்படி, மனோபாவப்படி, ரஸபாவங்களைக் கவனித்துப் பாடவேண்டியதே என்றாலும், ப்ராசீன சம்பிரதாய மார்க்கத்தில் வருபவர்களைக்கேட்டு அறிவது நலம். சிலவற்றை நான் கொடுத்திருக்கிறேன்.

மீராபாஈ மிக்க திறமையாகச் சொற்களையும் ராகங்களையும் ராக பாவ மூர்ச்சனைகளுக்குத் தக்கவாறு மாற்றியிருக்கிறாள். எடுத்துக் காட்டாக, எழுத்துகளாகிற "ঢ়" (ட), ரே, ரீ என்பவற்றை இரசிப்புணர்ச்சியினால் அமைத்திருக்கிறாள். "மீராரே பிரபு கிரிதர்நாகர், ஆஸ்கஹியாம் தேஸரஞரி ஆதி" என்று சொல்லி யிருப்பதைக் கவனிக்கவும். அனுசுவரங்களையும் அனுபவமான தீர்க்க சுவரங்களையும் பயன்படுத்தியிருக்கிறாள்.

எடுத்துக் காட்டு :— ஸபதாம், ஸாஜனதாம், மேரிசகியாம்,
காம் பாம், மீடோ தாரோ பஹாரன்,

சில உயர்ந்த பதாவளிகள் இப்புத்தகத்தில் காணப்படும் வரிசை எண்களில் காணலாம் :

உதாரணங்கள் :— 9, 18, 19, 22, 25, 31, 42, 47, 56, 63, 73, 90, 96, 101, 107, 119, 122, 135, 153, 156, 168, 171, 180, 181, 191, 217, 225, 227, 230, 236, 243.

இப்பொழுது மீராவின் பஜனைக் கவிதைகளைப் (பதாவளிகளைப்) பாடி இன்புறுங்கள்.

முற்றியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மீரா பஜன்

சில பதாவளிகளுக்கு ப்ராசீனமாகப் பாடப்படும் ராகங்களையும், தாளங்களையும் காட்டியிருக்கிறேன். இவைகளில் சிலவற்றுக்கே எனக்குக் கிடைத்தன. மற்றவைகளுக்குக் கிடைக்கவில்லை.

பதாவளி எண்	ராகம்	தாளம்
6	நீலாம்புரீ	கஹர்வா
9	ஸ்ரீரஞ்சினி	தீன் தாள்
10	மாண்டு	தீன் தாள்
23	ஸோஹனீ	கஹர்வா
26	தேச்—விளம்பித்	தீன் தாள்
49	மாண்டு	தீன் தாள்
51	பீலூபர்வா	கஹர்வா
75	திலக்காமோத்	தீன் தாளம்

இந்தப் பதாவளி கிருஷ்ணனைத் தரிசனம் அடைந்து பின்பு, ஏன் என்னை விட்டுச் சென்றாய்? மீண்டும் வர வேண்டும் என்கிற பிரார்த்தனையாகும்.

பதாவளி எண்	ராகம்	தாளம்
76	பிஹாக்	தீன் தாள்
77	பிலாவத்	கஹர்வா
94	பூரியாகனுஸ்ரி	தீன் தாள்
109	கௌட்மலார்	சர்சரீ
110	லாவணீ	கஹர்வா
111	பீலு	கஹர்வா
116	லாவணீ/கல்யாண்	தீன்தாள்
117	சாரங்க	தாத்ரா
119	ஆனந்தபைரவி	தீன் தாள்
122	பேச்ஸாரீ	தீன் தாள்
128	தேஷ்	தீன் தாள்
131	தோடி	தீன் தாள்
132	சுகல்பிலாவல்	தீன் தாள்
133	அசாவேரி	தீன் தாள்
134	பஹாடி	கஹர்வா
135	தேஷ் விலம்பத்	தீன் தாள்
139	பூரியாகல்யாண்	தீப்சந்தி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

143	கோஸீ	தீன் தாள்
144	சாயாத்தோடி	தீன் தாள்
147	தேஷ்	தீன் தாள்
151	குஜ்ஜரி/கூர்ஜரி	கஹர்வா
160	கானீ	தீன் தாள்
161	கானீ	தீன் தாள்
165	சாரங்க	கஹர்வா
170	பிஹாக்	தீப்சந்தீ
178	ஸிர்தாஸி மலார் (மத்யலயம்)	தீன் தாள்
188	தேஷ்	கஹர்வா
194	பிலாவல்	கஹர்வா
219	ஜோன்புரீ	தீன் தாள்
242	மிஸ்ரகாபீ	தீன் தாள்

(இதை மஹாபிரபு சைதன்யதேவர் அடிக்கடி பாடுவாராம்.)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிழைதிருத்தம்

1) 94 ஆம் பக்கத்தில் 206 எண்ணுள்ள பத்தியில் 3 ஆவது வரிக்கு மேல் சேர வேண்டிய சில வரிகள் விடுபட்டுள்ளன. எனவே 206 ஐயும் 207 ஐயும் ஒன்ருக்கி 206 என்றே வைத்துக் கொள்ளவும். விடுபட்டுள்ள பகுதி கீழே தரப்பட்டுளது. அதனை 207 எண்ணுள்ள பத்தியின் கீழ்ச் சேர்த்துப் படித்துக் கொள்ளவும். அப் பகுதி வருமாறு :

"ஒரு நாள் கிருஷ்ணன் திருட்டுத் தனமாக என் பின் வந்து என் தலையின்மீதிருந்த சும்மாட்டையும், மண் பானையையும் கீழே தள்ளி, என் புடைவையைப் பிடித்து இழுத்தார். எனக்கு வெட்கம் தாங்க முடியவில்லை. ஆனால், என் பிரபு அற்புதமான ரசிக சிரோன்மணி; நாகரீக முள்ளவர்; சாமர்த்திய முள்ளவர்; மீரா சொல்கிருள் : "என் பிரபு கிரிதர நாகர்; அவருடைய திருவடித் தாமரைகளை அடி பணிந்து என் தலையில் வைத்துச் சுட்டிக் கொண்டேன். அவரை நான் சரணடைந்து விட்டேன்"

அடுத்து 207 ஆம் பத்தியை 208 எனவும் 208 ஆம் பத்தியை 209 என்றும் தொடர்ந்து மாற்றிக் கொள்ளவும். அப்படி மாற்றுவ தால் 242 என்பது 243 ஆகும்.

2) 17 ஆவது பதாவளியின் மொழியாக்கம் 18 ஆவது இந்தி பதாவளிக்கு உரியதாகும். 18 ஆவது பதாவளியின் மொழியாக்கம் 17 ஆவது இந்தி பதாவளிக்கு உரியதாகும். எனவே இவற்றை முறையே திருத்திப் படித்துக் கொள்ளவும்.

3) இந்தி பதாவளியின் எண்கள் சில தவருக அமைந்துள்ளன. அவற்றைக் கீழ்க்காணுமாறு திருத்திப் படித்துக் கொள்ளவும் :

பக்கம்	பிழை	திருத்தம்
24	68	69
,,	69	70
,,	70	71
,,	71	72
,,	72	73
,,	73	74

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

*மீரா பஜன் (பதாவளிகள்)

ஏ மூடமனமே, ஸ்ரீ லோலுடன் ஸ்ரீ ஹரிபகவானுடைய திருவடிகளில் (சரண கமலங்களில்) விழுந்து வணங்கி, எப்பொழுதும் அவனையும் அவனுடன் கூடிய திருமாமகளையும் நினைப்பாயாக. இந்தப் புனிதமான திருவடிகள் மிகவும் அழகானவை ; தீவினையால் ஏற்படும் வெம்மையால் வாடுபவர்களுக்கு அவர்களுடைய துன்பங்களை அகற்றி அவர்களுக்குக் குளிர்ச்சியைத் தரவல்ல மேன்மை வாய்ந்த திருவடிகள் ; மென்மை வாய்ந்த மலர் போன்று மென்மை வாய்ந்தவை ; எளிதில் எய்தக் கூடியவை ; வாழ்க்கையில் ஏற்படும் மூவகைத் துக்கங்களாகிய ஆதி ஆத்மிக, ஆதிதைவிக, ஆதி பௌதிகத் துன்பங்களை நீக்கவல்ல சஞ்சீவினி மருந்து ; இந்தத் திருவடிகளைப் பற்றியே பக்தபிரகலாதன் இந்திரனுக்கு ஒப்பாக உயர்வற உயர்ந்த நிலையை அடைந்தான் ; இந்த அரியின் திருவடிகளைப் பற்றியே துருவன் என்கிற சிறுவன் என்றும் நிலைபெற்ற - அழியாத நிலையை எய்தினான். இந்தத் திருவடிகளே, அவற்றை நாம் பற்ற மறந்தாலும், நம்மை விடாது ; ஹே மனமே, உன்னைப்போல அனைத்துயிர்களுக்கும் அந்தத் திருவடிகளே தஞ்சம் ; உலகிலுள்ள எல்லா வகையான உயிர்களுக்கும் எல்லாவகைப் பொருள்களுக்கும், ஒரு பற்றுக்கோடும் இல்லாமல் தவித்துக் கொண்டிருப்பவர்களுக்கும் பெருமை வாய்ந்த அவனுடைய திருவடிகளே புகலிடம் அளிப்பன. ஏன் என்று கேட்பாயானால் அதற்குக் காரணம் சொல்கின்றேன், மீண்டும் கேட்பாய் மனமே! இந்தப் புனிதமான திருவடிகளே எல்லா அண்டங்களையும் படைத்துக் காக்கின்றன. இந்தப் பெரிய அண்டங்கள் அரிபகவானுடைய நகங்களிலிருந்து தலைவரை பரவியிருக்கின்றன. அத்தகு சிறந்தபேறுகளை அளிக்கும் திருவடிகளே காளிங்கன் என்னும் பாம்பின் தலைகளின்மீது ஏறி நடனம் செய்தன. இந்தத் திருவடிகளே கோபிகைகளுடன் இன்பக் களியாட்டங்கள் நடத்தின ; இந்தப் புனிதமான திருவடிகளே கோவர்த்தன மலையைத் தாங்கி, இந்திரனுடைய செருக்கை அடக்கி. அவனைப் பணியும்படி செய்தன (ஆகவே நீயும் அவ்விதமாக அபிமான மடையாதே) பக்தியில் ஈடுபடு.

---

*குறிப்பு: ஒவ்வொரு பதாவளிக்கும் அர்த்தம் எண்ணிக்கை வரிசைபாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

[என் ஈஸ்வரி, மீராதேவி சொல்கிருள் :]

"பேரன்பு நிறைந்த கிருஷ்ண பகவானுடைய திருவடிகளுக்கு நான் ஓர் அடிமை. இந்தத் திருவடிகளுக்கு விலை கொடுத்து வாங்கப்பட்ட அடிமையைப் போலப் பணிந்து நிற்கும் அடிமை. இந்தத் திருவடிகளின் உதவியே அடிமை மீராவுக்கு அவசியம். லால் (சிவப்புநிறமுள்ள கைகள், திருவடிகள், கண்கள், உதடு,) கிரிதர கோபாலன் எனக்கு ஆழமானதும், கம்பீரமானதும், யாவராலும் எளிதில் தாண்டப் படக் கூடாததும், எக் காலத்திலும் எந்தப் பிறவியிலும் துக்கங்களையும் மனக்கவலையையும் விளைவிக்கக் கூடிய, இந்த சம்சாரக் கடலுக்கு, அதை எளிதில் தாண்டவைக்கும் ஓடம், ஓடக்காரன்போல இருக்கிருர்." அந்தப் புனிதமான திருவடிகளை, ஏ மூடமனமே, நீ உறுதியாகப் பற்றுவாயாக. [மீராபாய் சம்சாரிகளுக்கு அறிவுறுத்துவதற்காகத் தன் மனத்தை நோக்கி, உபதேசம் செய்கிருள்.] (நம்மாழ்வாரும் தமது மனத்தை நோக்கியே உபதேசம் செய்தார்.)

[இவ்விடத்தில் மீராதேவியின் கணவனை ராணுவையும் நினைத்து அவருக்கு உபதேசமாகவும் கொள்ளலாம் ராணு தம் மனைவியைப் பக்தி நெறியிலிருந்து விடுவித்து உலகியல் பெண்ணைப்போலக் கொண்டு சிற்றின்பங்களை அனுபவிக்க விரும்பினுர் ; பல இடைஞ்சல்களையும் துன்பங்களையும் விளைவித்தார் ; அவற்றைப் பொருட்படுத்தாமல், மீராபாய் தன் மனத்திலே உறுதியாகக் கிருஷ்ணனையே வணங்கி, அவரையே ஒரே மனமாக "பதியாக" மணந்து வீடு பேறடைந்தாள். இதன் நினைவினுலே, "மனமே" என்கிற சொல் தன் மனத்தையும், தன் பூலோகமண வாழ்க்கையில் நேர்ந்த கணவன் ராணுவையும் குறிக்கும்.]

ஏ ராணு, நீ என்னை வற்புறுத்திக் கிருஷ்ணனுடைய திருவடிகளை மறக்கும்படி தூண்டுகிருய் ; அந்தப் புனிதத் திருவடிகளுக்குப் பணிசெய்ய முடியாதபடி பல இன்னல்களை விளைவிக்கிருய் ; ஆனுல், நான் கிரிதர கோபாலனுடைய திருவடிகளுக்கு என் மனத்தைப் பறிகொடுத்து விட்டேன். என்னை மீட்கமுடியாது அந்தக் கிருஷ்ண பரமாத்மாவினுடைய சரணங்களிடம் எனக்கு மிகுந்த காதல்; அவையே எனக்கு வழிகாட்டி ; அவற்றுக்காகவே என் அழகும், வாழ்க்கையும், உயிரும்; "ஸத்குரு" என்கிற என் குருநாதர் என் உள்ளத்திற்குக் கண்ணுடியில் தம் அழகைக் காணும்படி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனக்கு உபதேசித்தார். நான் அவரால் உள்ளொளியாகிய பேரறிவை (ஆத்ம ஞானத்தை) அடைந்தேன். இப்போது நான் சலங்கைகளைக் கால்களில் அணிந்து கொண்டு, கிரிதர கோபாலன் முன்பு நாட்டியமாடுவேன். எனக்கு மற்ற சிங்காரங்கள், அழகு ஒப்பனைகள் தேவைப்படவில்லை. இரத்தின மாலைகளை அணிவது, கஸ்தூரி போன்ற வாசனைத் திரவியங்களை அணிவது, வளைகள் ஆபரணங்களை அணிவது, இவற்றை நான் நீக்கிவிட்டேன் இப்போது எனக்கு இயற்கையாக ஏற்படும் சுவை, இயற்கையான சுபாவம், மனவிருப்பம் அனைத்தையும் இழந்துவிட்டேன். பிறர் மனத்தில் ஏற்படும் உணர்ச்சிகளை நான் அறிய இயலாமல் போனாலும் என் விருப்பங்களை நான் நன்கு அறிவேன்.'' ஏ ராணா, நீர் நன்ருகக் கேளும். இப்போது எனக்கு, அரண்மனை, இல்லம், வசிப்பதற்கென்று ஓர் இடம்கூடத் தேவை இல்லை. கோட்டை சூழ்ந்த பெரும் மாளிகைகூடத் தேவை இல்லை. பட்டாடைகளும் எனக்கு அவசியம் இல்லை. மிகுந்த பக்தி வெறியுடன் எங்கு வேண்டுமானாலும் அலைவேன், திரிவேன், என்னைச் சித்திரவதை செய்தாலும், நான் என் விருப்பத்தை மாற்றமாட்டேன்.

குறிப்பு : 1. ''ஸத்குரு'' ''ரம்தாஸ்'' என்பவரைச் சொல்லப்படுகிறது. அவர்தாம் ஞானத்தை அளித்தார் என்று சிலர் சொல்லுகிறார்கள்.

2. வேறொரு பாடாந்தரத்தில், ''நான் இந்த அரண்மனையில் தங்கமாட்டேன். முத்துமாலை, சந்தனம் அணிய மாட்டேன். என் குருநாதர் எனக்குப் போதித்துவிட்டார். இதோ நான் போகிறேன்., தெருத்தெருவாக நாட்டியம் ஆடுவேன். கிரதர கோபாலனைப் புகழ்ந்து பாடுவேன். அவனுடைய நாமத்தை அடிக்கடி புகழ்ந்து பாடுவேன். சாதுக்களின் கூட்டத்தை அடைவேன். அரியினுடைய குணக் கடலில் மூழ்கி நீந்துவேன். மீராவினுடைய பிரபு கிரிதர கோபாலன், கிரிதரநாகர்: பிறப்பு இறப்புக் கொத்துக்களை வேருடன் பிடுங்கி எறிவேன்.''

3. யார் போதித்த போதிலும், நான் பக்திநெறியிலிருந்து நழுவமாட்டேன். என்னிடம் அவர்கள் ஒரு பேச்சுப் பேசினுல், நான் அவர்களுக்கு ஆயிரம் பதில் சொல்வேன். என் மாமியார், என் நாத்தனர் என்னை வைது திட்டி அடித்தாலும், நான் அந்தத் துக்கங்களைப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொறுத்துக் கொண்டு, பிரபு கிரிதர நாகரைப் பாடுவேன்; வாழ்க்கையின் துக்கங்களைத் தாங்கிக் கொள்வேன்; என் கிரிதர நாகரை மறக்காமல் பாடிக்கொண்டிருப்பேன்.

4. ஏ சியாம்சுந்தர், உமது அழகான புனிதமான மங்கள விக்கிரகத்தைக் கண்டு, அதில் ஈடுபட்டு மனத்தைப் பறி கொடுத்துவிட்டேன். என் உடல்நிலை, உடல் உணர்வுகள் எல்லாவற்றையும் மறந்துவிட்டேன். உடலற்றவள்போல் ஆகிவிட்டேன். தயிர்ப்பானை தலையிலிருந்து கீழே விழுந்து உடைந்து போனால் எவ்விதமோ, அதுபோல நான் என் உடலின்பங்களை இழந்துவிட்டேன். இரவில்கூடத் தூக்கம் இல்லை. உன்னைப் பற்றிய பிதற்றல்தான். உன்னிடம் அன்பு கொள்ளக்கூடாது என்று என் மாதா, பிதா, சுற்றம் அனைவரும் உபதேசம் செய்தும், தொல்லைப்படுத்தியும் என்னை உன்னிடம் வராதபடி தடுத்தார்கள். ஆனால், என் உள்ளமோ உன்னையே பற்றுக் கோடாகப் பற்றிக் கொண்டிருக்கிறது; என் உள்ளத்தில் நீ எப்போதும் குடிகொண்டிருக்கிறாய்; ஆகையினால் அவர்களின் பேச்சை எவ்விதம் நான் கேட்பேன்? மிக்க பிரேமாதிசயமான அன்பு உன்னிடம் இருக்கும்போது, எவ்விதம் நான் உன்னை விடமுடியும்? இந்தச் செய்தியை எல்லா மக்களும், உலகத்தவர்களும் அறிவார்கள். மீராவின் பிரபு கிரிதர்தாம். இதை நீர் நன்கு அறிவீர். மற்றவர்கள் இதை உணர மாட்டார்கள். "ஏ பிரபு! நீர்தாம் எனக்குப் புகலிடம்."

குறிப்பு: இன்னொரு பாடாந்தரத்திலும், கோவிந்தன் தாம் என் பிரபு. அவருடைய ஒவ்வோர் அங்கத்தின் வியக்கத்தக்க அழகைக் கண்டு இன்புறுவேன். இதில் நாணம் இல்லை, பயமில்லை, ஊரார்களின் கேலி என்னை ஒன்றும் செய்துவிடாது. அரண்மனையைவிட்டு வெளியே செல்ல வேண்டுமானாலும், இன்பத்துடன் செல்வேன். பிரபு! உம்முடைய புகலிடம்தான் எனக்கு வேண்டும்.

5. தோழீ! என் பார்வையில் எப்பொழுது நந்தநந்தன் (கிருஷ்ணன்) நேருக்கு நேர் தோன்றினாரோ, அப்பொழுதிலிருந்து எனக்கு இவ்வுலக வாழ்க்கையோ, மேலுலக வாழ்க்கையோ இவை இரண்டிலும் பற்றுதலோ ஆசையோ இல்லை. ஒன்றுமே எனக்குப் பிடிக்கவில்லை. இந்தக் கிருஷ்ண வடிவம் எல்லாரையும் ஆசைப்படும்படி செய்கிறது; தலையில் சந்திர கலைகள் ஒளி வீசுகின்றன என்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சொல்லும்படி அவருடைய தலை மகுடத்தில் மயிலின் இறகுகள் கவர்ச்சியாக விளங்குகின்றன. காஷ்மீர் கேசரி, குங்குமப்பூ இவற்றால் நெற்றியில் திலகம் இடப்பட்டது போல அலங்கரிக்க, அந்தப் பிரபு மூன்றுலகங்களையும் தம்முடைய ஒளிவீசும் அழகினால் கவர்கின்றனர். வரிசை வரிசையாக மயிர்ச் சுருள்கள் காதோரங்களில் தொங்கிக் கொண்டிருக்க, இரண்டு செவிகளிலும் தொங்கும் குண்டலங்கள் இரண்டு கன்னங்களின் அழகையும் மிகுதிப்படுத்த, அவற்றின் பளபளப்பானது முக ஒளியை மிகுதிப்படுத்த, அந்தக் காட்சியைப் பார்த்தால், மீன் குஞ்சுகள் தங்கள் இடமாகிய குளத்தை விட்டுவிட்டு, மகரங்களைச் சந்திப்பதற்கு வந்திருப்பது போலத் தோன்றுகின்றன. நெற்றியில் சந்திர வளையம் போன்ற திலகம் ஒளி வீசுகிறது. அவருடைய இரண்டு கன்னங்களின் அழகைச் சொல்லித் தீருமோ? இரு கரு வண்டுகளோ, மீன்களோ, மான்களோ மறந்து போய் இங்கு வந்து விட்டிருக்கின்றனவோ என்று சொல்லும்படி கவர்ச்சியூட்டுவனவாக இருக்கின்றன. அதேபோல அவருடைய மூக்கும், கழுத்தும், அதில் படிந்திருக்கும் ரேகாவளிகளும் மிகவும் அழகூட்டுவனவாயிருக்க, இதற்கு மேல் பிரபு ஒரு நடவரனைப் (நடனம் ஆடுபவர்) போலச் சிறப்பான அம்சங்களுடன் ஒளிர்வது இன்னும் அதிக அழகுடன் விளங்குவது போல இருக்கின்றது. அவருடைய இரு உதடுகளும் சிவப்பாயும்; அவருடைய கருமையான இரு நயனங்களும் அருணசிவப்பாயும்; மதுர மந்தகாசச் சிரிப்பும்; அவருடைய பல்வரிசைகள் மாதுளம் பழத்தின் முத்துகள் போலவும்; பட்டுப் பீதாம்பரம் மின்னல்போல ஒளியுடன் ஒளிவீசிக் கொண்டும்; அவருடைய இடுப்பில் அணியப் பட்டிருந்த சூத்திர கண்டிகாவின் சலங்கைகள், அதன் இனிமையான ஒலிகள் எல்லாமே ஒப்புச் சொல்ல முடியாதபடி மிக்க அழகாய் விளங்குகின்றன. இப்பேற்பட்ட திரண்ட பிரதி அங்க அழகுகளைக் கொண்ட கிருஷ்ணப் பிரபு உண்மையாகவே ''ரூபசாகர்'' என்று சொல்லும்படி இருக்க, நான் அதை எவ்விதம் வருணித்து மனநிறைவு பெறுவேன்?

6. தோழி! என் இரு கண்களும் கிருஷ்ணனுடைய அனுபம வடிவ அழகுகளைப் பருகிச் சாப்பிடுவதற்கு, பிசுனனைப் (லோபியைப்) போல மனநிறைவு பெறாமல் இருக்கின்றன. அஃதாவது, மறந்துகூடக் கண் இமைகள் மூட மறுக்கின்றன; எப்பொழுதும் பகவானுடைய காட்சியை அடைவதற்கு இந்தக் கண்கள் அவருடைய ஒவ்வொரு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மயிர்க்காலையும், நகத்திலிருந்து தலைவரை ஒவ்வோர் அங்கத்தையும் கண்டுகண்டு ஆசை தீராது திரும்ப மறுக்கின்றன. அவருடைய முகமண்டலம் சந்திரகிரணங்களைப் போலக் குளிர்ச்சியாகவும் ஒளிமயமாகவும் இருக்க, அவருடைய அமைதியான தன்மை நான்கு புறங்களிலும் அழகையும் குளிர்ச்சியையும் பரவச் செய்கின்றன. ஆனால், என் சுற்றத்தவரும் அக்கம்பக்கத்தவரும் என்னை ஒவ்வொரு நிமிடமும் கட்டாயப்படுத்தி, கிருஷ்ணனிடமிருந்து என் பக்தியைப் பிரிக்க நினைக்கிறார்கள்; என்னைத் தடுக்கிறார்கள்; ஆனால், இதில் என் கண்களன்றோ அபராதம் செய்திருக்கின்றன! அவையே என்னை முழுமையாக அவரிடம் அளித்துவிட்டன; இது நல்லதோ, கெட்டதோ எனக்குத் தெரியாது. நான் முழுமையாக அவரிடம் ஈடுபட்டு விட்டேன்; கிருஷ்ணனை விட்டு ஒரு கணமும் நான் பிரியமாட்டேன். ஒரு கணமும் அவருடைய விரகதுக்கத்தைப் பொறுக்க மாட்டேன்.

7. நந்தபிஹாரி (கிருஷ்ணன்) என் உள்ளத்தில் வசிக்கிறார். இடுப்பில் சிவப்புக் கற்கள் பதிந்த கடிபந்தம் என்ற பட்டை ஒன்றை அணிந்துள்ளார். வயிரக்கற்கள், முத்துகளால் அலங்கரிக்கப்பட்ட முகுடத்தை அணிந்து கொண்டிருக்கிறார்; நான் அவருடைய கால்களின் அடியில் கதம்பமரத்தின் கிளையின் நிழலில் நின்று கொண்டிருந்தேன். பிரபு அதன்மேல் நின்றுகொண்டிருந்தார். இந்தப் பிரபு என் உடலின் அழகைக் கண்டு புன்முறுவல் செய்கிறார். ஆகவே என் ஸ்வாமி கிரிதரநாகர்; அவரைக் கண்டு என் கண்கள் ஆனந்தக் கண்ணீரைச் சொரிந்த வண்ணமிருக்கின்றன.

8. என்னுடன் மிகுந்த அன்புடன் என் பிரபு கிருஷ்ணன் கலந்துவிட்டார். அவர் என்னை வந்தடைந்த காரணத்தினால் என்னிடம் சோகமோ, கவலையோ, சந்தேகமோ ஒன்றுமில்லை. நான் கிருஷ்ணனை விலைக்கு வாங்கிவிட்டேன். என்னிடம் துன்பங்களோ, திருஷ்ணையோ ஒன்றுமில்லை. அவருடைய தலையின்மீது மயிலின் இறகுகள் கொண்ட முகுடம்; உடலின் மீது பட்டுப் பீதாம்பரம்; நான் மேகவண்ணம் கொண்ட சுந்தரனை என் கணவனாக வரித்துவிட்டேன்; இவரே எனக்கு ஒவ்வொரு பிறவியிலும் கணவன்; நானே சௌபாக்கியவதி; ஆகவே, என் பிரிய நாயகனுடன் ஆனந்தக் கிரீடைகளைச் செய்வேன்; அவருடைய இனிமை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதர பானத்தைப் பருகுவேன்; ஆகவே, என் கணவர், ஸ்வாமி கிரிதரநாகர். அவரைக் காண்பதால் நானே பேரின்பம் கொள்கின்றேன். நான் மிகவும் பாக்கியசாலி.

9 எனக்கு இராமபக்தி சாம்ராஜ்யத்தின் இரத்தினம் கிடைத்திருக்கிறது; இராமரத்தினம் என்கிற தனம் கிடைத்திருக்கிறது; இந்த பக்திதனம் விலைமதிக்கப்படாதது. என்மீது மிகுந்த அருள் கொண்டு, என் குருநாதர் இந்தச் செல்வத்தை எனக்கு அளித்திருக்கிறார். அந்தச் செல்வத்தை நான் அவரிடமிருந்து உடல், மனம் என்கிற சாதன உறுப்புகளால் பெற்றுக் கொண்டேன். இந்தப் பொருட் குவியலைப் பெறுவதற்கு நான் ஒவ்வொரு பிறவியிலும் தேடித் திரிந்தேன்; உலகம் முழுவதிலும் தேடி அலைந்தேன்; இந்த மகத்தான செல்வத்தை அடைந்த பின்பு, இந்த வாழ்க்கையிலுள்ள எல்லாப் பொருள்களிலுமுள்ள பிரியமும் நசித்துப் போய்விட்டது இந்தச் செல்வத்தின் வேறொரு மேன்மையையும் கேளும். இதைச் செலவிட்டுக் கொண்டிருந்தால், இந்தச் செல்வம் அழிவடையாது; இதைத் திருடன் கவர முடியாது: நாள்தோறும் இதைப் பேணி வருவதால், அது விருத்தியாகிக் கொண்டு போகிறது. இந்தச் செல்வம் ''உண்மை'' என்ற ஓடத்தைப் போலவும், இதைப் போதித்த சத்குரு ஓர் ஓடக்காரன் போலவும் இருக்கும்போது, நான் இந்தப் பரந்த வாழ்க்கைக் கடலைத் தாண்டி விட்டேன். மீராதேவியின் ஸ்வாமி கிரிதரநாகர்; அவருடைய வசமடைந்த நான் மிகப் பெருமகிழ்ச்சியினால் மகத்தான கிருஷ்ணபக்தர்களால் சூழப்பட்டு, இந்த மதுரமான பாடலைப் பாடுகிறேன்.

10. தோழீ, நான் பிரபு கிரிதர கோபாலனுக்கு என் உடைமை எல்லாவற்றையும் ஒப்பித்து விட்டேன். அவ்விதம் இருந்த போதிலும், நான் மறைவாக இந்த வியாபாரத்தைக் கூறுகின்றேன். சிலர் 'இஃது உண்மை அன்று' என்றும், இன்னும் சிலர் கபடமென்றும்; இந்தக் கிருஷ்ண விக்கிரகத்தை நான் திருடிவிட்டேன் என்றும் குற்றம் சாட்டுகிறார்கள். இவர்கள் எல்லாரும் உண்மையைப் பேசவில்லை. நான் உலகம் அறிய மத்தளம் கொட்டிக் கண்ணனை வாங்கியுள்ளேன். நான் கண்ணனுக்கு ஊஞ்சல் பண்ணி எழுந்தருளப் பண்ணியிருக்கிறேன். நன்றாக என்னுடைய நகைகள் அனைத்தையும் கொடி, கங்கணம் உள்பட அவரிடம் ஒப்புவித்து விட்டேன். இன்னும் சிலர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்னை முழுவதும் அவருக்கு அளித்துவிட்டேன் என் கிறார்கள். அவர் கருப்பு என்றும் சிவப்பு என்றும் சொல் கிறார்கள்; நான் என் கண்களை நன்றாகத் திறந்து கொண்டு, முழுச் சம்மதத்துடன் என்னை அவருக்கு அளித்து விட்டேன். நன்றாகச் சீர்தூக்கிப் பார்த்து, தராசில் நிறுப்பவள்போல, அவருடைய முழுவதுமான பெருமைகளை அறிந்துகொண்டு, என்னை அவருக்கு அளித்துவிட்டேன். முன் பிறவியிலேயே அவரால் வாக்களிக்கப்பட்டு, என்னை இந்தப் பிறவியில் அவரால் முழுவதுமாக ஆட்கொள்ளப்பட்டு விட்டேன். ஆகவே முழுவதிலுமே, கிரிதரநாகர் கிருஷ்ண னுக்கு நான் அடிமை; அவர் எனக்கு ஸ்வாமி.

11. ஏ தோழி! எனக்குக் கேவலம் கிருஷ்ணனே வாழ்க்கைப் பேறு (ஜீவனம்); அவரைவிட்டு, எனக்கு வேறு ஒரு விஷயத்திலோ, அல்லது ஆசையோ ஒன்றுமில்லை. ஏ கிருஷ்ண! நான் உன் திருவடிகளைப்பற்றி வழிபாடு செய்வேன்; இந்த வழிபாட்டைத் தவிர, எனக்கு அணி வகைகளிலோ, ஒப்பனைகள் செய்வதிலோ, மணமுள்ள பொருள்களைப் பூசுவதிலோ விருப்பம் இல்லை. இந்தச் சுற்றம் உறவுகளெல்லாம் எனக்கு மரணத்துக்குச் சமம். ஆகவே, எனக்கு ஸ்வாமி கிரிதர கோபால், கிரிதர நாகர், அவரை அடைந்துவிட்ட பிறகு இந்தப் பிறவி எனக்கு ஒரு பொருட்டல்லவாகிவிட்டது.

12. ஆகவே, என்னைப்பற்றி யார் எது வேண்டு மானாலும், நல்லதோ, கெட்டதோ, சொல்லிக் கொள்ளட்டும். எனக்குக் கண்ணன்மீதிருக்கும் பேரீடுபாடு ஒரு நாளும் குறைவடையாது. என் காதல் முற்றிவிட்டது. அதனால் சில பேர்கள் எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்கிறார்கள்; அவருடைய மயக்கினால், நான் சாதுக்க ளுடைய கூட்டத்தை அடைந்து கெட்டுவிட்டேன் என் கிறார்கள். அவர்களுடைய கூட்டத்தில் நவசாரம்போலக் கலந்துவிட்டேன், ஆகவே ஆடையில் நூல்போல ஒன்றி விட்டேன் என்று ஏசுகிறார்கள். மீராதேவி சொல்கிறாள்: "ஆம், நான் என் மாளிகையில் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தேன்; சத்குரு ஒருவர் என்னை அந்தத் தூக்கத்திலிருந்து விடுவித்தார். அந்தகார இருட்டில் நான் தனியாகத் தவித்துக் கொண்டிருந்தேன்; சத்குரு எனக்கு இந்த இருட்டைத் தவிர்க்க ஞானஒளியை அளித்தார்;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நான் இப்பொழுது விழித்துக் கொண்டேன். இனி, ஒரு நாளும் நான் கண்ணனை மறக்க மாட்டேன்.''

13. ஏ ராணா, என்மீது குற்றம் சாட்டுகிறாயே, முன்னேற்பாடாகவே ஏன் என்னை நீ தடுக்கவில்லை? இப்பொழுது எனக்குக் கண்ணனிடம் விருப்பம் ஏற்பட்டு விட்டது. இதை நான் விலக்குவது சரியன்று. என்னால் உனக்கு அவமானம் ஏற்படுமாயின் என்னைக் கொன்றுவிடு; தியாகம் செய்துவிடு; ஆனால், உன் பயத்தினால் நான் கண்ணனிடம் வைத்திருக்கும் பிரேமையை விடமாட்டேன். நான் எப்பொழுதும் கண்ணனையே உச்சரித்து வாழ்வேன்; இஃது உனக்கு வெறுப்பு உண்டாக்கியிருக்கும்! என்னைக் கொல்வதற்கு நஞ்சை அனுப்பி வைத்தாய். நான் நம்பின வரைக் காப்பவரான கண்ணபிரானை மனத்தினால் வணங்கி அந்த நஞ்சினை முழுக்க ஒரே மூச்சில் குடித்துவிட்டேன். அஃது எனக்குப் புகலமுதமாகிவிட்டது. என் பிரபு சியாமசுந்தர், தீனபந்து, அவரே தனிப்பட்ட மனிதனின் உள்ளத்தை முழுவதும் அறிபவர். ஆகவே, அவரே என்னை முழுமையாகக் காப்பாற்றுவார். மயில் இறகுகளை அணிந்த கண்ணன் என் உள்ளத்தில் எப்பொழுதும் வசித்துக் கொண்டிருக்கிறார். ஆகவே, இந்த மீராபாயின் தலைவர் கிரிதரநாகர்; அவள் கேவலமாக, தனிப்பட்ட ஒருவளாக, நாட்டியமாடும் கண்ணனுக்கு அடிமை, அடிமைப்பட்டவள் என்று தன்னைச் சொல்கிறாள் மீராதேவி.

14. பிரியர்களே, நான் சொல்வதை நன்றாகக் கேளுங்கள். என் கிருஷ்ண பிரேமை இந்த உலகம் முழுவதும் தெரிந்திருந்தும், மறைந்து உலவுகிறது. ஆனால், இந்த சாதுக்களே எனக்கு மாதா, பிதாக்கள். இவர்களே எனக்குச் சுற்றமும் நட்பும்; இவர்களுக்கு ஒருவித தீமையும் கிடையாது; இவர்கள் ஞானிகள்; இதுபற்றி நான் பல தடவைகள் ராணாவிற்குச் சொல்லிவிட்டேன். அதனால், ராணாவின் வார்த்தை ஒன்றையும் நான் கேட்கவில்லை. ஆகவே, மீரா சொல்கிறாள் :

''எனக்குக் கிரிதரநாகர்தாம் தலைவர்; சாதுக்களே என் கிருஷ்ணப் பிரேமையை நன்கு அறிவார்கள். அவர்களின் பாதுகாப்பில் நான் விடப்பட்டிருக்கிறேன். அவர்கள்தாம் என்னைப் பாதுகாக்க வேண்டும்.''

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

15: என்னை மகாராணு வைது தடுக்கட்டும்; என்னை மகாராணியும் மகாஜனங்களும் தடுத்து என்னை ஏசட்டும். மீராவின் தோழி ஒருவள் சொல்கிருள்: "மீரா, வைராக்கிய பாவத்தைத் தியாகம் செய். என் வார்த்தைகளைக் கேள். உன்னால் நாங்கள் கெட்ட பெயரை அடைகிறோம்." கும்பபோஜராஜரும், அவருடைய தோழிகளும் என்னைத் தடுக்கட்டும். "இஃதென்ன கோலம், உன் தலையில் சீஸ்மலர்; நீ யாரையும் வணங்குகிருய்; இஃதென்ன, உன் நெற்றியில் இருக்கும் திலகம் வரம்பு மீறிப் பெரியதாக இருக்கிறது; சாதுக்களுடைய சமீபம் உட்கார்ந்து கொண்டு, வெட்கமின்றி உரையாடிக் கொண்டிருக்கிருய்; இஃது ஒரு நாளா? பல நாட்களாகச் செய்து கொண்டு தம்முடைய அரச வமிசத்திற்குக் களங்கம் செய்கிருய்; பெரிய அரண்மனையில் வசிக்கத் தகுந்த ராணி ஒரு சாதாரண சந்நியாசினியைப்போல, கீழான மக்களோடு சரளமாகப் பழகுகிருய்! உனக்குக் கிடைத்திருக்கும் பதி சர்வ சாதாரணமான மனிதனு? இந்துக்களனைவர்க்கும் கதிரவனைப் போல் கம்பீரமான ராணு உனக்குப் பதியாக இருக்க, நீ அவரைத் தியாகம் செய்துவிட்டு, எப்பொழுதும் உன் மனப்போக்காகவே ஒருவருக்கும் அடங்காமல் வாழ்ந்து கொண்டிருக்கிருயே! உன் மனத்தில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிருய்?"

இந்த வார்த்தைகளைக் கேட்டுச் சகித்துக்கொண்டிருக்கிற மீராபாய் சொல்கிருள்:

"எனக்கு இந்த வார்த்தைகள் பழக்கமாகிவிட்டன. இந்தப் பிறவியில் ஏற்பட்டிருக்கிற சுற்றங்களினுல் எனக்கு என்ன பயன்? எனக்கு சத்குரு கிடைத்த பின்பு, என்னுடைய பழைமையான அஞ்ஞானம் அழிவடைந்து போய்விட்டது; எனக்குப் 'பரம்தாம்' எனப்படும் வைகுண்ட மார்க்கத்தை அவர் உபதேசித்திருந்தபடியால், நான் அவர்களுடைய வார்த்தைகளால் மனம் நோவப்படவில்லை. இவ்விதம் எனக்கு உண்மை நெறியைப் போதித்த பேருபகாரியின் (சத்குருவின்) திருவடித் தாமரைகளின்மீது நான் அடைக்கலமாகப் புகுந்தேன்."

குறிப்பு: இங்குப் பல சம்பவங்களைப்பற்றியும், ராணு, ராணி, உறவு மக்களின் கொடுமைகளைப்பற்றியும் சொல்லலாயிற்று. "கும்பர் பாட்வீ" என்று சொல்லப்படுவர் யார்?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கும்பராணுவா, போஜராஜாவா, போஜராஜனின் இளைய சகோதரனா? அதே மாதிரி, "சத்குரு" யார்? அதுவும் சரியாகத் தெரியவில்லை.

16. யாரிடமும் விருப்பு, வெறுப்பு அற்ற நீதி நிறைந்த அரிபகவானே! இப்பொழுது உன்னிடம் பிரேமை ஏற்பட்டு விட்டால் அஃது அமுதத்தைக் குடித்துவிட்ட பிறகு நஞ்சைச் சாப்பிட்டாற்போல இருக்கும்போது, எனக்கு மாத்திரம் வேறொரு வழி, நெறி எப்படித் தோன்றும்? (அமுதத்தைக் குடித்த பின்பு, நஞ்சை அருந்தினால் என்ன கெடுதலை உண்டுபண்ணும்? அதுபோல) முதலில் சுகத்தையும், பின்பு துக்கத்தையும் அளிக்க வல்லதாக அன்றோ உன்மீது கொண்ட பிரேமை விளங்குகிறது? இப்போது உன் நீதி மர்மம் புரிந்துவிட்டது. உன்னிடம் ஏற்பட்ட பிரேமை உன் காரியத்துக்காக ஏற்பட்டது. வேறு ஒரு பொருளினிடமோ அல்லது மனிதனிடமோ பிரேமை ஏற்படுவதற்கு இல்லை. இது பிரேமையில் எந்த வகையைச் சேர்ந்தது? அஃதாவது அன்பு எல்லாரிடமும் சமமாக இருக்க வேண்டும். ஆகவே பிரபு, நீர் சுயகாரியப்புலியாக உம்மிடம் கொண்ட பக்தியை வளர்த்திக் கொண்டே போகிறீர். உம்முடைய நீதியே மிக்க விநோதமாக இருக்கிறது! இதுவும் பிரபு, என் நன்மைக்கே என்று நினைக்கிறேன். ஆகவே மீரா சொல்கிறாள், "என் பிரபு கிரிதரநாகர், நீர் உண்மையாகவே சுயத்துக்காக (சொந்தக் காரியமாகிற) உமது நன்மைக்காகவே விருப்ப அன்பைக் (ப்ரீதி பிரேமை) காட்டுகிறீர்; அதுவும் என் நன்மைக் காகவே. ஆகவே நீர் எனக்கு மிகவும் நல்வினையின் பலனாகச் சொந்த நண்பனாக விளங்குகிறீர்!"

17. ஏ கண்ணா, என் விருப்ப அன்புக்குச் செயல் புரிவீர். என்னிடம் நீர் திறைவு பெறுவீராகில், ஏ பிரபு, என்னிடம் காணப்படும் தீமைகளை விலக்கி, உமக்கு ஏற்ற தகுதியுடையவளாகச் செய்வீர். உம்மைக் கலியாண குணங்களின் கடல், இருப்பிடம் என்று அனைவரும் புகழ்கிறார்கள்; ஆகவே, என் குற்றங்களைப் பொறுப்பீர். அவற்றைச் சிந்தனை செய்யாதீர். இந்த உடலின்மீது பற்று ஏற்படுவது போன்ற அபிமானம் ஆகிய துர்க்குணங்கள் ஏற்பட்டிருக்கின்றன; பகைவர் ஒரு கோட்டையை முற்றுகையிட்டிருப்பதுபோல முற்றுகையிட்டிருக்கின்றன. மீராதேவி மீண்டும் சொல்கிறாள், "என் சுவாமி கிரிதரநாகர்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என் சித்தம் எப்பொழுதும் அவருடைய திருவடிகளில் அமர்ந்திருக்கட்டும்.''

18. ஏ தோழி, கூனி ஒருத்தியைக் காலால் உதைத்து ஓர் அழகியாக அவளை ஆக்கின சியாமசுந்தர் கண்ணபிரான் என்னையும் கவர்ந்துவிட்டார். அந்த அழகியும் அவரைக் கவர்ந்துவிட்டாள். என்னிடம் அவர் வந்து காட்சி தருகிறதாக இல்லை. நானே அவரைத் தேடித் தேடிக் கதம்ப மரத்தின் அடியிலும், பிருந்தாவனத்திலும் அலைந்து திரிந்து கொண்டிருக்கிறேன் அவரோ குளிர்ந்த யமுனையின் நீரை அருந்தாமல், அழுக்குநீர் நிறைந்த மதுராவிற்குச் சென்றுவிட்டார். வெயில் என்றும் பாராமல், அந்த அழகி யிடம் சென்றுவிட்டார்! உண்மையாகவே அந்த அழகி அவரை வைது திட்டியிருக்க வேண்டும். அதை ஏற்றுக் கொண்டு, அவளிடம் அவர் போய்விட்டார். என் கதி இவ் விதமா? என் காதலை ஏற்று நிறைவேறச் செய்வாயாக. இடையிலே கைவிட்டு விடாதே. எவ்வித மிருப்பினும், அவரே எனக்குப் பிரபு, கிரிதரநாகர். அவரைத்தான் நான் உயிர் அன்பராக நேசிக்கிறேன். அவரே என் பதி.

19. விரகநோய் கொண்டவளின் துக்கத்தை யார் சரியாக அறிந்துகொள்ளக் கூடும்? என்னைப்போல விரகத் தினல் (பிரியமான உறவின் பிரிவினல்) வருந்தும் ஒரு பெண் அல்லது ஆண் அறியலாம்; அரியிடம் அன்பு செலுத்தும் வைணவப் பெரியாருக்குத் தெரியலாம். பிறர் துன்பங்களைத் தங்களுக்கு ஏற்பட்ட துன்பங்களைப்போல அனுபவிக்கும் மனிதர்களே அரிபக்தி (வைணவத்) தாசர்கள். நான் ஒரு நோயாளியைப்போலத் துன்பப் படுகிறேன். எனக்கு மருத்துவர் (பேஷஜர்) அரிபகவானே ஆவர். அவருக்குத்தான் தெரியும் எனக்குத் தேவைப்படும் மருந்து; அவரைத் தவிர, எனக்குச் சுகம் கொடுப்பவர் யாருமில்லை; அரிபக்தியைத் தவிர எனக்குச் சுகம் தற்போது வேறு ஒன்றுமில்லை. துக்க மனத்துடன் நான் அலைந்து திரிகிறேன். அரிபகவான் வருகிறதாக இல்லை; காட்சி தருகிறதாக இல்லை; சாதகப் பறவைகள் சுவாதி நட்சத் திரத்தில் மழைத்துளிகளை அருந்தி, எவ்விதம் சுகம் அடையுமோ, அதன் பிறகு மதுரமாகக் கூவி, ''பிரிய'', ''பிரிய'' என்று கூவித் துக்கமடையுமோ அதேபோல, என் மனமும் பிரேமை நிறைந்த கண்ணபிரானை அழைத்து, அவரைக் காணமல் நோவுபடுகிறது! என் வாழ்க்கைப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பயன் அனைத்தும் வீண். நான் முள் படுக்கையில் பொருந்தி அவதிப்படுவதாக இருக்கிறேன். எந்த விரகிணிப் பெண்ணுக்கு இந்த மாதிரி துக்கம் ஏற்பட்டிருக்கிறது? அந்த விரகிணிப் பெண்ணைத் தவிர, என் துக்கம் யார் அறியக்கூடும்? ஆகவே மீராதேவி சொல்கிருள், "என் பதி சாட்சாத் கண்ணனே, அவரைத் தவிர எனக்குப் பாதுகாப்பானவர் யாருமிலர். நான் என்ன செய்வேன்?"

20. ஏ அரிபகவானே! உம்முடைய லிகிதம் (பத்ரம்) எனக்கு நம்பிகையை உண்டாக்குமா? நிம்மதி ஏற்படுமா? சீக்கிரம் காட்சி தந்து, என்னைத் துக்கத்திலிருந்து விடுவிக்க மாட்டாயா? பொய்யுள்ளதும் தந்திரமான வார்த்தைகள் அடங்கியதுமான லிகிதம் ஒன்றை அனுப்பினல், ஏதாவது இலாபம் ஏற்படுமா? நான் உம்முடைய லிகிதத்தைப் படிக்கத் தொடங்கியவுடனே, என் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாகப் பெருகி, என்னை வாசிக்க முடியாதபடி செய்துவிடுகின்றன. நான் உமது காட்சியின்றி, எவ்விதம் வாழ்வேன்? ஆகவே, மீராதேவி சொல்கிருள், "எனக்கு அவிநாசி அரிபகவான்தான் சுவாமி; அவருடைய திருவடித் தாமரைகளில்தான் என் மனம் கலக்க விரும்புகிறது."

குறிப்பு: ருக்மிணி பிராட்டி கிருஷ்ண பரமாத்மாவுக்கு லிகிதம் எழுதியதை நினைவுபடுத்திக் கொள்ளவும். கவிகளுக்கு, கடிதம் (பத்ரம்) பற்றிச் சொல்வது பரம்பரையான வழக்கம். பக்தி (ரசனை) செய்யும் கவிகளுக்கு இது முக்கியமான பாரம்பரியப் பழக்கம். மீராதேவி இதையே கடைப்பிடிக்கிருள்.

21. ஏ கிரிதர், ஏன் என்னிடமிருந்து என் அன்பைப் பிடுங்கிக் கொண்டாய்? இவ்விதம் அபகரிப்பது உன் மனத்துக்கு அபராதமாகத் தோன்றவில்லையா? ஏன் என்னிடம் சினம் கொண்டு, பராமுகமாக இருக்கிருய்? என்னிடம் தவறு இருந்தால், நான் காது கொண்டு கேட்கிறேன்; நான் உனக்கு அடிமையாகப் பிறவிகள் தோறும் இருக்கிறேனே! இந்தப் பிறவியிலும் அவ்விதமே! இந்தப் பிறவியிலும் எனக்கு ஏன் துக்கத்தைக் கொடுக்கிருய்? எதற்காக நீ சினம் கொண்டுவிட்டாய்? என் மனத்தை வருத்தமுறச் செய்கிருய்? என்ன விரதம் கொண்டு, என்ன உபாயத்தினல், எனக்கு நீ காட்சி அளிப்பாய்?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உன்னைப் பார்த்துப் பேசி, வெகு நாட்கள் ஆகிவிட்டன! மீராதேவி சொல்கிருள், "எனக்கு அவிநாசி அரிபகவான் தான் பிரபு, சுவாமி; நான் கேவலம் அவருடைய நாமத்தையே உச்சரித்துக்கொண்டு வாழ்கிறேன் அவருக்கு முன்பு நாட்டியம் ஆடிக்களிக்கிறேன்."

22. நேசம்மிக்க அன்பரே, நீர் என் வீட்டிற்கு வரவேண்டும். உம்மை வரவேற்பதற்காக, நான் அழகான மலர்களைப் பொறுக்கி வைக்கிறேன்; மிக்க சுவையுள்ள விருந்துணவை உமக்காக நான் ஏற்பாடு செய்கிறேன். நீரோ சகல கலியாண குணங்களுக்கு இருப்பிடம்; நானோ சகல அவ குணங்களுக்கும் இருப்பிடம. நீர் என்னிடம் அன்பு காட்டி, மன்னித்துவிடுவீர். மீராதேவி சொல்கிருள், "ஏ கிரிதரநாகர், உன்னை நான் எப்போது காண்பேன்? என் கண்கள் மிக்க துக்கத்தை அனுபவிக்கின்றன. என் ஆசை உன்னைக் காண்பதற்கு அதிகரித்துக்கொண்டு போகிறது. ஆசை நிறைவேறினபாடில்லை."

23. தோழீ! எப்போது, என்ன விதமாக நான் என் பிரபுவைச் சந்திப்பேன்? இது கவலையாக இருக்கிறது. இதுவரை என் பிரபு எனக்கு முகம் காட்டவில்லை. என் கனவில் ஒரு தடவை அவர் காட்சி அளித்தார். என் பதி வந்தபோது, நான் நன்ருகத் தூங்கிக் கொண்டிருந்தேன்; அதனுல் அவரை இழந்துவிட்டேன். அவர் தம் வீட்டிற்குப் போய்விட்டார். இனி நான் என் ஆடையைக் கிழித்து, மாட்டிக்கொள்ளும் நீண்ட சட்டையாக ஆக்கிக் கொள்வேன். நான் என் கைகளில் வளையல்களை அணிவதற்குப் பதிலாக உடைத்துவிட்டேன்; கண்களில் மை இட்டுக் கொள்வதையும் விட்டுவிட்டேன்; ஒரு சந்நியாசினி மாதிரி வாழ்க்கை நடத்துவேன். இரவும் பகலும் இடைவிடாது விழித்துக்கொண்டு விரகம் என்னை வாட்டுகின்றது. உன்னையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஒரு கணம் கூடத் தூங்காமல் விழித்துக் கொண்டிருக்கிறேன். என்னை இந்த விரக துக்கங்கள் இரவு பகல் என்று பாராமல் அழித்துக் கொண்டிருக்கின்றன. மீராதேவி சொல்கிருள், "என் பிரபு அவிநாசி கிரிதரநாகர்; எல்லாப் படைப்புகளையும் அவற்றின் இயக்கத்தையும் ஒழுங்கையும் படைத்த பிரபு, இந்த விரக துக்கத்தை ஏன் படைத்தார்? பிறப்பு ஏற்பட்ட பின்பு இறப்பு ஏன் ஏற்பட வேண்டும்?"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறிப்பு: சாதுக் கவிகளுக்கு, இந்த மாதிரி விரக துக்கங்களை அனுபவிப்பதை விவரிப்பது பாரம்பரிய வழக்கம். இதனால் பக்தி வளர்வதற்கு ஒரு சாதனம் ஏற்படுகிறது. இங்கு ஒரு காதல் கட்டம் ராஜஸ்தான் கதையிலிருந்து சொல்லப்படுகிறது; "பத்மாவதி என்கிற அரசி அவள் காதலன் ரத்தினசேனன் வரும்போது தூங்கிப் போகிருள். அவளை எழுப்பாமல், அவள் காதலன் துக்கப்பட்டுக்கொண்டு போகிருன். தூக்கம் கலைந்த பின்பு பத்மாவதி மீண்டும் தன் பதியின் காட்சிக்காக அழுகிருள்" அதையே மீராதேவி இங்கு நினைவுபடுத்துகிருள்.

24. கண்ணனையே நினைத்துப் புலம்புகிற எனக்கு நேற்று இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை. என்னுடைய பிரியதமர் (அன்பர்) என் பக்கம் இல்லை; கண்ணன் இல்லாமல், இந்த மதுரா ஒரு பயஙகரமான காட்டைப் போல இருக்கிறது. இரவில் சந்திரனை இல்லாமல் இருக்கும் இரவுபோல இந்த மதுரா பயங்கரமாக விளங்கு கிறது. அவரைத் தேடி, பிருந்தாவனத்தில் இங்கு வீடுவீடாகத் தேடினன்! என் பிரபு என் கண்களுக்கு அகப்படுகிறதாக இல்லை! ஒவ்வொரு கோபிகையின் குஞ்சத்திலும் தேடினேன்; இந்த மதுராவோ பெரிய மேட்டின்மீது உச்சியில் இருக்கிறது; யமுனு நதியோ கீழே பாய்ந்துகொண்டு செல்கிறது. காளிந்தியாகிற யமுனையில் விளையாடப்போகும் மதுராப் பிரபு மிகவும் துன்ப நிலையில் இருக்கும் என்னிடம் விளையாட வரத் தயங்குகிருரே? வியப்புதான்! எவ்விதமிருப்பினும், மீரா சொல்கிருள், "என் நாதன் கிரிதரநாகர்; அவருடைய திருவடித் தாமரைகளிலே நான் எப்பொழுதும் அடிமையாக விளங்குவேன்; அவரை ஒருநாளும் மறக்க மாட்டேன்."

25. கண்ணன் என் பக்கத்தில் இல்லாமல், இரவு வீணுகக் கழிந்து போகிறது. ஆனுல், அவர் வந்த பாடில்லை. எனக்குத் தூக்கம் வரவில்லை; பிரியதமர் இல்லாத படியால், நான் படுக்கையில் உருண்டு கொண்டு அவரைத் தேடியும், அவரைக் காணுமல், மனம் நொந்து போகிறேன்; அவரை நான் எவ்விதம் அடையக்கூடும்? என் உயிர் போய்க் கொண் டிருக்கிறது. ஆனல், அவர் வந்த பாடில்லை. மீராதேவி மீண்டும் சொல்கிருள், "என் பிரபு கிரிதரநாகர். அவரை நினைந்து நினைந்து, நான் விழித்துக் கொண்டிருக்கிறேன்; விடிந்து விட்டது."

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

26. தோழி, நான் எப்பொழுதும் கண்ணனை எதிர் பார்த்துக்கொண்டு, வழிமேல் விழிவைத்து, என் கண்கள் நோவுபட்டன. ஏ பிரபு, நீர் பிரிந்து போனதிலிருந்து, கவலை அதிகமாகி விட்டது. ஏதாவது சிறிய ஒலி கேட்டாலும் நீர் வந்துவிட்டதாக எண்ணி ஏமாந்து போகிறேன்; என் இதயம் வெடித்து விடும்போல இருக்கிறது. யாருடைய இனிப்பான வார்த்தைகளைக் கேட்டாலும்; எனக்கு மனத்தில் ஒரே எண்ணம்தான் தோன்றுகிறது. அன்பரே, என்னுடைய விரகதாபங்களை யாரிடம் சொல்வேன்? இவற்றைக் கேட்பதற்கு யாருமில்லை. நான் அரியை எதிர் பார்த்துப் பார்த்து, மனவருத்தத்தை அடைந்தேன். ஒருகணம்கூட மனநிம்மதி இல்லாமல் தவித்தேன். இதனால் இரவு வளர்ந்துகொண்டு போகிறது. மீராதேவி சொல்கிருள், "ஏ பிரபு, எனக்கு உம் காட்சியை எப்போது தருவீர்? நீர் பிறர் துக்கத்தை அழிப்பதில் மிக்க சாமர்த்தியமுள்ளவர். சுகத்தை அளிப்பதிலும் மிக்க சாமர்த்தியமுள்ளவர். உம்முடைய எண்ணம்தான் என்ன?"

27. ஏ பிரியதமரே, என் பிரார்த்தனையைக் கேளும். என் சித்தத்தை நீர் கவர்ந்துகொண்டீர். ஆனல், இப்போது என்னிடம் வராமல், மற்ற கோபிகா வனிதைகளுடன் இராச லீலைகளைச் செய்கிறீர். உம்மைத் தவிர எனக்குக் கதி யார்? புகலடைந்தவர்களுக்குக் காப்பானவரே! இவ்விதம் உம்முடைய விரதத்தைக் காவாமல் சும்மா இருக்கலாமா? இதுவரை உமது முகக் காட்சியை அளிக்கவில்லையே! காலம் இன்னும் கொஞ்சம் பாக்கியிருக்கிறது. மீராதேவி சொல்கிருள், "ஏ பிரபு, எப்பொழுது நீர் காட்சி கொடுத்து, என்னை ஆட்கொள்வீர்? கைகள் கூப்பி, வணங்கி வழிபாடு செய்கிறேன். என் வார்த்தைகளுக்குச் செவி சாய்க்க வேண்டும்."

28 பிரியே, யாராவது என் மன வருத்தங்களை என் பிரபுவினிடம் போய்ச் சொன்னல், நான் அந்த உதவியை என்றும் மறவேன். அவரை நினைந்துநினைந்து, சாப்பாடு, தூக்கம், எல்லாவற்றையும் துறந்துவிட்டேன். என் இரு கண்களும் கண்ணீர்த் தாரைகளினல் நிரம்பியிருக்கின்றன. நான் அடிக்கடி கைகூப்பி வணங்குகின்றேன். இரவு பகல் என்றுகூடப் பாராமல், எப்போதும் அரற்றிக் கூவிக் கொண்டிருக்கிறேன். ஆனல், என் பிரிய தமரோ என் கண்களுக்குப் புலப்படுகிறவராக இல்லை. மீராதேவி சொல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிருள், "ஏ பிரபு, எனக்கு விரைவில் காட்சி அளிப்பீர். என் உயிர் சிறிது சிறிதாகச் செலவழிந்துபோய்க் கொண்டிருக்கின்றது."

29. ஏ ரசிக சிரோன் மணிக் கண்ணு! நீர் என் வணக்கத்தைப் பெற்றுக் கொள்வீர். இன்னொருதடவை உம்மை வணங்கிக்கேட்டுக் கொள்கிறேன். மயில் இறகுகள் முகுடமாகவும், கஸ்தூரிதிலகம் நெற்றியிலும் ஒளிசெய்துகொண்டு இருக்கிறது. இரு காது குண்டலங்களும் காதுப் பக்கங்களில் படிந்திருக்கும் சுருள் அலகாவளிகளும் கேசங்களும் மிக நேர்த்தியாக இருக்கின்றன! நீர் எப்போது உதட்டில் புல்லாங்குழலை வைத்து, இனிய இசையை உண்டு பண்ணுகிறீரோ, அப்போது நான் உம்மிடம் வயப்பட்டுவிடுகின்றேன்! ஏன் நான் மட்டுமா? உலகில் உள்ள தாவர சங்கமப் பொருள்கள் எல்லாமும் உம் வசப்பட்டுவிடுகின்றன! என் மனத்தை மோகிக்கச் செய்யும் பிரபு, கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்த பிரபு, இந்த நிகழ்ச்சிகளை நினைந்து நினைந்து, கிரிதரதாரிக் கண்ணு! நான் உன்னைக் காண மிக்க ஆசையால் வாடுகின்றேன்.

30. ஏ கண்ணு! நீர் எப்பொழுதும் என் கண்களில் வசித்துக் கொண்டிருக்கிறீர். உம் தலையின்மீது மயில் இறகுகள் முகுடமாகப் பிரகாசிக்கின்றன. காதுகளில் மகரகுண்டலங்கள் பிரகாசிக்கின்றன. நெற்றியில் சிவப்புத் திலகம் பிரகாசிக்கின்றது. உம்முடைய புனிதத் திருவுருவமோ எவரையும் கவரக்கூடிய தன்மையில் விளங்குகிறது. உம்முடைய சியாமை நிறமும் யாவருடைய மனத்தையும் வசீகரிக்கும்படி இருக்கிறது. உம்முடைய கருவிழிகள் விசாலமாகவும் மனோகரமாகவும் இருக்கின்றன. உம்முடைய உதடுகளில் அமுதம் போலப் (ஸுதாரசம்) புல்லாங்குழல் இனிமையையும், இறந்த உயிர்களுக்கும் புத்துயிரை அளிக்க வல்லதாக இருக்கிறது. உமது மார்பில் வைசயந்திமாலை பிரகாசிக்கிறது. மீரா சொல்கிருள், "பிரபு, எப்பொழுதும் சாதுக்களுக்குச் சுகத்தை அளிப்பீர்; இதனுல் உம்மை எல்லாரும் 'பக்தவத்சலன்' என்று புகழ்கிருர்கள்."

31. ஏ கண்ணு, நீர்தாம் எனக்கு உயிர்; ஆன்மாவுக்கு ஆதாரம். மூன்றுலகங்களிலும் உம்மைத் தவிர வேறு யாது காணப்படுகிறது? எங்கு பார்த்தாலும் நீர் நிறைந்திருக்கிறீர். உலகம் முழுவதும் உம்மால் அல்லவா தாங்கப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படுகிறது! மீரா தன்னைப் பற்றிச் சொல்கிருள், "பிரபு, நான் உமது அடிமை. என் துக்கங்களைப் போக்கிடுவீர். கிருபை செய்து, எனக்குக் காட்சி அளிப்பீர்."

32. ஏ கண்ணு! என் உடலைப்பாரும்; சித்தத்தைப் பாரும்; உம்முடைய இருதயம் உண்மையாகவே கடுமையாக இருக்கவேண்டும். உம்முடைய கிருபையை ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன். ஆனல், நீரோ என் விஷயத்தில் கடூரமான சித்தத்தை அடைந்திருக் கிறீர். என்பக்கம் நீர் பார்க்கமாட்டேன் என்று உறுதியாக இருக்கிறீர். கிருபை செய்யப் பிடிவாதமாக மறுக்கிறீர். சரி, உம்மை மறக்கவாவது முடிகிறதா, அதுவுமில்லை. உம்மைத் தவிர எனக்குக் கதி யாருமிலர். ஆசை நிரம்பஉண்டு. பணிவான வணக்கங்களுடன் வேண்டுகின்றேன். இவ்விதம் செய்து செய்து இரவு கழிந்துபோய், காலையும் வந்துவிட்டது. ஆனல், நீர்மட்டும் வந்தபாடில்லை! இதற்குக் காரணம், உமது கடைக்கண் பார்வை என்மீது படவில்லை. மீராதேவி சொல்கிருள், "ஏ பிரபு, அவிநாசிக் கண்ணு! அரிபகவானே! உம்முன்பே நான் என் உயிரை விட்டு விடப் போகிறேன்."

33. நான் யார்? ஒரு கோகுலவாசி. உம்மைவிட்டு எனக்குக் கதிவேறு ஒன்றுமில்லை. விரகப் பெண்களுக்குச் சுகத்தை யளிப்பதற்காகவே நீர் தோன்றியிருக்கிறபடியால், நீர் சுகத்தின் இருப்பிடம். ஆகவே, அவர்கள் உம்முடைய காட்சியினுல் மட்டும் இலாபம் அடையவில்லை; உம்மோடு சேர்ந்து இராச லீலைகளைச் செய்து, கரங்களால் தாளம் போட்டுக்கொண்டு உம்முடன் நாட்டியம் ஆடி மாபெரும் இன்பத்தை அடைந்தார்கள். அவர்களே மிக நல்வினை வாய்த்தவர்கள். ஏ நந்தகுமாரா! யசோதை, நந்தன் இவர்கள் செய்த முன்பிறவிகளின் புண்ணியம் உம்முடைய அவதார லீலைகளினுல் பிரகடனம் செய்யப்பட்டது, வியப்புக் குரியதாகும்! அவிநாசிப் பிரபு, உமது அழகு மிகுந்த வடிவமும், பட்டுப் பீதாம்பரம் அணிந்த உடலும், மார்பில் வைசயந்தி என்கிற மாலையும், கையில் புல்லாங்குழலும், அதன் இசையும், நீர் கோக்களைக் காப்பதற்குக் கோவர்த்தன மலையைத் தூக்கியதும், இந்தக் கெட்டிக்காரச் (சதுர) செய்கைகளும், உம்மிடம் நான் நிலையாக அடிமை வேலைக்கு இருக்கும்படி நியமிக்கின்றன. ஆகவே, நீர்தாம் என் பதி, பிரபு, சீக்கிரமே வந்து காட்சிதந்து, என்னை ஆட்கொள்ள வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

34. (இதில் மீராவுக்குப் பிரபு பதிலளிக்கிருர்,) "பிரிய முள்ள தோழீ, இதோ பார். பெரிய கரும் விழிகளால் என் பிரபு என் மேனி அழகைக் காண்கிருர். என்னைப் பார்த்துச் சிரிக்கிருர். அவருடைய கண்புருவங்கள் விற்களைப் போலவும், அவருடைய விழிகளின் பார்வை மன்மதனுடைய பாணங் களைப் போலவும் இருக்க, இவற்ருல் பிரபு என்னை அடித்துக் கொல்கிருர். அவர் நன்ருக அடிக்கட்டும்; என்னைக் கட்டிவைக்கட்டும்;" இவ்வாறு மீராகூற ஒரு தோழி சொல்லுகிருள்: "உன் வியாதிக்கு (பிரேமை ரோகத்திற்கு) மருந்துகளை (பிழிந்து அல்லது அரைத்துக்) கொண்டு வந்திருக்கிறேன். வேறு மருந்துகளை அரைத்துக் கொடுக் கிறேன். சந்தனம் அரைத்து உன் உடலில் தடவுகிறேன். மந்திரம் எழுதிய யந்திரம் ஒன்றை உனக்குக் காப்பாகக் கட்டி விடுகின்றேன்." மீரா சொல்கிருள்: "இந்த விதமாக உபசாரங்களைச் செய்து, என்னை ஏன் வாழவும் வைக்கிருய்? ஏ தோழீ, என் பிரபுவின் இன்பத்திற்காகச் சந்தனம் அரைத்து, என் கைகள் எல்லாம் புண்ணுகிவிட்டன; அவரை மயக்கு வதற்கு, மந்திரங்களும், யந்திரங்கள் கொண்ட வழிபாடு களும், மந்திரவாதிகள் பேயை ஓட்டுவதற்குச் செய்யும் பூசைகளும், என் மனே வியாதியைப் போக்காது. இவை எல்லாம் வீண். இப்பேற்பட்ட உபாயங்களும் என் கிருஷ்ண பிரேமையை அழிக்காது. என் மன மந்திரத்தில், பிரபு நன்ருகக் கோயில்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிருர். என் வியாதிக்கு ஒரே ஒரு மருந்துதான் இருக்கிறது. கண்ணன் எனப்படும் சாம்பல் நிறம் கொண்ட மூர்த்தியிடம் என்னைச் சேருங்கள். சாதுக் கூட்டங்களே! இதுவரை பிரபுவை அகக்கண்களால் கண்டுவந்த எனக்குப், புறக்கண் களால் பிரபுவைக் கண்டு தழுவுவதற்கு என் முன்பு நேரே அவரைக் கொண்டுவந்து நிறுத்துங்கள். அவருடைய வருகைக்கு நான் நோன்புகொண்டு காத்துக் கிடக்கிறேன். என் இதயத்தின் ஆசையைக் கேளுங்கள்: என் பிரபுவின் விரகதாபத்தினுல், என் இதயம் வெடித்து விடும்போல இருக்கிறது!" மீராதேவி சொல்கிருள், "ஏ பிரபு கிரிதர நாகர், நான் உம்மை அடையாமல், உம்மிடம் சேர்ந்து வாழாமல், இந்த அரண்மனையில் வாழமாட்டேன்; எனக்கு இருப்புக் கொள்ளாது. சாந்தியில்லை, சுகமில்லை, வாழ்வு மில்லை. உம்முடைய காட்சியைத் தாரும், ஓடிவாரும், என்னைத் தழுவிக்கொள்ளும்."

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

35. தோழீ, நந்தகோபனுடைய மகன் கண்ணன் ஓர் அபிமானி; அவர் என் மனத்தில் பெயர்க்க வோண்ணுதபடி உறைந்துபோய் விட்டார். அவர் கதம்ப மரத்தின் ஒரு கிளையின்மீது நின்றுகொண்டு என் பக்கம் பார்த்துக் கொண்டு, குளிர்ந்த பார்வையாக என்னைப் பார்த்துச் சிரிக்கிருர். அவர் மஞ்சள் நிறமுள்ள பட்டுப் பீதாம்பரம் அணிந்துகொண்டும், இரத்தினக் கிரீடமும் அணிந்து கொண்டிருக்கிருர். மீராதேவி சொல்கிருள், "என்பிரபு கிரிதர் நாகர், அவருடைய வடிவழகே என்னை மயக்கி, என்னை அவரிடம் பக்திப் பிரேமை செய்யும்படி தூண்டுகிறது."

36. ஏ கண்ணபிரானே, உம்முடைய வடிவழகைக் கண்டு என் பிரேமை அதிகரிக்கிறது. இந்தப் பிரேமைக்காக, எனக்கு என் பந்து பரிவாரங்கள் அடிக்கடி பல இன்னல்களை விளைவித்து, என்னைத் தடுத்தார்கள். என்னிடம் நடவரன், என் பிரபு நன்ருக உறைந்து போய்விட்டார். அவரிடம் என் பக்தி காதல் நன்ருக உறைந்து போய்விட்டது; என் மனம் அதனுல் அமைதித் தன்மை அடைந்திருக்கிறது. உலகத்தவர்கள் என்னைப் பலவிதமாகப் பரிகாசம் செய்கிருர்கள். மீராதேவி சொல்கிருள், "என் பிரபு எங்கும் நிறைந்தவர். ஆகையால் யாவருடைய மனத்தில் இருப் பதையும் நன்ருக அறிவார்". (என் பக்தி உண்மையானதா, கபடமான பக்தியா என்று அவரே அறிவார்.)

37. என் கண்களில் கிருஷ்ண சந்திரனுடைய கண் களின் அழகு முழுவதுமாகச் சிக்கிக் கொண்டுவிட்டது. இதனுல் அவரால் என் கண்களின் பார்வையிலிருந்து பெயர்க்க (மறைத்துக் கொள்ள) முடியாது. ஏன் நான் மட்டுமா, அவருடைய அழகில் மயங்கிவிட்டேன்? காமதேவன் கூட அவருடைய மோகன ரூபத்தில் மயங்கிப் போய், அமுதம் சாப்பிட்டு விட்டிருந்தாலும், மீளமாட்டாமல், ஒவ்வொரு நிமிடமும் ஒரே மகிழ்ச்சியுடன் அவரைப்பார்த்துக் கொண்டிருக்கிருன். அவருடைய கைகள் தாமரைப் பூவிற்குச் சமமாக இருக்கின்றன. மதோன்மத்தை உண்டுபண்ணுகிறது. அவருடைய வளைந்து இளைத்த இடுப்பும், கைகளில் புல்லாங் குழலும், அவருடைய நாட்டிய நிலையில் அசையும் மணிமுகுடமும், எல்லாம் வெகுநேர்த்தியாக இருக்கின்றன. மீராதேவி சொல்கிருள், "நான் நடவான் கிரிதர கோபாலனுடைய அழகிய கவர்ச்சியில் மூழ்கிப் போய் விட்டேன்."

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

38. மீராதேவி சொல்கிறாள், "நான் மோகனக் கண்ணனுடைய வடிவழகில் மதியிழந்து, தன்மயமாகி விட்டேன். சுந்தரவதனம், கமலதள லோசனங்கள் என அவரிடம் மயங்கிவிட்டேன். அவருடைய இரு நயனங்களும் வெகு சுந்தரமாக இருக்கின்றன. அவருடைய அலைந்து திரிகிற "பாங்கா" கோபால வடிவம் என் கண்களில் எப்பொழுதும் தாண்டவமாடுகிறது. கண்ணபகவான் யமுனைக் கரையில் கோக்களுடன் சென்றுகொண்டிருக்கிறார். மதுரமான புல்லாங்குழல் இசையை எழுப்பிக்கொண்டு உலாவுகிறார். அப்பேற்பட்ட பிரபுவினிடம் அடிமை மீரா தன்னுடைய மனம், தேகம், செல்வம் எல்லாவற்றையும் அடைக்கலம் செய்து, அவருடைய திருவடித் தாமரைகளையே நாடுகிறாள்."

6943

39. தோழீ, எப்பொழுது சியாமளகிருஷ்ணன் என் கண் முன்பு வந்தாரோ, அப்பொழுதிலிருந்து எனக்குப் பரலோக நினைவுகளும் இதர லோக நினைவுகளும் அழிவடைந்துவிட்டன. அவருடைய தலையின்மீது மயில் இறகுகள் கொண்ட கிரீடம் சந்திரனைப் போல ஒளி வீசுகிறது. அவருடைய மார்பில் குங்குமப்பூ நிறம் போன்ற வாசனைத் திலகம் விளங்குகிறது. அவருடைய கண்கள் சுகங்களை வாரி அளிக்கின்றன. அவருடைய காதுக் குண்டலங்களும், முன்னிச்சி - கர்ணிகபோல கேச அளகாவலியும், அழகான வயிற்றுப் பக்கங்களும், மயிர்ச்சுருள்களும் பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டுகின்றன. இரு மீன்கள் தங்கள் இருப்பிடமான குளத்தை விட்டு இங்கு மற்ற மீன்களைப் பார்த்துப் போக வந்தனவோ என்று சொல்லும்படி இருக்கின்றன. மகர கர்ண குண்டலங்களினால் ஏற்படும் ஒளியினால் பிரதிபிம்பங்கள் அவருடைய பளபளப்பான கன்னப் பிரதேசங்களில் தோன்றுகின்றன. என் பிரபு நடன வேடத்தைத் தரித்துக் கொண்டிருக்கிறார். அந்த வேடத்தில் உலக முழுதும் சொக்கிப்போய்க் கிடக்கிறது. மீராதேவி சொல்கிறாள், "கண்ணப் பிரபுவின் தனிப்பட்ட அங்க அழகு, அங்க சௌந்தரியத்தில் நான் மூழ்கி, திருவடித் தாமரைகளில் அடைக்கலம் புகுந்துவிடுகிறேன்."

40. ஏ பிரபு, உம்முடைய நகத்திலிருந்து தலைவரை நிறைந்துள்ள ரூப சௌந்தரியங்களைக் காண லோபியின் ஆசையைப் போல இருக்கும் என் கண்கள் அடிக்கடி அவற்றைக் கண்டு, என் மனமானது தாவித்தாவிக் குதித்துக் கொண்டு அப்படியே அமர்ந்துபோய், திரும்பிவர மறுக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கின்றது. இவ்விதம் முழுமையான அழகுகளைக் கண்டும், மீண்டும் ஆசைப்பட்டுக் கொண்டும், ஆசை நிறைவேருமல், மீண்டும் துக்கத்தை அடைகிறேன். எப்பொழுதும் உம் வரவை நோக்கிய வண்ணம் வாசற்படியில் கவலையுடன் அமர்ந்திருக்கிறேன். என் மனம் மீண்டும் கற்பனை செய்து கொண்டிருக்கிறது; எப்போது அவருடைய சந்திர வதனத்தைக் காண்பேன், எப்போது சந்திரகிரணங்களைப் போலக் குளிர்ச்சியுள்ள அவருடைய புன்னகையைக் காண்பேன்? இவ்விதம் நான் மனவருத்தமடைவதைக் கண்டு, என் பந்து பரிவாரங்கள் என்னைத் தடுக்கிருர்கள். ஆனுல், என் வேதனையான கண்கள் அவர்களுடைய வசை மொழிகளைப் பொருட்படுத்துகிறதில்லை. அவர்களால் பல இன்னல்கள் நேர்ந்தாலும், என் கற்பனையில் நான் கண்ண பெருமானுடைய புனிதமான அணைப்பில் இருக்கிறபடியால், கிருஷ்ண சௌந்தரியங்களில் முழுமையாக ஈடுபட்டிருப்பதால், நான் மீள முடியாமல் போய்விட்டேன்! "தோழீ, அவர்கள் என்னை எவ்விதமாக நினைத்தாலும், வசை மொழிகள் சொன்னுலும், அவற்றை நான் ஏற்றுக் கொண்டேன். தோழீ, என் அனுபவங்களை உனக்குச் சொல்லிவிட்டேன்; நான் என் பிரேமை மார்க்கத்திலிருந்து நழுவிவிடமாட்டேன்; என்ன இன்னல்கள் நேர்ந்தாலும், என் பிரபு கிரிதரநாகர், அவர் துணைசேர்க்கை, சம்பந்தம் இல்லாமல் ஒருகணம்கூட உயிர்வாழ மாட்டேன்" என்று மீராதேவி சொல்கிருள்.

41. தோழீ, அழகு வடிவான கிருஷ்ணனுடைய கண்களைக் காண்பதில், என் மனம் பறிகொண்டு போய்விட்டது; என்னிடம் அது திரும்பி வர மறுக்கிறது. அவருடைய முழுமையான சௌந்தரியங்களைக் கண்டு, ஆசைப்பட்டுக் கொண்டு முழுமையாக அனுபவிக்க முடியாமல் இருப்பதற்கு நான் மிக்க துக்கத்தை அடைகிறேன். என் கண்களைப் போல், என்மனமும் மதுர மூர்த்தியாகிய அவருடைய மங்கள விக்கிரகத்தில் ஏறி அமர்ந்திருக்கிறது; ஆனுல், என்முன் அவர் தோன்றிக் காட்சியளிப்பவராக இல்லையே! அவரை எதிர்பார்த்துக் கொண்டு, என் வீட்டின் வாசலில் நின்று கொண்டு நெடுநேரம் காத்திருக்கிறேன். என் உயிர் சியாமள நிறம் கொண்ட மோகனக் கண்ணனிடம் அகப்பட்டுக் கொண்டு விட்டது; அவரே என் உயிர் போகாதபடி, சஞ்சீவினியாக இருக்கிருர்; என் உயிரை அவரிடம் அளித்து விட்டேன். என் உறவினர்கள் நான் நன்னெறியிலிருந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நழுவி விட்டேன் என்று ஏசுகிறார்கள்! ஆனால், என் மனமோ அவரிடம் சொக்கியிருக்க, அவர் என்னைப் பார்த்துச் சிரிக்கிறார்; நானும் அவரைப் பார்த்து மகிழ்ச்சியுடன் சிரித்துக் கொண்டிருக்கிறேன்; (அஃதாவது நான் உலக நிந்தையைப் பொருட்படுத்தவில்லை.)

42. தோழீ, கோமளமான கமலநயனங்களை உடைய சியாம கிருஷ்ணன் தம் கண்களால் என்னை அடித்துத் தம் வசமாக்கிக் கொண்டார். நானும் ஆசையுடன் அவரைப் பார்த்துப் பார்த்து இன்பமடைகிறேன். ஆகவே, என் கண்கள் ஒருகணம்கூட இமைகள் கொட்டுவதற்குக்கூட அவகாசமின்றித் தவிக்கின்றன. வேறு பதார்த்தங்களிலோ, வேறு பொருள்களிலோ, எனக்கு ஆசை ஏற்படவில்லை. என் இதயத்தில் பிரபு எப்பொழுதும் வசித்துக் கொண்டிருக்கிறார். அவரை நேரில் காண்பதற்கு ஒவ்வொரு நிமிஷமும் ஆசையுடன் மிகவும் வாடுகிறேன். அவருக்காக நான் சிங்காரம் செய்து கொள்கிறேன்; அவருக்குப் பணிவிடை செய்யக் காத்திருக்கிறேன். ஆகவே, மீராதேவி சொல்கிறாள், "என் பிரபு கிரிதரநாகர், அடிக்கடி என்னை அவரிடம் பலித் தியாகம் செய்து கொள்கிறேன்."

43. ஏ தோழீ, அப்பேற்பட்ட மிக்க அழகு வாய்ந்தவரும் அனுபவ (உபமானம் சொல்லமுடியாதபடி மிக உத்தமமான) அழகு சம்பத்துப் பெற்றவருமான கிருஷ்ணப் பிரபுவினிடம், என் மேனி, மனம், செல்வங்கள் எல்லாவற்றையும் அளித்துவிட்டேன். அவருடைய வடிவ அழகுக் காட்சிகளை எப்பொழுதும் பருகிய வண்ணமிருக்கிறேன். நேர்த்தியான அழகு வாய்ந்த அவரைப் பார்த்துப் பார்த்து, உயிர் வாழ்ந்துகொண்டிருக்கிறேன். மீராதேவி சொல்கிறாள், "நானே மிக்க பாக்கியசாலி, என் பிரபு இராமன் தான்; அவரிடம் பக்தி செலுத்துவது மிகவும் பாக்கியத்தைத் தருவது; மிக மகிழ்ச்சியையும் நிம்மதியையும் அளிக்க வல்லது."

44. நான் கண்ணன் முன்பு நாட்டியமாடுவேன். அவரை மகிழ்ச்சி அடையச் செய்வேன். என் கால்களுடன் அவருடைய ஆசையை இணைத்துக் கட்டிவிடுவேன்; என் பக்தி விருப்பத்துக்கு ஒருதேர்வு நடத்துவேன்; இதனால் உலகத்தாரின் நிந்தையையோ, குலத்தின் மரியாதைகளையோ நான் பொருட்படுத்தப் போகிறதில்லை;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என் மானம், உடைமை எல்லாவற்றையும் பிரபுவினிடம் அளித்துவிட்டேன். மீராதேவி சொல்கிருள், "நான் அவரிடம் சொக்கிப்போய், ஒரு கணம்கூட அவரைவிட்டுப் பிரியமாட்டேன்; அவருடைய பிரேமை பலவித வண்ணங் களுடன் ஒளிமயமாக இருக்கின்றது."

45. மீராதேவி சொல்கிருள், "எனக்குக் கிரிதர கோபாலரைவிட, வேறு ஒன்றும் இல்லை. அவரே எனக்கு உயிர்நாடி. இந்தப் பரந்த உலகில் அவரைவிட எனக்குப் பிடித்தமான பொருளோ, கணவனே, சுவாமியோ வேறு ஒருவரும் இலர். நான் சாதுக்களிடம் சேர்ந்து வசிப்பதை உலகத்தார்கள் நிந்திக்கிருர்கள். ஆனல், என் பிரபு தம் பக்தன் யாரோ அவரிடம் பிரேமை கொள்ளுகிருர். அவர் களிடம் (சம்சாரிகளிடம்) இந்தப் புத்தியைக் கண்டு நான் கழிவிரக்கம் கொள்கின்றேன். ராணுவுக்கும் என்னுடைய கண்ணன் பக்தி பிடிக்கவில்லை; நஞ்சை எனக்கு அனுப்பி வைத்தார்; நான் மிக்க மகிழ்ச்சியுடன் அதைக்குடித்து விட்டேன். மீராதேவி சொல்கிருள், "எப்போது என் பிரபு கிரிதர நாகரிடம் பக்தியன்பு ஏற்பட்டதோ, அப் பொழுதி லிருந்து என்னை அவரிடமிருந்து பிரிக்க முடியாது."

46. சகோதரர்களே, எனக்குக் கண்ணபிரானிடம் அதிகப் பிரேமை ஏற்பட்டுவிட்டது; அவருடைய விருப் பத்துக்காக, நான் என்னை அலங்கரித்துக் கொண்டு, கால் களில் சலங்கை கட்டிக்கொண்டு அவர் முன்பு நாட்டிய மாடுகிறேன்; என் "பாவ"ப் பிரியம் அதிகரிக்க, நான் அவரைப் பற்றி இன்னிசை (சங்கீதம்) பாடுகிறேன்; சாதுக்களின் கூட்டத்தால் என் கெட்ட அறிவு நட்டம் அடைகிறது. எனக்கு உண்மையான ஞானம் ஏற்பட்டு விட்டது. இரவுபகல் என்று பாராமல், கண்ணனுடைய புகழ்மாலைகளைப் பாடிக் கொண்டிருக்கிறேன். இதனல் கால ரூபியாகிய நாகத்திலிருந்து காப்பாற்றப் பட்டேன். கண்ணனைத் தவிர, மற்ற எல்லாப் பொருள்களும் பொய்ப் பொருள்கள். மீராதேவி சொல்கிருள், "என் பிரபு கிரிதர நடநாகர்; கண்ணனிடம் அன்புதான் மிகச் சிறந்தது; அவர் அற்புதமாகப் பல லீலைகளைச் செய்கிருர்; மகிழ்ச்சியைத் தருகிருர்."

47. நான் கண்ணனுடைய வீட்டிற்குச் செல்வேன். அவருடைய அழகைப் பருகுவேன். இரவு பகல் முழுவதும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவருடன் விளையாடுவேன். அவர் எந்த உடையைக் கொடுக்கின்ருரோ, அதை அணிந்து கொள்வேன்; அவர் எதைச் சாப்பிடக் கொடுக்கிருரோ, அதைச் சாப்பிடுவேன். என்னுடைய காதலன்பு மிகமிகப் பழைமையானது. எங்கு உட்காரச் சொல்கிருரோ, எங்கு என்னை அனுப்புகிருரோ, அவ்விதம் செய்வேன். ''என் பிரபு கிரிதரநாகர், நான் அவருக்கு அடிக்கடி வணக்கம் செய்கிறேன்.''

48. தோழீ, நான் தினமும் சியாமக் கண்ணனிடம் சென்று, அவருடைய காட்சி பெறுவேன். என் சிந்தனை, செயல் எல்லாம் கண்ணனே. அவரையே நான் எப்போதும் மனத்தில் வணங்கிக் கொண்டு வருகின்றேன்; சியாம நிறம் சருவாலங்கார கம்பீர உருவத்துடன் அவர் விளங்குகிருர். அவர் பூமியில் தம் திருவடிகளை வைத்திருக்கிருர்; எப்போதும் மகிழ்ச்சியாக நடனமிடுகின்ருர்; நானும் அவருடன் கூடச் சேர்ந்து இன்பக் கூத்தாடுகின்றேன். ''ஆகவே என் பிரபு கிரிதரநாகர். அவருடன் கூடவே வசித்துக் கொண்டிருக் கிறேன்'' என்று மீராதேவி சொல்கிருள்.

49. தோழீ, நான் கண்ணபெருமானை விலைக்கு வாங்கி விட்டேன். நீ கேட்கிற கேள்விக்கு இதுதான் பதில் அளிப்பேன்; நான் விலைகொடுத்துக் கண்ணப் பிரபுவை விலைக்கு வாங்கிவிட்டேன். ஒளிவுமறைவாக விலைக்கு வாங்கினேன் என்று எண்ணிவிட வேண்டாம். நான் இந்தப் பொருள் விலை மலிவா, அதிகமா என்று தராசில் நிறுத்துப் பார்ப்பதுபோல நிறுத்துப் பார்த்து அதன்பிறகு அளவு எடுத்துப் பார்த்து, இந்தப் பிரபுவை விலைக்கு வாங்கினேன். நான் இந்தப் பிரபுவினிடம் எல்லாம் ஒப்புவித்து விட்டேன்; என்னிடம் இருந்த விலை மதிக்கமுடியாத பொருள்கள் அனைத்தையும் அளித்துவிட்டேன். ஆகவே, ''ஏ பிரபு, மீராதேவிக்கு உன் காட்சியைக் கொடுக்கமாட்டாயா? என் முன்பிறவிகளிலே கொடுத்த வாக்குறுதியை நினைக்க மாட்டாயா?'' என்று மீராதேவி கேட்கிருள்.

50. தோழீ, நான் என்ன விதமாகச் சொல்வேன்? என் மனம் கண்ணபிரானிடம் சொக்கிவிட்டது. அதனுல் என் பிரேமை அழகுடன் பிரகாசிக்கிறது. நான் பல நிறமுள்ள உடைகள் அணிந்துகொண்டு அவருடன் விளையாடுகிறேன்; அஃதாவது, என் உடம்பில் இருக்கும் ஐம்புலன்கள், ஆன்மா இவற்றுடன் கண்ணனுகிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பேரருளாளரைக் காண விரும்புகிறேன். முன்வினையினால் அடையப் பெற்ற இந்த உடலை உதவியாகக்கொண்டு, என் இதயத்தில் என் பிரபுவை ஆதாரமாக வைத்து, நான் வேறு ஒருவருடையவரின் சொத்து என்று பாராமல் கணவன், பதி இவற்றிலிருந்து ஆசையை நீக்கி, கண்ணனை அடையப் பார்க்கிறேன். அவரை எப்போதும் வழிமேல் விழிவைத்து, இரவு பகல் என்று பாராமல் அவரை எதிர்பார்க்கிறேன். என் பிரபு கிரிதரநாகர், இரவுபகல் என்று பாராமல் அவரை எதிர்பார்க்கிறேன் - என்று மீராதேவி சொல்கிருள்.

51. எனக்குப் பெரிய வீட்டில் பூட்டுப் போடப்பட்டுச் சம்பந்தம் கிடைத்துவிட்டது. இதில் இனி எனக்கு இடமில்லை. (அஃதாவது இவ் வுலகம் இனி எனக்கு இடமளிக்காது.) உலக வாழ்வில் சுவை அடங்கிவிட்டது. உலக வாழ்வின் ஆடம்பரங்களில் எனக்கு ஆசை இல்லை. ஆசைகளும் எனக்கு நசித்துப் போய்விட்டன. இதற்குக் காரணம் என் முன்பிறவிகளின் நல்வினைதான். கங்கை, யமுனை, பெருங்கடல் இவற்றில் நான் நீராடுவதை விட்டுவிட்டு, ஒரு சிறிய குளத்திலோ, கிணற்றிலோ நீராடலாமா? கண்ணபெருமானை என் மேலான தெய்வமாகப் பெற்றுவிட்டு, நான் வேறொரு சாதாரண தெய்வத்தை அடைவேனே? அந்தப் பிரபுவின் அரசவையை நான் அடைந்துவிட்டு, மற்ற உலகத்தவர்களின் நன்மதிப்பையோ, அல்லது காவலாளியின் (சர்தாரின்) இடத்தையோ அடைய விரும்புவேனே? கண்ணனுடைய பேட்டி, காட்சியை விட்டுவிட்டு, மற்ற உலகத்தினரைப் போலச், செல்வங்களைத் தேடுவதில் முயல்வேனே? பொன், வெள்ளி, ஆபரணம், இவற்றால் எனக்கு என்ன பயன்? எனக்கு நல்வினை கண்ணபிரானால் தான் ஏற்படக் கூடும். தேவாம்ருதத்தைக் (தேவரமுதைக்) குடிப்பதை விட்டுவிட்டுக், கசப்பு மிகுந்த வேப்பஞ் சாற்றை யாராவது குடிக்க விரும்புவார்களா? இரும்பை அடைத்து விட்டு, உடைந்து போகும் கண்ணாடியினால் என்ன இலாபம் ஏற்படும்? வயிரத்தை அடைந்துவிட்ட பின்பு, நான் சாதாரணக் கண்ணாடிக்காகச் சிரமம் எடுத்துக்கொள்வேனா? வயிரத்தை அடைந்த பின்பு வெள்ளி தங்கத்தால் எனக்கு என்ன இலாபம்? ஆகவே என் நண்பர்கள், பக்த அன்பர்கள், சாதுக்கள். அவர்களை விட்டுவிட்டு, மட்டமான - துச்சமான மனிதர்களையோ, பொருள்களையோ நான் நாடுவேனே? ஆகவே மீரா சொல்கிருள், "என் சுவாமி கிரிதரநாகர்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவரே என்னுடைய உண்மையான மனவிருப்பங்களை நிறைவேற்றுவார்.

52. மீராதேவி சொல்கிருள், "என்மீது கண்ணனுடைய அடையாளங்கள் (ரங்க - வர்ணம்) படிந்திருக்கும்போது இன்னொரு அடையாளம், இன்னொருவரின் அடையாளங்கள் ஏற்படுவதற்கு இடமில்லை. அஃதாவது கண்ணபெருமான் மீது ஏற்பட்டிருக்கும் பக்திப் பிரேமையில் ஊறிப்போயிருக்கும் எனக்கு வேறொரு தெய்வத்தினிடமோ, பதியினிடமோ நம்பிக்கை, பக்திக்காதல், ஏற்படுவதாக இல்லை. எனக்கு நகை, ஆபரணங்கள், பட்டாடைகள் இவற்றிலும் விருப்பம் ஏற்படவில்லை. நான் எப்போதும் கண்ணபிரானுடைய மங்கள குணங்களைப் பாடி மகிழ்ச்சி அடைவேன். என்னை நிந்தித்தாலும் புகழ்ந்தாலும் நான் கண்ணன்மீது வைத்திருக்கும் அன்பிலிருந்து நழுவமாட்டேன். எந்த அரசபாதை வழியாக நான் சென்றுகொண்டிருக்கிறேனே, அந்த வழியிலே சென்று வெற்றி பெறுவேன். நான் திருடவில்லை, கெட்ட செயல்கள் ஒன்றும் செய்யவில்லை; பிறர் எவருக்கும் துன்பம் செய்யவில்லை. ஒருமுறை நான் கண்ணபிரானைக் காதல் செய்துவிட்டு வேறொரு அற்பரிடம் அன்பு செய்வதற்கு ஆர்வம் இல்லை. வாழ்க்கை இன்பங்களிலும் ஆசையும் இல்லை.

53. தோழீ, மனிதப்பிறவியை அடைந்துவிட்டு, பிறப்பு விடுதலைக்கு வழியைத் தேடு. வா, வேறு செயல்களிலோ, வேறுவீட்டில் போய் வசிப்பதையோ விட்டுவிட்டு, வீடுபேற்று வழியில் (முத்திநெறியில்) மனம் வைத்து உலகியலில் இருந்து விடுதலைபெற முயல்வாயாக. இந்த உலகத்தில் எல்லாப் பொருள்களும் நசிவடைந்து போகின்றன. மாணிக்கம், முத்து என்று சொல்லக் கூடிய விலை உயர்ந்த பொருள்கள் எல்லாம் பொய். இவற்றின் ஒளி உண்மையான ஒளியாகாது. இவற்றைவிடக் கண்ணபிரானிடம் அன்பு செலுத்துவதுதான் மேலானது. அதுவே நிலையானது. பட்டாடைகள் எல்லாம் அழியக்கூடியது. இந்த உடல், தீவினை நல்வினைகளிலிருந்து விடுபட்டு, நிர்மலமாக ஆகவேண்டும். அதுவே நிலையான கண்ணன் அன்பு ஆகும். ஐம்பத்திரண்டு விதமான உணவுவகைகள் அடங்கிய சிறந்த உணவு; அதை விட்டுவிட்டு, மற்ற உணவை உண்ணலாமா? கண்ணன் அன்பு மிகவும் சிறந்த உணவு. இந்த உணவில் இல்லாத சுவை வேறு எந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உணவில் இருக்கிறது? மற்ற உணவுகளின் சுவை கசப்பானது. எங்கேயாவது பாலைவனத்தையோ அல்லது ஒன்றும் விளையாத மருத நிலத்தையோ கண்டு விருப்பம் வைக்கலாமா? கானல் நீரினால் தாகம் அடங்குமா? மற்ற உணவுகள் பயனில்லை, ஆகவே என் பதி என்று நம்பிக்கை ஏற்பட்ட காரணத்தினால், எனக்கு வேறொன்றிலும் மன நாட்டம் இல்லை. என் அங்கம் உறுப்பு குறையுள்ளவையாக இருக்கட்டும்; தொழுநோய் உடையவராக இருக்கட்டும்; எனக்குப் பிடித்தம்தான். அந்தப் பதி அன்பே - அதுவே எனக்கு உண்மையானது; போதுமானது, அழியாதது. மீராதேவி சொல்கிறாள், "எனக்கு அன்பர், மிகச் சிறந்த தலைவர், பதி கிடைத்து விட்டார்; அவரை நேசிப்பதுதான் என் அன்புநெறி; அவர் என்மீது கட்டாயம் இரக்கம் கொள்வார்."

54. தோழீ, எனக்குக் கனவில் கண்ணனுடன் திருமணம் நிகழ்ந்து விட்டது. அவர் என்னைப்போன்ற அபலைகளைக் காக்கும் ஏழைபங்காளர். என் திருமண நிகழ்ச்சிக்கு முப்பத்து மூன்றுகோடி தேவர்களும் வந்திருந்தனர்; கிருஷ்ணப் பிரபு மாப்பிள்ளையாக வந்திருக்கும்போது எனக்குக் குறை ஏது? என் பிரபு கனவில் காட்சிதந்து, என்னைத் திருமணம் புரிந்து கொண்டார். ஏ தோழீ, எனக்குக் கனவின் வழி எல்லாப் பாக்கியங்களும் ஏற்பட்டு விட்டன. எனக்குக் குறை ஒன்றும் இல்லை. மீராதேவி சொல்கிறாள், "என் முன்வினையின் புண்ணியப் பயனாக, எனக்குக் கிரிதர கோபாலன் கணவனாக இந்தப் பிறப்பில் வாய்த்தார்; அவரை நான் பதியாக அடைந்தேன்."

55. தோழீ, என்னை நீ தடுக்காதே! நான் சாதுக்களை வணங்குவதற்குச் சென்றுகொண்டிருக்கின்றேன். என் இதயத்தில் கண்ணன் எப்போதும் குடிகொண்டிருக்கிறார். அதனால் எனக்கு மற்றப் பொருள்களின்மீது ஆசை ஏற்படவில்லை. எல்லாரும் இரவில் தங்கள் சுகத்திற்காகத் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், எனக்கோ தூக்கம்வரவில்லை. எவனுக்குக் கண்ணன் காதல் இல்லையோ, அவன் கட்டாயமாக அஞ்ஞானியாகவும் முட்டாளாகவும் இருக்கவேண்டும். எனக்குக் கண்ணனிடம் மிகுதியாகக் காதல் ஏற்பட்டிருப்பதால் எனக்குத் துக்கங்களும், விரகத்தீயினால் ஏற்படும் தாபங்களும் ஏற்படுகின்றன; அதனால் எனக்குத் தூக்கம் வருவதில்லை. பிற தெய்வங்களிடமும் மனம் ஈடுபடுவதாயில்லை. கண்ண

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாகம் எடுத்து அலையும் எனக்குக் கண்ணனாகிய அன்பமுது தான் பிடித்தமானது. அதுதான் எனக்கு மிக்க மகிழ்ச்சியை அளிக்கக் கூடியது. கண்ணனுடைய சியாமநிறம், அவருடைய நிரதிசயமான முகப் பொலிவு, இவற்றைக் காண நான் சென்றுகொண்டிருக்கிறேன். கண்ணனுடைய விரகிணிப் பெண்ணாக ஆகிவிட்டேன். ஏ கண்ணா! என்னை உன்னுடைய பொருளாக நினைத்து, எப்பொழுது என்னை ஏற்றுக் கொள்ளப் போகிறாய்?

56. நான் பலமுறை முயன்று என்னை அடக்கிக் கொண்டேன்; என் மனம் சியாமகண்ணனை அடையாமல் அமைதி உறாது. எனக்குப் பல இடையூறுகள் ஏற்படினும், நான் கண்ணனை விடப்போவதில்லை. நான் சாதுக்களுடன் கலந்து, சுகத்தை அடையப்போகிறேன். இதனால் உலக நெறிகளிலிருந்து விலகிவிட்டேன். மீராவின் உடலும் மனமும் நசிக்கட்டும்; என் ஆன்மா கண்ணனை அடைந்து விட்டது. என் தலைமீது கண்ணனின் காதலன்பை அணிந்து கொண்டேன். என்னை யார் எது வேண்டுமானாலும் சொல்லட்டும்; எனக்குப் பரவாயில்லை. அவற்றை நான் கண்ணனின் காதலுக்காகப் பொறுக்கிறேன். கண்ணபிரான் அவினாசி. அவரை நான் புகலடைந்துவிட்டேன். அவர்தாம் என் மானத்தையும் நாணத்தையும் காப்பாற்றவேண்டும். அஃது அவருடைய பொறுப்பு.

57. ஏ ராணா, நான் சாதுக்கூட்டங்களை அடைந்து மெய்யுணர்வைப் பெற்றுவிட்டேன். இதுதான் என் நல்வினைப்பயன். எந்த ஒருவன் சாதுக் கூட்டத்தை அடைந்து வசித்துக்கொண்டிருக்கிறானோ, அவனுக்கு எல்லா நல்ல குணங்களும் வந்து சேருகின்றன; அவனுடைய உள்ளொளி வளர்ச்சி அடைகிறது; ஆனால், நீசர்களின் கூட்டுறவினால் ஒருவனுக்குக் கீழான நிலை ஏற்படுகிறது. ஆகவே, சாதுக்களின் கூட்டுறவு, அவர்களுடைய பாத தூளிகள் அளவற்ற மகிமைகள், சிறப்புகள் கொண்டன. மூர்க்கர்கள், நீசர்கள் மேலான நிலையை அடைந்தார்களென்றால், அவர்கள் சாதுக்களின் உதவியினாலேதான்—சாதுக்களின் பாததூளிகளை அடைந்ததால் அன்றோ அந்நிலையை அடைந்தார்கள்? எவர்கள் சாதுக்களை நிந்திக்கிறார்களோ, அவர்கள் நரக குண்டத்திற்குப் போகிறார்கள்; மீளாதபடி துக்கங்களை அனுபவிக்கிறார்கள். மீரா சொல்கிறாள், "என் பிரபு கிரிதர கோபால்; என் பாதுகாப்புப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொறுப்பு அவரிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. என் தலையின்மீது சாதுக்களின் பாததூளிகள் படிந்து, என்னை அலங்கரிக்கின்றன.''

58. தோழீ, நான் கண்ணபிரானுடைய பண்புகளை எப்பொழுதும் பாடிக்கொண்டிருக்கிறேன். நான் நாள் தோறும் பிரபுவின் திருவடியமுதைக் குடிப்பதற்குக் கோயி லுக்கு வருவேன். அவரை வணங்குவேன்; அவர் முன் னிலையில் நாட்டியமாடுவேன். அவருடைய வடிவழகைக் கண்டு இன்புறுவேன்; நாமத்தை உச்சரிப்பேன். இவ்விதம் நான் வாழ்க்கைக்கடலைத் தாண்டுவேன். எனக்குப் பல துன்பங்கள், ஆபத்துகள் ஏற்படட்டும். எனக்கு என் கண்ண னிடம் அழியாத காதல் ஏற்பட்டிருக்கிறது. என் பிரபு கிரிதர கோபால், அவரைப் பாடுவதிலேதான் எனக்கு அதிக சுகம் இருக்கிறது.

59. ஏ மன்னவா, எனக்கு இலௌகீக (பிராகிருத) சுகங்களிலோ, வாழ்க்கை இன்பங்களிலோ சுவை இல்லை. உம்முடைய தேசத்தில் சாதுக்கள் வசிக்கிருர்களில்லை; எல்லா மக்களும் கடவுளன்பை மறந்து எல்லாரும் மதம் பிடித்து, உலகியலில் மூழ்கி யிருக்கிருர்கள். கைகளில் வளைகளை அணிவதைக்கூட விட்டுவிட்டேன். தைத்திங்களில் நெற்றியில் திலகம் இடுவதையும் விட்டுவிட்டேன், கண் களில் மை இடுவதையும் விட்டேன்; தலையை வாரி அலங் காரம் செய்துகொள்வதையும் விட்டேன்; இவ்வாறு உலகியலில் ஒவ்வொரு பொருள்களையும் தியாகம் செய்து விட்டேன். மீரா சொல்கிருள், ''எனக்குக் கிரிதர கோபால் தாம் சுவாமி. அவரை நான் முழுமையாக அடைந்து விட்டேன். எனக்கு இனி ஒன்றும் ஆகவேண்டியதில்லை.''

60. ஏ ராணு, கண்ணன் காதலால் ஏற்பட்ட கூட்டுறவைப்பெற்ற என்னைத் திட்டியபோதிலும், எனக்கு மிக்க மகிழ்ச்சியே! எனக்குக் கண்ணன்மீதுள்ள காதல் மிகுகின்றதே ஒழிய, வேறு மாறுபாடு ஒன்றும் ஏற்படுகிற தில்லை; எனக்கு விகாரம் ஒன்றும் ஏற்படவில்லை. நான் நெறியில் வேருன்றிப்போய் நிலையாக இருந்துவிட்டேன். எனக்குச் சத்குரு கிடைத்து விட்டார். என்னுடைய அஞ்ஞானமும் அகன்றுவிட்டது. ஆகவே, பக்திநெறியை விட்டுவிட்டு, நான் எவ்வாறு சம்சாரிகளின் நெறியினை அடைவேன்? ஆகவே, மெய்யறிவாளர்களின் கூட்டுறவை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எப்போதும் அடைந்தவளாகவும், அதனால் நிறைவான ஞான ஒளியை அடைந்தவளாகவும் இருப்பேன். மூர்க்கர்கள் என்னுடைய கிரகநிலையைக் கண்டு பலவிதமாக ஏசுகிறார்கள். அதனால் நான் சிறிதும் வருத்தம் அடையவில்லை. மீரா சொல்கிறாள், "என் சுவாமி கிரிதர கோபால், கிரிதரநாகர், மூர்க்க மக்கள் என்னைப் பலவிதமாகத் துன்பம் செய்த போதிலும், எனக்கு விகாரம் ஒன்றும் கிடையாது, மன மாறுதல் ஒன்றும் ஏற்படாது."

61. ஏ ராணா, நீர் என்னை முற்றிலும் வெறுக்கிறீர். உம்முடைய உலகம், சேர்க்கை, மரங்களில் "கரீல்" மரத்தைப் போல என் மனத்தில் பிரியமில்லாததாக இருக்கிறது. ஏ ராணா, எனக்கும் இதில் மன ஈடுபாடு ஏற்படவில்லை. ஆகவே, நான் என் கண்களுக்கு மை இடுவதையும், என்னைப் பலவிதமாகச் சிங்காரித்துக்கொள்வதையும் விட்டுவிட்டேன். ஆகவே, மீரா சொல்கிறாள், "எனக்குக் கிரிதர கோபால்தாம் சுவாமி, கிரிதரநாகர்தாம் பதி, அவர்தாம் எனக்கு வாழ்க்கையின் அமுது. என் இருப்பிடத்தை அவர் அமுதமாக ஆக்கிவிட்டார்."

62. தோழீ, மூர்க்ககுணமுள்ள ராணா கோபித்து என்னைத் தேடி என் சுவையையும் ஆசைகளையும் தெரிந்து கொண்ட பின்பு, அவரால் என்ன செய்ய முடியும்? எனக்கு அவர் பல இன்னல்கள் விளைவிக்கட்டும். நான் கண்ணன் மீதுள்ள காதலை விடமாட்டேன். கண்ணபிரானின் பண்புகளைப் பாடித்தீர்வேன். ராணா கோபித்துக்கொண்டால், என்னைத் தேசத்தை விட்டுத் துரத்திவிடுவார்......எனக்கு அதுவும் பரவாயில்லை. கண்ணபெருமான் மட்டும் என்னிடம் அன்பு செலுத்திவிட்டால், எல்லா இன்னல்களும் மறைந்து விடும்! மனம் சாந்தி அடையும். உலகத்தாரின் நிந்தைகளை நான் பொருட்படுத்தப் போவதில்லை. அச்சம் சிறிதும் இல்லாமல் நான் கண்ணபிரானிடம் கவலையற்ற காதலைச் செய்வேன். மேகநிறக் கண்ணனாகிய ஓடத்தின்மீது சென்று நான் பாவமாகிய பிறவிக்கடலைக் கடப்பேன். மீரா சொல்கிறாள், "மிக்க திறமைசாலியான சாம்பல்நிறமுள்ள கண்ணபிரானுடைய திருவடிகளில் அடிபணிந்து எப்போதும் மூழ்கியிருப்பேன்."

63. நான் சலங்கைகளை அணிந்துகொண்டு என் பிரபு கிரிதரநாகர் முன்பு நாட்டியமாடுவேன். மகிழ்ச்சிமிக்க

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காதல் சார்பான நான் செய்யும் நடனத்தைக் கண்டு உலகத்தார்கள் ஏசுகிறார்கள். எனக்கு அறிவு பேதலித்து விட்டது, நான் குல மரியாதைகளையும், பெண்ணுக்குரிய வரம்புகளையும் மீறி நடக்கிறேன் என்று என் மாமியார் முதலானோர் திட்டுகிறார்கள். என்னைக் கொல்வதற்கு நஞ்சை என் பதி ராணா அனுப்பிவைத்தார். நான் கண்ண பிரானின் திருவடிகளில் அடிபணிந்து, என் ஆன்மாவை அவரிடம் அடைக்கலம் செய்துவிட்டேன். என் பிரபுவின் காட்சியை நான் அடைந்துவிட்டதால் நான் தாகசாந்திக்கு அமுதத்தைக் குடிப்பதுபோல அந்த நஞ்சைக் குடித்தேன். என் பிரபு என் உள்ளமாகிய கோயிலில் எப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். மீராதேவி மீண்டும் சொல்கிறாள், "ஏ கிரிதரநாகர், உன் திருவடிகளில் அடிபணிந்துவிட்டேன், என்னைக் காப்பாற்றவேண்டும். அஃது உம் பொறுப்பு."

64. ஏ ராணா, நான் நாராயணப் பிரேமையில் மூழ்கி விட்டேன். நான் தாளங்களைத் தட்டிக்கொண்டு, மிருதங்க தாளத்துடன், சாதுக்கூட்டத்துடன் சேர்ந்து, அவர்களுடன் கூடி நாட்டியமாடுகிறேன். எல்லாரும் எனக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதாக ஏசுகிறார்கள். அவர்களுக்கு என்னுடைய அந்தரங்கக் காதலைப் புரிந்துகொள்ள இயலவில்லை. அவர்களால் உன்மதத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை. என் பிரபு கண்ணனிடம் மோகம் இல்லை. ஆனால், என் பதி ராணா என் நடத்தையைக் கண்டு நஞ்சை அனுப்பிவைத்தார். நான் அதைப் பொருட்படுத்தாமல் குடித்துவிட்டேன். மீரா சொல்கிறாள், "என் சுவாமி கிரிதரநாகர்; எத்தனையோ பிறவிகளாக நான் அவரைக் காதலிக்கிறேன், என் காதல் அவரிடம் அளவு கடந்தது."

65. ராணா எனக்கு நஞ்சினை அளித்தார். அதை நான் குடித்துவிட்டேன். இந்த மர்மமும் எனக்குத் தெரியும். என் உயிரைப் போக்குவதற்கு ராணா திட்டமிட்டுவிட்டார். நஞ்சைக் குடித்தபின்பு, என் கிருஷ்ணபக்தியும் 'காதலும் கொழுந்துவிட்ட தீப்போல் சுடர்விட்டு எரியத் தொடங்கி விட்டது. என்னுடைய தவசக்கரமும் பலமடைந்து விட்டது. புடமிட்ட தங்கம்போல் ஒளிவிடத் தொடங்கிவிட்டது. ஆகவே, குல மரியாதைகளையும் உலக மரியாதைகளையும் தாண்டி விட்டேன்; வெள்ளம் கரையுடைத்து எங்கும் பரவுவதுபோல நான் எங்குஞ் செல்லத் துவங்கி விட்டேன். என் கட்டுப்பாடுகள் நாசமடைந்து விட்டன. நானே ஆற்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லற்ற அபலை, எனக்குப் பயித்தியம் பிடித்துவிட்டது. அதனால் எது நல்லது, எது கெட்டது என்கிற வேறுபாடுகள் தெரியவில்லை. என் இதயத்தைக் காதல் என்கிற அபபராத தூணியிலிருந்து வரும் அபபு பிளந்துவிட்டது. ஆழமாகப் புணபட்டுவிட்டது. என் உடல், செல்வங்கள், கறபு எல்லாம் கிரிதர கோபாலனிடம் அளித்துவிட்டேன். என் வாழ்நாள்களையும் சாதுக்களிடம் அளிதததுவிட்டேன். என்னுடைய உடைமைகளனைத்தையும் கிரிதரகோபால் ஏற்றுக் கொண்டுவிட்டார். ஏ பிரபு, மீரா உன்னுடைய அடிமை என்று அறிந்துகொண்டு என்னைக் காப்பீர்.

66. தோழீ, நான் எப்பொழுதும் கோவிந்தனுடைய கலியாண குணங்களையே பாடிப்பாடி இன்பமடைகின்றேன்; என்னை இந்தச் செயலிலிருந்து விட்டுவிலக ராணு நினைப்பாராகில், நான் அவருடைய தேசத்தை விட்டு ஓடிப்போய் விடுகிறேன். ராணு நஞ்சு கொடுத்து என்னைக் கொல்வதற்கு நினைத்தார். நானே அந்த நஞ்சைக் கண்ணனுடைய புகலமுதமாக நினைத்து அதைக் குடித்துவிட்டேன். ராணு என்னுடைய இடுப்பை அலங்கரிப்பதற்குக் கருநாகத்தை அனுப்பிவைத்தார். அதை நான் சாளிக்ரம சிலையாகக் கண்டேன். மீரா சொல்கிருள், "இப்பொழுது நான் கண்ணன் காதலால் பயித்தியம் கொண்டுவிட்டேன். என் பதியாக மேகவண்ணக் கண்ணரை அடைந்துவிட்டேன்."

67. தோழீ, கண்ணனிடம் பக்திக்காதல் என்னிடம் நன்ருக அடைந்துவிட்டது; என் உடம்பு முழுவதும் அந்தக் காதலின் நிறம், கறை படிந்துவிட்டது. அதிகமாக சாயம் (நிறம்) ஏறிவிட்டது. கோடி உபாயங்கள் செய்த போதிலும், இந்தக் கறை போகாது. ராணு என்னைக் கருநாகத்தைத் தழுவும்படி சொன்ஞர். நான் அதை எடுத்து என் கழுத்தில் மாலையாக அணிந்து கொண்டேன்; நீலமணிமாலையைப் போல, மிக்க மகிழ்ச்சியான மனத்துடன் அதை ஏற்றுக் கொண்டேன். இதற்குப் பிறகு ராணு நஞ்சை அனுப்பிவைத்தார். நான் கோவிந்தனுடைய கலியாணகுணங்களைப் பாடி, அவருடைய புகலமுதமாக நினைத்து அந்த நஞ்சினைக் குடித்தேன். கண்ண பிரானுடைய நாமத்தை உச்சரித்துக் கொண்டு, அதைக் குடித்தேன். இதைவிட வேறு செய்தி எனக்கு என்ன வேண்டும்? என்பிரபு கிரிதரநாகர், அவரிடம் என் காதல் பழுத்துவிட்டது. அவருடைய காதலின் நிறம் ஆழமாக என்னிடம் பதிந்துவிட்டது. சாயம் போகக்கூடிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிறமாக இருந்தால், அது போய்விடும்; ஆனால், இந்த நிறமோ முழுவதும் நன்றாகப் படிந்து கறையேறி விட்டது. ஆகவே கண்ணபிரானின் காதல் என் மனத்தை விட்டு அகலாது.

68. மீராதேவி கண்ணனுடைய குணப்பெருமைகளைப் புகழ்ந்து மனம் நிறைவு கொள்கிறாள். ராணாவோ அவளுக்குக் கிருஷ்ண நாகத்தை அணிந்து கொள்வதற்கு அனுப்பகிறார்; அந்த நாகமோ மீராவின் கையில் புகுந்ததும், சாளிக்ராம மூர்த்தியாக ஆகிவிட்டது. அதுபோல் நஞ்சும் அமுதமாகி விட்டது. ராணாவோ முள்படுக்கையை அனுப்பி வைத்தார். இரவில் மீராதேவி அதில் படுத்துக் கொண்டதும், அந்த முள் படுக்கை மலர்ப் படுக்கையைப் போல ஆகி விட்டது. ஆகவே மீராதேவி மீண்டும் சொல்கிறாள், "என் பிரபு கிரிதர நாகர் என் உதவிக்காக எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறார். எல்லா இன்னல்களையும் நாசம் செய்கிறார். அவரை நான் எப்போதும் பாடியவண்ணம் இருக்கிறேன். அவரையே நான் கதியாக அடைந்திருக்கிறேன். என் தலை அவரை வணங்கிய வண்ணம் இருக்கிறது."

69. தோழீ, எனக்குக் கண்ணன் இல்லாமல் வாழ முடியாது. இந்தக் கண்ணபக்திக்காக, என் மாமி என்னுடன் நாள்தோறும் சண்டை செய்கிறாள்; ராணாவும் என்னிடம் வெறுப்படைந்து, பகையாக இருக்கின்றார். அவர்கள் என்னை விலங்கால் கட்டிப்போட்டிருக்கிறார்கள். கண்ணபிரானிடத்தில் எனக்கு முன்பிறவிகளில் இருந்தே அன்பு ஏற்பட்டிருக்கிறது ஆகவே அதை நான் எவ்வாறு தணியச் செய்ய முடியும்? பழைமையானதும் என்றும் புதிது புதிதாக வளர்ந்து கொண்டிருக்கின்றதுமான காதலை நான் எவ்வாறு மறக்க முடியும்? மீரா சொல்கிறாள், "என் சுவாமி கிரிதர நாகர், அவரைவிட எனக்குப் பிடித்தமானவர் ஒருவரும் இலர்."

70. எனக்கு எவ்வாறு, எப்போது, என்னுடைய பேரன்பராகிய கண்ணனைக் காண்பது, பேசுவது என்று தெரியவில்லை. என் முன்பு இன்னும் அவர் காட்சி கொடுக்கவில்லை. ஆனால், ஒன்று மட்டும் எனக்குத் தெரியும். நான் வசிக்கும் இடத்திற்கு வருகிறார். திண்ணையில் வந்து நிற்கிறார், அவரிடம் செல்லும் சமயம், அவர் மறைந்து போகிறார். சில சமயங்களில் அவர் மறைந்த பின்பே அவர் வந்து விட்டுப் போயிருக்கிறார் என்று தெரியவருகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவர் எப்பொழுது மீண்டும் வருவார் என்கிறதும் தெரியப் படவில்லை. அவரை எதிர்பார்த்துக்கொண்டு நான் இரவு முழுவதும் விழித்துக்கொண்டே கழிக்கிறேன். நான் தேடப் போனால், அவர் மறைந்து விடுகிறார்; நான் தளர்ச்சி அடைந்தபோது, என் முன் நிற்கிறார். ஆனால், எப்போது மறுபடியும் வருவார் என்று சொல்வதற்குமில்லை. என்னுடைய வீட்டின் புற்றத்தில் நடமாடுகிறார், ஆனால், எப்போது வந்தார், எப்போது வருவார், என்பதும் தெரியவில்லை. ஆகவே அவருடைய காட்சி எனக்குக் கிடைக்கவில்லை. என் இதயம் விரகத் தீயினால் கொளுத்தப்பட்டு எரிகிறது; அதனால் நான் மிக்க வேதனைப்படுகிறேன். ஏ கண்ணா, மீரா உன்னுடைய அடிமை. உம்முடைய செயல்கள் விசித்திரமாக இருக்கின்றன. எனக்கு எப்போது உன் காட்சியைக் கொடுக்கப்போகிறாய்?

71. ஏ யோகி அரச, அன்பரே, இரவும் பகலும் உம் வரவை நான் எப்போதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்: இந்தக் காதல் நெறி மிக்க பயங்கரமாக இருக்கிறது. ஒரு கணத்தைக் கழிப்பது ஒரு யுகமாக இருக்கிறது; ஆனால், இந்த நெறியோ விசித்திரமாக என்னையே அழித்துவிடும் போல் இருக்கிறது. இந்த யோக நெறியிலேதான், இந்த நகரத்திலேதான் நான் நடமாடிக் கொண்டிருக்கிறேன். ஆனால், உம்மிடம் சிறிதளவாவது அன்போ, நம்பிக்கையோ நான் காணவில்லை. இந்தக் காதல் என்னை முழுவதும் அழித்துவிடும்போல இருக்கிறது. நான் காதலுணர்வுடன் சொல்கிறேன். இதனால் நீர் சினங்கொள்ளக் கூடாது. உம்முடைய காதலில் மூழ்கிப் போய்விட்டிருக்கிறேன், யோகீசுவரரான உம்மை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். இவ்வாறு பல நாள்கள் கழிந்துபோய்விட்டன. விரகத் தீயினால் நான் வெதுப்பப்பட்டுப் போகிறேன். என்பிரபுவும் யோகீசுவரருமான கண்ணபிரான் இதுவரை வந்தபாடில்லை. என்னைக் கட்டாயமாக மறந்துவிட்டிருக்கிறார். ஏ தோழீ, நான் இப்பொழுது என்ன செய்யக் கூடும்? எங்கே செல்வேன், யாருடைய உதவி எனக்குக் கிடைக்கும்? உம்மைக் காண்பதற்கு என்னுடைய ஆசை துடித்துக் கொண்டிருக்கிறது. விரக வேதனையினால் என்னுடைய குல மரியாதைகளும் நசித்துப் போய்விட்டன. ஏ யோகிக்கண்ணா! என்னை உம்முடைய பொருளாக ஏற்றுக்கொண்டு என் துக்கங்களை நாசம் செய்வீர். உம்முடைய காட்சியைச் சீக்கிரமாக அளிப்பீர். மீரா சொல்கிறாள், "என் விரகத்தின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காரணமாக நான் வேதனை அடைந்துவிட்டேன். உம்மை அடையாமல், இந்த உயிர் எரிந்து கொண்டிருக்கிறது. ஆகவே நீ சீக்கிரமாகச் செல். மீரா சொல்கிருள், "நான் அதிகம் வேதனைப்பட்டேன், ஏ கண்ணு, நீ என் பக்கம் இல்லாமல் என் உயிர் கொதிப்படைகிறது."

72. அன்புத் தோழீ, என் ஆருயிர்க் காதலரைக் காண்பதற்கு என் கண்கள் ஆசை கொண்டு, தாகம் எழுந்தாற் போல அலைகின்றன. அவரைக் காண நான் எப்போதும் வழிமேல் விழிவைத்தவளாகவும், பெருந்துக்கத்தை அடைந்தவளாகவும் இருக்கிறேன். புதிதாக இருக்கும் மரக் கிளைகளின்மீது குயில் அமர்ந்துகொண்டு மதுரமாக ஒலி செய்கின்றபோது என் துக்கம் அதிகரிக்கின்றது. என் காதலார்வங்கள் அதிகரிக்கின்றன. இந்தக் காதலைப் பார்த்த மக்கள் என்னைக் கேலி செய்கிருர்கள், என்னை அடக்குகிருர்கள், திட்டுகிருர்கள். மீரா சொல்கிருள், "நான் மக்களின் அடக்குதலையும், கேலியையும், பொருட் படுத்தவில்லை. நான் கண்ணபெருமானின் அடிமைதான். முன்பிறவிகளில் நான் அவருக்கு விற்கப்பட்டுவிட்டேன். ஆகவே அவருக்கு நான் எக்காலத்திலும் அடிமை."

73. யோகீ, ஏ கண்ணு! என்னைவிட்டு அகன்றுவிடாதே; ஒருகாலும் போய்விடாதே. நான் உன்னுடைய அடிமை. உன் திருவடித் தாமரைகளைப் பிடித்துக்கொண்டு, மிகவும் கெஞ்சிக் கேட்கிறேன். காதலன்பின் நெறி மிகவும் கடினமாக இருக்கிறது. எளிதாக என்னுல் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆகையால், அந்த நெறியை எனக்கு நீ அறிவிப்பாயாக. எனக்கு அருள்மொழி ஒன்று வழங்கு. நான் உன் விரகதாபத்தினுல் மிகவும் நொந்து போயிருக்கிறேன்; உன்னை அடையாமல் நான் உயிர்வாழ விரும்பவில்லை. இதனுல், மணமுள்ள சந்தனம், அகர்பத்தி முதலிய மணப்பொருள்களால் சிதை ஒன்று எனக்கு அடுக்கியிருக்கிறேன். இதற்கு உன் கைகளால் நெருப்பு வைத்து என்னை எரித்துவிடு. நான் அந்தச் சிதையுடன் எரிந்து சாம்பலாகிவிடுகிறேன். அந்தச் சாம்பலை நீ எடுத்து உன் உடம்பு முழுதும் பூசிக்கொள். உன் ஆன்ம ஒளியுடன் என் ஆன்ம ஒளியும் கலந்துவிடும், நான் உன் அங்கங்களில் படிந்து அங்கமாகிவிடுவேன், ஒன்றறக் கலந்துவிடுவேன். ஜோதிர் மயமாகிவிடுவேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

74. கிரிதர்லால் என்னைக் கவர்ந்துவிட்டார். அந்தப் பிரபுவின் அடிமை மீரா வேண்டுதல் செய்கிருள், "என்னுடைய பிரபு, கண்ணபகவான், பேரருள் வள்ளல், ஐம்பத்திரண்டு உணவு வகைகளும், முப்பத்தாறு வகை வியஞ்சன வகைகளும் அந்த வைகுண்டபுரி வாசிகளுக்குக் கிடைக்கும். அப்பேற்பட்ட மிக்க இனிமையான அரச போகங்களை என் பிரபு கிரிதர நாகர் கவர்ந்து கொண்டார். இவற்றையெல்லாம் என் பிரபுவின் முன்பு வைத்தாகி விட்டது. மீரா சொல்கிருள், "ஏ பிரபு, நான் உன் அடிமை. உம்முடைய திருவடிகளைத் தஞ்சமாக நான் அடைந்திருக்கிறேன். சீக்கிரமாகவே எனக்கு அருள் செய்யும். காட்சியருள் செய்து, என்னை ஆட்கொள்ளும்."

75. ஏ பேரன்பு வாய்ந்த கண்ணு, என்னை விட்டுவிட்டு நீ சென்றுவிடாதே. நான் ஓர் அபலை, ஏழை, ஒடுங்கிய நிலையில் இருப்பவள், நீதான் என்னைக் காப்பாற்றவேண்டும். எனக்கு நீதான் வலிமை. எனக்கு நீதான் உலகத்திலுள்ள சிறந்த பொருள். நான் குறையுள்ளவள். நீரோ நிறையுள்ளவர். இந்த உலகத்தில் ஏற்படும் பற்றுகளை நீக்குவீர். துன்பங்களைப் போக்குவீர். என் அச்சங்களைத் தவிர்ப்பீர். முன் காலத்தில் நீர் யானைகளின் அரசனை கஜேந்திரனைக் காப்பாற்றினீர், எல்லா விதத்திலும் தோல்வியடைந்து, பற்றின்றி வாழ்வதில் விருப்பமில்லாமல், நான் உம் திருவடிகளைப் புகலிடமாக அணுகியிருக்கிறேன், அடைக்கலம் தந்தருள்வீர். ஏ மணிவண்ணு, உம்மைவிட்டு நான் எங்கே செல்வேன்? மீரா சொல்கிருள், "பிரபு, உம்மைவிட்டு மீராவுக்கு வேறு கதியில்லை. என்னை உம்முடைய திருவடிகளில் எடுத்து வைத்துக்கொண்டு. என் மானத்தைக் காப்பாற்றும். என்னை ஏற்றுக்கொள்ளும்."

76. ஏ கண்ணு, நீர் என்னை இவ்வளவு தூரம் காதல் செய்யும்படி தூண்டிவிட்டு, இப்போது எங்குச் செல்கிறீர்? உம்மைப் பார்க்காமல், என் மனம் கொதித்துப்போய், உயிர் போவதற்கு முன்பு நடுநடுங்குவதுபோல, நான் துக்கத்தை அனுபவிக்கிறேன். உம்மை எப்படியும் அடைந்தே தீருவேன், உலகக் கட்டிலிருந்து விடுபட்டு, மனஉறுதியுடன் முனிவரைப்போல ஆகிவிடுவேன்; காசிக்குப்போய் 'துறவினி' யாக (சந்யாஸினியாக) மாறிவிடுவேன். மீரா சொல்கிருள், "என் பிரபு கிரிதரநாகர், நான் அவருடைய திருவடிகளில் புகலடைந்த அடிமை."

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

77. ஏ பிரபு, நீர் எப்பொழுதும் என் கண்களின் முன்பு நின்றுகொண்டு காட்சி தருவீர். என்னைவிட்டு வேறு இடங்களுக்குச் செல்லவேண்டா; மறந்தும்கூடச் செல்ல வேண்டா. நான் பாவக் கடலில் மூழ்கிவிட்டிருக்கிறேன். ஏ மேகவண்ணு எனக்கு விரைவாக ஒரு வழிசெய். நான் உன்னிடம் சீக்கிரம் வரவேண்டும். ராணு எனக்கு நஞ்சை அனுப்பிவைத்தார். நீரோ அதை அமுதமாக ஆக்கிவிட்டீர். மீரா சொல்கிருள், "ஏ கிரிதரநாகர், நீர்தாம் என் சுவாமி. என்னைவிட்டு எங்கும் செல்ல வேண்டா."

78 நான் என்ன சொல்லப் போகிறேன்? கிரிதரநாகர் என் சுவாமி. ஏ கிரிதாரி, எனக்கும் உமக்கும் ஏற்பட்டிருக்கும் காதல், அன்பு, முன் பிறவிகளிலேயே ஏற்பட்டுள்ளது. அதை நீர் உடைக்க விரும்புகிறீரா? அன்பரே, உம்முடைய அழகிய முகத்தை எவர் எவர் பார்த்தாலும் அஃது உலகனைத்தையும் கவரும் அழகு வாய்ந்ததாய் இருக்கிறது. உம்முடைய அழகு வண்ணத்தில் நான் ஈடுபட்டேன். ஏ மேகவண்ணு, என் வீட்டிற்கு வாரும். உம்மை வரவேற்பதற்கு, பெணகள் மங்கள இசை பாடுகிருர்கள். கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து முத்துமுத்தாக நீர்வரும் வழியில் (சதுர கட்டத்தில்) நிரம்பியிருக்கின்றனர். நான் உமக்கு உடல், மனம் எல்லாம் அளித்துவிட்டேன். மீரா சொல்கிருள், "பேரன்ப, நான் உம் திருவடிகளில் படிந்து வணங்கும் அடிமை. உம்மைப் புகலடைந்துவிட்டேன். இந்தக் காதல் சேர்க்கை பிறவி பிறவியாக வந்துகொண்டிருக்கிறது. அவ்வாறிருக்கும்போது, உம்மை விட்டுவிட்டு, மற்றவரை என் பிரியமுள்ளவராக எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்?

79. தோழீ. இதோ பார்; கிருஷ்ணனுடைய மனம் எவ்வளவு கடுமை அடைந்திருக்கிறது! என்னைப்பற்றி அவருக்குச் சிறிதளவும் சிந்தை இல்லை. அவரிடம் வரும்படி பலமுறை அழைத்துவிட்டேன்: ஆனல், அவர் வருகிறதாக இல்லை. நான் அவரை எதிர்பார்த்து வீணுக ஏமாந்து போகிறேன். இதனுல் என் சொந்த வியாபாரங்களாகிற நித்திரை, சாப்பாடு, பிற வசதிகள் எல்லாம் அழிந்து போய்விட்டன. நீயே பதில் சொல்வாய், எவ்வாறு நான் என் உயிரைக் காப்பாற்ற முடியும்? எவ்வாறு நான் வாழ முடியும்? ஏ கண்ணு. நீரே உம்முடைய வார்த்தைகளை உம் காரியத்திலேயே மறந்துவிட்டீரா? உம் வார்த்தைகள் உம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காரியத்திற்கு விருத்தமாக இருக்கின்றன. ஏன் இவ்வாறு துன்புறுத்துகிறீர்? மீரா சொல்கிருள், "என் நாதர் கிரிதர நாகர், அவரை அடையாமல் என் இதயம் துக்கத்திறல் சுக்குநூருக வெடித்துவிடும்போல் இருக்கிறது."

80. அன்பு மிகுந்த தோழீ, கண்ணனுகிய யோகியினுல் என்னிடம் அசிரத்தை காட்டப்படுகின்றது. நான் அவரைக் காதலிக்க, அவர் எனக்குக் கிட்டாதபடியால், துக்கமே சம்பவிக்கிறது. ஆகவே, அன்பு செலுத்தப்போனுல், அது துக்கத்தைத் தருவதாக இருக்கிறது; சுகம் அடையப் படுகிறது இல்லை. யோகிக்கு ஒருவிதப் பற்றுதலும் கிடை யாது: அவருக்கு எல்லாரும் சமமானபடியால், நண்பன் யாருமில்லை; ஏ யோகி, பிரியமுள்ளவரே, உம்மை அடையாமல், இரவுபகல் முழுவதும் நான் துன்பப் படுகிறேன். எப்பொழுதும் துக்கத்தை அனுபவிக்கிறேன். நீரோ ஒருமுறை முகம் காட்டி வசீகரித்துவிட்டு, இப்பொழுது என்னைத் துன்பப்படுத்தலாமா? மீரா சொல்கிறாள், "ஏ பிரபு, நீர் எப்போது என்னிடம் வரப்போகிறீர்? உம்மைக் காண்பதால் ஏற்படும் மகிழ்ச்சி எனக்கு எப்போது ஏற்படும்?"

81. ஏ பிரியமுள்ள தோழீ, கிருஷ்ணயோகியிடம் அன்பு செலுத்துவது துக்கமே தருவதாக இருக்கிறது. அந்தப் பிரபு என்னை முதலில் சந்தித்துவிட்டு, இனிப்பான வார்த்தைகளைச் சொல்லி, வஞ்சகத்தினுல் என்னைக் கவர்ந்து விட்டு இப்போது என்னை முற்றிலும் மறந்துவிட்டார். அன்பை மிக்க விரைவில் உடைத்துவிடலாம், இதற்குச் சிரமம் ஒன்றும் கிடையாது, கால தாமதமும் ஆகாது. அழகான மல்லிகைப்பூவைச் செடியிலிருந்து வெகு விரைவில் பறித்துவிடலாம். மீரா சொல்கிருள். "ஏ பிரபு, என் இதயத்தைச் சூலத்தினுல் ஏன் அடிக்கிறீர்? ஏன் எனக்கு மிகுந்த விரக தாபத்தைக் கொடுக்கிறீர்?"

82. ஏ பிரபு, ஏ இராம, உமக்கு இவ்வளவு கடூர நெஞ்சம் கூடாது. எவ்வளவு வேண்டியும் அருள் செய்ய மாட்டேனென்கிறீர்; எனக்குக் காட்சிதர மறுக்கிறீர், விரைவாகவே வருவீர், காட்சி தருவீர்; உம்முடைய காட்சியை அடைவதற்குரிய நெறியையாவது எனக்கு அருளிச் செய்வீர். உம்மை வழிபாடு செய்யும் முறை எனக்குத் தெரியவில்லை. இது நல்லது இது தீயது என்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனக்குத் தெரியவில்லை. உம்மைப் பக்தியுடன் காதலிப்பது ஒன்றுதான் எனக்குத் தெரியும்; அதே மாதிரி நீயும் என்னைக் காதலுடன் நேசிப்பாய் என்று எதிர்பார்க்கிறேன். என் காதலை ஏற்றுக்கொள்வாய் என்று நம்புகிறேன். ஆனல், நீ எனக்கு வாக்களித்துவிட்டு, வரக் காலங் கடத்துகிருய, என்னை விட்டுவிட்டு எங்கேயோ செல்கிருய். உமக்கு வேண்டுபவர், வேண்டாதவர் என்ற பாகுபாடு இல்லை. எந்த யோகீசுவரருக்கு வேண்டியவன் வேண்டாதவன் என்கிற வேறுபாடு இல்லையோ, அவர் எனக்கும் உதவி செய்ய விரும்பும் நண்பனே ஆவர். மீரா சொல்கிருள், ''ஏ கிரிதரநாகர், நீர் என்னைப் பலவிதமாகச் சோதித்தும், எனக்கு உம்மிடம் அளவிடாதபடி காதல் ஏற்பட்டிருக்கிறது. நான் உம்முடைய திருவடிகளில் எப்பொழுதும் அடிபணிந்து வணங்கி நிற்கிறேன். என்னைக் காப்பாற்றும்.''

83. ஏ யோகி கிருஷ்ண, என்னை முற்றிலும் வஞ்சித்து, என் மனத்தில் உட்புகுந்து, என்னை ஆட்கொளளத் தீர்மானித்து, என் காதலை முற்றிலும் நீர் பெற்றுவிட்டீர். ஆனல், உம்முடைய அன்பின் நீதியையும் நான் அறிந்து கொண்டேன். உம்மிடம் மிகுதியாகக் காதல் கொண்ட போதிலும் நீர் என் கண்களுக்கு பொருளாகத் தோன்ருசபடி காட்சிதராமல் என்னைப் பல காலம் ஏமாற்றுகிறீர். அவ்விதம் இருந்த போதிலும், என் நெறி உம்மைப் பிரேமை பக்தியுடன் காதலிப்பதுதான். இதைத் தவிர எனக்கு வேருெரு நெறி இல்லை. முதலில் நீரே மனம் உவந்து காதல் வடிவ அமுதத்தை எனக்குத் தந்தீர்; அதன்பிறகு விரக வடிவத் துன்பங்களையும் தந்தீர்; நஞ்சுபோல இந்தத் துக்கம் என்னை உண்டுவிடும் போலிருக்கிறது. இஃது எந்த தேச அல்லது இடத்து முறை என்று தெரியவில்லை. இந்த முறை எங்கும் காணப்படவில்லை, கேட்கப்படவில்லை. மீரா சொல்கிருள், ''என் பிரபு கிரிதரநாகர் அவிநாசி, அவர் என்னைத் தம்முடைய பக்தை என்று தெரிந்து கொண்டு ஏற்றருள்வார்.''

84. பிரியமுள்ள தோழீ, கிருஷ்ணயோகி என்னை விட்டு வேறு வியக்தியிடம் செல்ல விரும்புவாராகில் அவர் போகட்டும், தடை சொல்லாதே; அவருக்கு நண்பன் என்ற நினைவும், பற்றுதலும் இல்லை. அவரைத் தடை செய்து நிறுத்தி வைப்பதால் இலாபம் ஒன்றுமில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவர் பராமுகரானபடியால், என்ஞல் கொள்ளப்படும். அன்பானது உடனே பலன் அளிப்பதாக இல்லை. எனக்குத் தெரியும், அவர் என்னிடம் பசப்பு வார்த்தைகளைச் சொல்லி ஏமாற்றுவார், இனிமையான மொழிகள் சொல்வார்; அவ்விதம் இருந்த போதினும், பக்தி செய்பவனை அவர் ஒருகாலும் கைவிட்டுவிடமாட்டார். என் முன்பு இனிப்பு வார்த்தைகளைச் சொல்லிவிட்டு, அவர் அகன்ற பின்பு என்னை முற்றிலும் மறந்துவிட்டார், உண்மைதான். ஆனுல், இந்தக் கிருஷ்ணயோகி அன்பு செய்பவரை விடமாட்டார். ஆகவே மீரா சொல்கிருள், 'மேசவண்ணக் கண்ணு, நீர்தாம் எனக்கு சுவாமி, எனக்குப் பிரியமுள்ள நண்பர். உம்மை நான் விடமாட்டேன்.''

85. என்னைவிட்டு அகன்றுபோகப் பார்க்கும் யோகி கிருஷ்ணு, போகுமுன்பு, என்னைப் பார்த்து ஒரு தடவை சிரித்துவிட்டு, ஏதாவது பேச்சுப் பேசிவிட்டுச் செல்வீர். ஏ கண்ணு, நான் உன்னுடைய பக்தை என்று உலகம் முழுவதும விளம்பரப் படுத்திவிட்டாய்; எல்லாரும் அறிந்து கொள்ளும்படி செய்துவிட்டாய். இந்தப் பேரன்பை நானும் வாத்திய முழக்கம் செய்த, உன் அருளுடைமையைப் பல விதமாகப் புகழ்வேன். உன் மனநிறைவிற்காக நான் என் அங்கங்கள் முழுதும் பொடி அணிந்து கொண்டு, கழுத்தில் துளசிமாலை, சிவமணி (ருத்ராக்ஷம்) போன்றதும், மான் தோல்களையும் அணிந்து கொண்டு இருக்கிறேன். இந்த மறைவான காதலை உலகம் முழுவதும் அறியும்படி நீ செய்துவிட்டாய். ஏ பிரபு, உம்முடைய முகத்தின் பிரகாசம் அட்போது அலர்ந்த தாமரை மலரின் பிரகாசத்தையும் மட்டுப் படுத்துகிறது. உம்முடைய அழகான கபோல பிரதேசங்களை நான் வியப்புடன் எப்பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கிறேன். என்னிடம் அந்த யோகியி னுடைய கம்பளமோ, துண்டோ, தாளமோ ஒன்றமில்லை. இருந்தாலும் என் அன்புக் காதல் மிக அதிகமாக இருக்கிறது. ஏ மௌனி, கண்ணு, இன்னமும் என்னிடம் ஒரு வார்த்தைகூட ஏன் பேச மறுக்கிருய்? உன் வாயைத் திறந்து நான்கு வார்த்தைகள் பேசு. உன் அழகு, இளமை ஒளி எல்லாம் என்னை வசீகரிக்கிறது. உன் கண்கள் கூர்மையானவை. இவ்வளவு இருந்தும், என்னைவிட்டு ஏன் போகிருய்? நீ போகாதே. உன் வடிவழகுகளைப் பல பெண்கள் கண்டு சொக்கிப் போகிருர்கள். ஆனுல், நீ மட்டும் எனக்குக் கிடைப்பதாயில்லை. உன்னுடைய கொடுமை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யினுல் நான் மிகவும் வேதனைப்படுகிறேன். மற்ற பாக்கியமுள்ள பெண்களுக்கு இந்த வருத்தங்கள் இல்லை. ஆகையால் அவர்கள் உன் நடத்தையைப் புகழ்ந்த வண்ணமிருக்கிருர்கள். மீரா சொல்கிருள், "என் சுவாமி அவிநாசி அரிபகவான். அவர் என்னை அடிமையாக ஆக்கிக் கொண்டார். அவருக்கு என்னை நானே முழுவதும் அளித்துவிட்டேன்."

86. ஏ ரமணீய கிருஷ்ணு, எனக்கு உன்னிடம் காதல் ஏற்பட்டிருக்கிறது. கண்ணு, இந்தக் காதலை நீ உடைத்து விடாதே. அதற்குப் பதிலாக என்னிடம் மிகுதியாகப் பிரியம் செய். என் துக்கத்தைத் தவிர்ப்பாயாக. எனக்கு ஒன்று தோன்றுகிறது. உம்மிடம் அன்பு வைப்பதனுல் பல துக்கங்கள் ஏற்படுகின்றன. நான் தாளங்களை முழக்கி ஒலி செய்வேன். இந்த உலகத்தில் யாரிடமும் பிரேமை செய்யக்கூடாது. அதிலும் மூர்க்கர்களிடம் நட்பு வைத்துக் கொள்ளக்கூடாது. பாலானது வெயில் வேளையிலும் குளிர் வேளையிலும் ஒரு கணத்தில் குளிர்ந்து போகிறது. அது போல மூர்க்கர்களும் ஒரு சமயத்தில் அதிகப் பிரேமை காட்டிவிட்டு, ஒரு கணத்தில் அந்தப் பிரேமையை மறந்து விடுகிருர்கள், உதாசீனர்களாகி விடுகிருர்கள். கண நேரத்தில் பகைவர்களாகவோ அல்லது நண்பர்களாகவோ ஆகிவிடுகிருர்கள். எந்த மனிதன் பிறரை நேசிக்கிருனே, அவன் உறுதியாகவே முட்டாள். எவன் பிரேமை செய்து விட்டு, அதைப் பிறகு உடைக்கிருனே, அவன் கொடியன்; திட்டூரமானவன். அப்பேற்பட்டவன் வெகு தூர்லபமானவன்; சூரவீரனுகவுமிருப்பான். எவன் துன்பங்கள் அடைந்தும், அவற்றைப் பொருட்படுத்தாமல், அன்பைச் செலுத்து கின்ருனே, அவன் காலத்தையும் கழித்துக்கொண்டு செல்கிருன். ஏ கண்ணு, நீர் மேல் உப்பரிகையில் நின்று கொண்டிருக்கிறீர்; நானே கீழே பாதாளத்தில் அமிழ்ந்து கிடக்கிறேன். (உப்பரிகையையும் தரையில் சுவரைப் போலவும் இருக்கிறோம்) அவ்வாறு இருந்த போதிலும், நாம் இருவரும் தனியாக எவ்விதம் வாழமுடியும்? ஏனெனில் இது முன்பிறவியினுல் ஏற்பட்ட அன்பே! ஒரே இடத்தில் மாமரத்தையும், கருவ மரத்தையும் நட்டால், மாம்பழத்தின் சாறு சுவையாகவும், கருவ மரத்தில் முள்ளும் இருக்கும். அந்த மரங்கள் தங்கள் இயற்கைக் குணங்களை விட்டுவிடுமா? நீசமான அன்பானது இந்த மாதிரி குணமுடையது. அதுபோல நீரின் இயற்கையானது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உயர்ந்த இடத்திலிருந்து கீழ்நோக்கி வேகமாக வருகிறது. அது வேகமாக வந்து, அதன் வெள்ளம் சீக்கிரமாகவே விரயமாகிவிடுகிறது. இப்பொழுது மழை காலமாகிற ஆவணி புரட்டாசி மாதங்கள் வந்துவிட்டன. மயில் எங்கும் தோகை விரித்து ஆடுகிறது. மீரா சொல்கிருள், "எனக்கு அரிபக்தனின் சேர்க்கை நட்புக் கிடைத்துவிட்டது. அவருடைய காட்சியைப் பெற்று நான் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். காற்று வீசும்போது அதன் வேகம் ஒன்று சேருவது போல, நானும் மகிழ்ச்சி அடைந்தேன்."

87. ஏ கிரிதர், என்ன காரணத்தினுல் நீர் என்னிடம் வெறுப்புக் கொண்டிருக்கிறீர்? என்னுடைய குற்றங்களைச் சொலவீர். நானும என் காதுகளால் கேட்டு மகிழ்ச்சி அடைவேன். (அப்படியாவது நீர் என்னிடம் சில வார்த்தைகளை உரையாடமாட்டீரா?) நான் உம்முடைய பிறப்புகள் தோறும் வரும் அடிமை அல்லவோ? உம்முடைய புகழ்களையும் பெருமைகளையும் எப்போதும் விடாமல் பாடிக் கொண்டிருக்கின்றேனே! ஒரு பழமொழி உண்டு, குணவான் என்று சொல்லப்படுபவன் பிறர் குற்றங்களைப் பாராமல், யாவருக்கும் நன்மை செய்பவன் அல்லவோ? நானே உம்முடைய அடிமை. ஆகவே, என் குற்றங்களை நீர் சிறிதும் கவனிக்கக் கூடாது. மீரா சொல்கிருள், "பிரபு கிரிதர நாகர், எப்போதும் உம்முடைய நாம உச்சரிப்பைச் செயது கொண்டிருக்கிறேன். உம்மை ஒரு கணம் விட்டு, வேறொரு தெய்வத்தை உச்சரிப்பதில்லை. ஆகவே, நீர் என்னிடம் வெறுப்பை விட்டுவிட்டு, என்மீது எல்லையற்ற பேரருட் பார்வையை வழங்குவீர். கட்டாயம் என்னிடம் அருள் செய்ய வேண்டும்."

88. ஏ அரிபகவானே, உம்மால் பல தடவைகள் அன்பர்களின் துன்பங்கள் நீக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சமயம் துச்சாதனன் திரௌபதியைப் பிடித்துத் துகிலை உரித்து மானபங்கம் செய்தபோது, உம்மால் அவளுக்கு உடைகள் அளிக்கப்பட்டன. அவளுடைய மானமும் நாணமும் நிறையும் காக்கப்பட்டன. அதே மாதிரி பக்த பிரகலாதனுக்காக, நீர் நரசிம்ம வடிவத்தைத் தரித்துக் கொண்டு, அவனுடைய நாத்திகப் பிதாவை (இரண்ய கசிப்பைக்) கொன்று, பக்த பிரகலாதனைக் காப்பாற்றினீர். ஒரு சமயம் மூழ்கப்போக விருந்த கசேந்திரனைக் காப்பாற்றி, அவனுடைய பகைவனுன முதலையைக் கொன்று, அவனையும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காப்பாற்றினீர். ஏ மேகவண்ணா! மீரா என்பவள் உம்முடைய அடிமை. என் துன்பங்களையும் நீர்தாம் பேரருளுடன் விலக்க வேண்டும்.

89. ஏ கண்ணா, என்னிடமுள்ள உம் வெறுப்பு மனப்பான்மையை விட்டுவிடுவீர். இனிமேலும் என்னை வெறுப்புச் செய்ய வேண்டா. இதுவரை செய்தது போதும். என்னிடம் அருள் செய்வீர். ஏ கிரிதாரி, புகலற்ற எளியவர்களுக்குப் புகலிடம் அளிப்பவர் நீர் அன்றோ? நீர் பாவிகளையும் காப்பாற்றும் பிரபு அன்றோ? அவ்வாறிருக்கும்போது, நானோ பாவி, நாதனற்றவள்; ஆகவே, உம்முடைய அடைக்கலமருளும் நோன்பையும் மரியாதையையும் காத்து, எனக்கு அடைக்கலம் தருவீர். எனக்கு ஆதரவு கிடையாது. உலகப் பெருங்கடலில் அழுந்திப்போய் மூழ்கிக் கொண்டிருக்கிறேன். என்னிடம் நீர் கருணை வையாது போனால், எனக்கு மிகவும் கேடு விளையும். உம்முடைய புகழ்ப் பெருமைகள் ஊழிஊழிக் காலமாக அன்பர்களைக் காப்பாற்றுவதில் பெயர் போனவை. நீர் முத்தி அளிப்பவர். இரக்க குணம் வாய்ந்தவர். மீரா சொல்கிறாள், “ஏ மன்னர் மன்ன, நான் உமது திருவடிகளை இறுகப் பற்றிக் கொண்டிருக்கிறேன். என்னுடைய மானத்தையும் மரியாதையையும் நீர் காப்பாற்ற வேண்டும்.”

90. ஏ அரி, உம்மைவிட்டு, எனக்கு யார் கதி? எனக்கு உம்மைத் தவிரப் புகல் அளிப்பவர் யாருமில்லை; நான் உம்முடைய அடிமை. நான் ஒவ்வொரு சமயமும் உம் நாமத்தை உச்சரித்துக் கொண்டிருக்கிறேன். ஏ பிரபு, உம்மைக் காண்பதில் மிகவும் ஆவல் கொண்டிருக்கிறேன். துக்கங்கள் நிறைந்த இந்த உலகமாகிய பெருங்கடலிலிருந்து என்னைக் காப்பாற்றும். மூழ்கிக் கொண்டிருக்கிறேன். மீராவின் ஓடம் உடைந்து போய்விட்டது. ஆகவே, பிரபு என்னைக் காப்பாற்றும். உம்முடைய பிரிவினால் வாடி வதங்கித் தவிக்கும் விரகிணிப் பெண்ணாகிய நான் எப்போதும் உம்மை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆகவே, என்னை உம்முடைய பக்கத்தில் வைத்துக் கொள்ளும். என்னை உம் திருவடிகளில் ஏற்றுக் கொள்வீராக. அடிமை மீரா சொல்கிறாள், “‘ராம்’ என்று சொல்லிக்கொண்டு உம்முடைய திருவடிகளைத் தஞ்சமாக அடைந்திருக்கிறேன். காப்பாற்றியருள்வீராக.”

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

91. ஏ பிரபு, என்னிடம் பலவிதமாக அன்பு செலுத்தி விட்டு இப்போது எங்குச் சென்றுவிட்டீர்? ஏ என்னுடைய நம்பிக்கையை அழிக்கும் பிரபு, நீர் என் இதயத்தில் காதல் என்கிற சுடரை ஏற்றி வைத்துவிட்டு, இப்பொழுது எங்தச் சென்றீர்? என்னை ஏன் தியாகம் செய்துவிட்டீர்? காதல் என்கின்ற ஓடத்தை நடத்துபவராக வந்து, நீர் என்னை விரகப் பெருங்கடலில் தனியாக விட்டுவிட்டு எங்குச் சென்றீர்? மீரா சொல்கிருள், "ஏ பிரபு, எனக்கு எப்போது காட்சி தருவீர்? உம்மைவிட்டு, என்னுல் ஒருகணமும் வாழ முடியாது."

92. மனமோகனக் கண்ணன் என் கழுத்தில் தூக்குக் கயிற்றைப் போட்டுவிட்டார்! நான் என்ன செய்வேன? மாமரத்தின் கிளையின்மீது கோகிலம் கூவுகின்றது. அதன் கூவுதலால் என் விரகத்தீ கொழுந்துவிட்டு எரிகிறது. நான் இவ்விதம் விரக நோயால் வருந்தும்போது, இந்த ஊர் மக்கள் என்னைப் பலவிதமாக ஏசுகிருர்கள். என்னுடைய விரக வேதனைகள் அதிகரிக்க, எங்கே என் பேரன்பரான கண்ணன்? எங்கே எங்கே என்று பைத்தியம் பிடித்தவளைப் போல நான் தேடியலைகிறேன். இந்தத் தேடுதலில் என் உயிரைக்கூடத் தியாகம் செய்துவிடுவேன். இல்லாமற் போனுல் காசி கங்கை சென்று, சந்நியாசினியைப்போல மாறிவிடவா, ஏதாவது யோக முறைகள் செய்யலாமா, எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. மனம் கலங்கி இருக் கிறேன். மீரா சொல்கிருள், "என் பிரபு அரி அவிநாசி, சுவாமி, நான் அவருடைய நிரந்தரமான அடிமை."

93. ஏ தோழீ, கண்ணன் என்னைப்பற்றி ஒரு வார்த் தையும் சொல்கிருர் இல்லை, என்னிடம் ஒரு கணம்கூட வார்த்தை சொல்கிருர் இல்லை. இந்த வெறுப்புக்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை. எனக்கு மிகவும் துக்கமாக இருக்கிறது. இந்த உடம்பில் நான் தீவினை யாட்டியாக இருக்கவேண்டும். என் உயிர் இந்தப் பாவ உடம்பிலிருந்து செல்லமாட்டேன் என்கிறது! அவரை எதிர்பார்த்து, இரவு கழிந்து கொண்டிருக்கிறது. காலை வந்துவிட்டது. அவர் என்னிடம் உரையாடாத ஒருகண நேரம்கூட எனக்கு மிக்க துன்பமாக இருக்கிறது. ஒரு நிமிடம் ஒருழிபோல இருக்கிறது. ஆகவே, எனக்கு எப்படி நலம் ஏற்படும்? இந்த நிலை நீடித்துக் கொண்டிருக்கு மாகில் எனக்கு நலங்கள் குறைவுதான். நான் தனித்துப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போய்விட்டேன்! இரவு பேரிருட்டாக இருக்கிறது. தாரா கணங்கள் பளிச்சிடுகின்றன. நாழிகை ஆகிக்கொண்டு போகிறது. என் துன்பங்கள் விடிந்தபாடில்லை! கதிரவன் தோன்றும் சமயம் வந்துவிட்டது. மீரா சொல்கிருள், "நான் கண்ணபிரானின் அடிமை. அவரிடம் என் காதல் மிகுந்து கொண்டு போகிறது. என் உயிரும் போய்க் கொண்டிருக்கிறது. என் பிரபு எனக்குக் காட்சி தருவதாக இல்லை. நான் என்ன செய்வேன்?''

94. அடைக்கலம் என்று வந்தவர்களிடம் நிரந்தரமாக அன்பு காட்டும் இராமனுடைய லீலைகள் எனக்கு அடிக்கடி நினைவுக்கு வருகின்றன. என் பிரபு இராமன்; என் பிரபுவாகிவிட்டார். எனக்கும் அவருக்கும் ஏற்பட்ட "மாகலவி" ஒன்றுபட்டுவிட்டது. ஆகவே அரிபகவானை விட்டு, எனக்கு ஒன்றும் பிடித்தமாயில்லை. இராமன் என்னிடம் மீண்டும் வருவேன் என்று சொல்லிவிட்டுப் போனுர்; ஆனல், அவர் இதுவரை திரும்பவில்லை. இந்தக் காரணத்தினல் நான் மிகவும் வேதனை அடைந்து விட்டேன். ஏ ரமேசா, உம்முடைய நற்காட்சி எப்போது கிடைக்கும்? எனக்கு எப்போது அவர் வருவார் என்று தெரியவில்லை. என் மனமோ அவருடைய திருவடித் தாமரைகளில் எப்போதும் படிந்தவண்ணம் இருக்கிறது. அவர் எனக்குக் காட்சியளிக்காதபடியால் மிக்க வருத்தமாக இருக்கிறது. மீரா சொல்கிருள், 'ஏ பிரபு, எனக்கு உம்முடைய காட்சியைத் தாரும். அதனுல் நான் மகிழ்ச்சி அடைவேன். ஏ மேகவண்ண நாத, வாய்விட்டுச் சொல்ல முடியாத மகிழ்ச்சியைத் தாரும்; என்னுல் அதைச் சொல்லித் தீர்க்க முடியுமோ?''

95. என் கண்ணன் பரதேசத்திற்குச் சென்று வசிக்கத் துவங்கிவிட்டார். எப்பொழுது அவர் என்னைவிட்டுச் சென்ருரோ, அதிலிருந்து அவர் இன்னும் வரவில்லை; அவரிடமிருந்து ஒரு தகவலும் இல்லை. ஆனுல், அவருடைய நினைவுமட்டும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை நினைவு படுத்திக்கொண்டே, உணவையும் மறந்து, நான் சந்நியாசினி ஆகிவிட்டேன். ஏ பிரபு, உம் நினைவின் காரணத்தினுல் நான் பக்தையாக (பாகவத) வேடம் தரித்துக் கொண்டேன். நான்கு புறங்களிலும், நான்கு திக்குகளிலும் தேடியலைந்து கொண்டிருக்கிறேன். மீரா சொல்கிருள், 'என் சுவாமி கண்ணன். அவரை அடையாமல் என் வாழ்வு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வீண். என் வாழ்விலும் வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. என் பிறவி பலன் இல்லாமல் ஆகிவிட்டது.''

96. தோழீ, கண்ணனுடைய காட்சியின்றி நான் வாழ்வதில் பயன இல்லை. ஏ பேரருளாள, நான் என் உடல், மனம், வாழ்க்கை எல்லாம் தியாகம் செய்துவிட்டேன். உம்மையே என் கதி என்று நம்பி வந்திருக்கிறேன். உமமுடைய வடிவழகில் ஈடுபட்டு, சொக்கிப் போய்விட்டேன். உம்மைவிட்டு எனக்கு உணவு முதலியவை எல்லாம் எதற்கு? என் கண்களிலும் மைதீட்டுதலும் ஒப்பனைகளும் இல்லை. ஏ முராரி, இரவு பகல் என்று பாராமல் உம்மையே எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு எப்போது காட்சி தருவீர் என்பதைச் சொல்லும். அடிக்கடி உம்மை வேண்டி, கெஞ்சிக் கேட்கிறேன். மீரா சொல்கிருள், ''அரிப்பிரபு, உம்மைக் காணுமல் போனுல், நான் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்துபோய்க் கொண்டிருக்கிறேன்.''

97. அந்தோ, கண்ணபெருமானைக் காணுமல் நான் மிக்க வேதனையை அனுபவித்துக் கொண்டு பைத்திய (உன்மாதன) நிலையை அடைந்துவிட்டேன். என்னுல், வலி, வேதனைகளைப் பொறுக்க முடியவில்லை. என்னுடைய இதயத்தில் விரகத்தீ கொழுந்துவிட்டு எரிகிறது. காயம் ஏற்பட்டுப் புண் ஆறவில்லை. நல்ல இரத்தினத்தின் விலையை மதிப்பிட முடியுமா? இரத்தினத்தைக் கண்டுபிடித்துவிட்டு, அதன் பெருமைகளையும் தெரிந்துகொண்ட பின்பு, அதன் விலைமதிப்பைத் தெரிந்துசொள்ள முடியுமா? (விலை மதிப்பிட முடியாதது என்று பொருள்.) அது போல என் இதயத்திலும் விரக வேதனைகள் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றை அரிபகவானைத் தவிர வேறு யாராலும் அகற்ற முடியாது. அவரைத் தவிர ஒரு மருத்துவனும் இல்லை. மீரா சொல்கிருள், ''இந்த வேதனை, கண்ணபிரான் எனக்குக் காட்சி தந்து என்னைத் தம்வசமாக நிறைவு செய்யாத வரைக்கும், என்னை விட்டு நீங்காது. அவருடைய காட்சி தான் எனக்கு நல்ல சஞ்சீவி மருந்து.''

98 என் பேரன்பர் கண்ணபிரானை விட்டு என்னுல் ஒரு கணமும் வாழ முடியுமா? நான் என்னுடைய உடல், மனம், வாழ்வு எல்லாவற்றையும் அவருக்காகத் தன்னிழப்புச் செய்து விட்டேன். அவருடைய மனங்கவரும் வடிவழகில் சொக்கிப் போய்விட்டேன். மீரா சொல்கிருள், ''பிரபு, என் மனம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உம்மைக் காண ஆசைகொண்டு, தவிக்கிறது! ஆனால் ஆவல் நிறைவு பெறவில்லை!''

99. ஏ தோழீ, எனக்கும் கண்ணனுக்கும் தொடர்பு மிகுதியாகி விட்டது. அவராலும், ஏன்-சொல்லப்போனால், யாவராலும் உடைக்க முடியாது. அவருடைய விரக நோயினால் கொதித்துப்போய், இலை உலர்ந்ததுபோல ஆகி விட்டேன். ஆனால், என் பதி அந்த யோகி பரதேசத்திற்குப் போய்விட்டதால என்னிடம் இன்னும் வரவில்லை. விரக வேதனைகளையும் என்னால் தாங்க முடியவில்லை. என் உடம்பெல்லாம் வெளிறிப்போய், (மஞ்சள்) மாமை நிறங் கொண்டு, பசலைபோல ஆகிவிட்டது. ஆகையால், என் தந்தை ஒரு மருத்துவரை அழைத்து வந்தார். இந்த மருத்துவருக்கு என் நோயைப் பற்றியும், அதன் வேதனை களைப் பற்றியும் என்ன தெரியும்? எதனால் இந்த வேதனைகள் ஏற்பட்டன என்று அவருக்குத தெரியுமா? மீரா சொல்கிறாள், "ஏ பிரபு, உம்முடைய விரகநோய் காரணமாக, நான் மிகுந்த துக்கமடைந்தேன். எனக்குக் காட்சிதந்து என்னைக் காப் பாற்ற மாட்டீரா?''

100. தோழீ, இந்த உலகத்தில் விரகிணிப் பெண்ணின் மனவேதனைகளை யாரால் அறிந்துகொள்ள முடியும்? (ஒருவராலும் சரியாக அறிந்து கொள்ள முடியாது.) எவனுடைய இதயத்தில் விரகவேதனை நெருப்பைப்போல எரிந்து கொண்டிருக்கிறதோ, அவனன்றோ இதை ஒரு சமயம் அறிந்து கொள்கிறான். அவனன்றோ அரிபக்தியைத் தெரிந்து கொள்கிறான். நோயாளியினுடைய இதயத்தில் எவ்விதம் மருத்துவன் வசிக்கிறானோ, அந்த மருத்துவன் எவ்விதம் சரியான மருந்தைக் கொடுக்கிறானோ, தெரிந்து கொள்கிறானோ அதே பிரகாரம் என் இதயத்திலும் அரிபகவானின் விரக தாபங்கள் அதிகரித்துக்கொண்டுபோக, நான் வலி பொறுக்க மாட்டாமல் தவிக்கிறேன். இதை அரிபகவானே நன்கு அறிவார். அரிபகவானைத் தவிர, பிறசுகங்களனைத்தும் வீண். எவ்வாறு புதிதாக ஈன்ற கன்றைத் தாய்ப்பசு நக்கிமுகருமோ, அது பிரிந்து போனால் அழுமோ, அதேநினைவுடன் இருக்குமோ, அச்சமயமும் அது தன் கன்றையும் தள்ளிவிட்டு மற்றவர்களுக்குப் பால கொடுத்துக் காப்பாற்றுமோ; எவ்விதம் சாதகப் பறவையின் மனம் சுவாதி நட்சத்திரத்தில் பெய்யும் மழைத்துளிகளை நினைந்து நினைந்து உருகுமோ, அதுபோல எனக்கு ஒன்றினும் நினைவு இல்லை; என்னுடைய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அன்பர் கண்ணபிரானை எவ்விதம் எப்போது கண்டுகளிக்கப் போகின்றேன், என்ற எண்ணங்கள் தாம் இருக்கின்றன. வேதனையுடன் நான் இருக்கின்றேன். எனக்கு எல்லா மாய் இருப்பவர் அரிபகவானே, எல்லாத் தியாகமும் செய்துவிட்டு, அவரையே நினைந்து கொண்டிருக்கிறேன். இந்த உலக விவகாரங்கள் முழுவதும் குப்பைக்குச் சமான மாக வியர்த்தமே! துறக்கப்பட வேண்டியது! இந்த உலகம் முள் படுக்கையைப் போலத் துக்கத்தைத் தரக் கூடியது. ஆகவே, மீராவுக்கு இதில் மகிழ்ச்சியை அளிக்கக் கூடியது ஒன்றுமில்லை. மீரா சொல்கிருள்: "என் பிரபு அரி பகவானே, அவரை மீறி எனக்கு அன்புள்ளவர் யாருமில்லை. என் சுகத்திற்காக வேறு ஒருவருமில்லை. அரிபகவானே ஒருவர் மட்டுமாக எனக்குச் சுகத்தை அளிப்பவர்."

101. அரிபகவானுடைய விரகதாபத்தினுல் நான் பெருந் துக்கங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். இரவில் தூக்கம் வருவதில்லை. அதனுல் விரகதாபங்கள் என்னைக் கொளுத்துகின்றன. என் பிரபுவின் ஒளியில்லாமல், என் இதயம் பேரிருட்டாக இருக்கிறது! அந்த வெளிச்சத்தைத் தவிர எனக்கு வேருெரு வெளிச்சம் பிடிக்கவில்லை; அஃதாவது கண்ணனைத் தவிர எனக்கு வேருெரு தெய்வமும் பிடிக்கவில்லை. எனக்கு ஆராதனை செய்ய விருப்பம் இல்லை. மீரா சொல்கிருள்: "என் பிரபு கண்ணன் இல்லாமல், எனக்கு ஆடை அலங்காரங்கள் சுகங்கள் தரமாட்டா. மகிழ்ச்சியில்லாமல் இருக்கிறேன். இதனுல் அவர் வர மாட்டாரா என்று எப்போதும் எதிர்பார்த்த வண்ணம் இருக்கிறேன்; ஆனுல் அவர் வந்தபாடில்லை. எப்பொழுது வருவார் என்று எனக்குத் தெரியவில்லை." (மீராவின் தவம் இதனுல் சொல்லப்படுகிறது)

ஆவணி, புரட்டாசி மாதமும் வந்து விட்டது. தவளை, சாதகம், மயில் எல்லாம் ஒலி செய்யத் துவங்கிவிட்டன. குயில் கூட கூவத் துவங்கி விட்டது. கட, கட வென்று மேகங்களின் ஒலிகள் கேட்கத் துவங்கிவிட்டன. மின்னல் பளிச்சென்று பிரகாசிக்கத் தொடங்கிவிட்டது. நானே பெருங்காதலரான கண்ண னுடைய விரகத்தினுல் அவரை நினைத்துக் கொண்டு துக்கம் அடைகிறேன். என் பிரிய தோழி, இந்த அபார மான விரகதாபத்தினுல், இந்த உலகத்தில் செய்யவேண்டிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கடமைகளை மறந்துவிட்டிருக்கிறேன். என் நினைவுக்கு அவை வருவதாக இல்லை. நான் என்ன செய்வேன்? யாரிடம் உதவி கேட்பேன்? என் வேதனைகளைத் தெரிந்து கொள்பவர்களும், பிறருக்குச் சொல்பவர்களும் ஒருவருமிலர். விரகம் என்கிற நல்ல பாம்பு என் உடலின்மீது அமர்ந்திருக்கிறது. அதன் நஞ்சினால் நான் நுரையைக் கக்கிக்கொண்டு எழுந்திருக்க மாட்டாமல் இருக்கிறேன்.

இந்த நஞ்சின் வேதனையை நீக்குவதற்கு ஒழுங்காயுள்ள மருத்துவனைக் காணவில்லை. அந்தத் தோழி, நண்பன், நல்லெண்ணமுள்ள சாது என்னையும் என் பிரபுவையும் சேர்த்து வைக்கமாட்டாரா? மீரா சொல்கிறாள்: "ஏ பிரபு, என்னை எப்போது நீர் காணவருவீர்? உம்முடைய கவர்ச்சிகரமான வடிவழகு என்னைக் கவர்ந்துவிட்டது. என்னிடம் புன்முறுவல் கொண்டு, நான்கு வார்த்தைகள் எப்போது பேசுவீர்?"

102. என்னுடைய கண்ணனை நினைந்து நினைந்து, இரவில் எனக்குத் தூக்கம் வருவதாயில்லை; எனக்கு ஒரே எண்ணம் தோன்றுகிறது; எப்படிக் கதிரவன் தோன்றும், இரவு எவ்வாறு கழியும்? நான் என் பிரபுவைக் கனவில் கண்டு, அந்தச் சமயத்திலிருந்து, அவருடைய வடிவழகில் என் நிலையை இழந்து, அவர் வசமானேன். மீராவின் உயிர் கொஞ்சம் கொஞ்சமாகப் போய்க் கொண்டு இருக்கிறது. ஏழை பங்காள! தீனநாத், பேரருள் செய்து, எனக்கு ஒரு வார்த்தை அருள்வீர், எப்போது நீர் எனக்குக் காட்சியளிப்பீர்? உம் பொருட்டாக மீரா பயித்தியம் கொண்டாள்: தன் சொந்தக் கடமைகளையும் உணவு, உறக்கம் ஆகிய எல்லாவற்றையும் மறந்துவிட்டாள். கண்ணா, என் துன்பங்களைப் பொருட்படுத்தி ஓடிவந்து, காட்சி அளிப்பீர். மீரா சொல்கிறாள், "என் விரக வேதனைகளை என் பிரபு கிரிதர நாகர் அறிவார். அவர்தாம் எனக்கு உயிர். அவரே தாம் என்னையும் காப்பாற்றுவார்."

103. நான் என் நேசரான கண்ணனுக்கு எவ்விதம் கடிதம் வரைவேன்? எனக்குக் கடிதம் எழுதுவதற்குத் தெரியாது. காகிதத்தின்மீது மைக் கூடும் எழுது கோலும் இருக்கின்றன. என் கண்களில் நிரந்தரமாகக் கண்ணீர் வழிந்த வண்ணம் இருக்கிறது. நான் அவரிடம் என்ன வார்த்தைகளைச் சொல்வேன்? அவருக்குத் தெரியாத

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்திகளோ, வார்த்தைகளோ என்ன இருக்கின்றன? எனக்கு மனத்தில் அச்சம் மிகுதியாக ஏற்படுகிறது. ஏ கடிதத்தைக் கொண்டு செல்பவனே, என் விபத்தை நன்ருகத் தெரிந்து கொண்டு அவரிடம் என்னைப்பற்றிச் சொல்வாய். மீரா சொல்கிருள், ''என் சுவாமி கிரிதர நாகர், உம் திருவடித் தாமரைகளே என்னைக் காப்பாற்றும் ஆற்றல் வாய்ந்தவை. ஆகவே உம்முடைய திருவடித் தாமரைகளில் எனக்கு இடம் தருவாய்.''

104. தோழீ, நேசரான என் பிரபுவை விட்டு, எனக்கு ஹோலிப் பண்டிகை (ஒருவருக்கொருவர் சாயம்பூசிக் கொள்ளும் ஒரு விழா) மகிழ்ச்சிக் குறைவாக இருக்கிறது. அவரை விட்டு எல்லாக் கிராமங்களும் தேசங்களும் வீணுக அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பிரகாரமும் மகிழ்ச்சியின்றி விரகிணிப் பெண் தன் காதலரைத் தேடி, ஒவ்வொரு வனமாக அலைகிருள். அவரோ தம்முடைய காதலியை விட்டுவிட்டார்; அவளோ நிராதரவாகத் துக்கம் கொண்டு பயித்தியமாக அலைந்துகொண்டிருக்கிருள்; அவரைத் தேடிக்கொண்டு இருக்கிருள்;

நானே ஒவ்வொரு தேசத்திற்குச் செல்வதற்குத் தகுதி யற்றவள். எனக்கு ஒரு பெரிய சந்தேகமிருக்கிறது, அவர் என்னை ஏற்றுக் கொள்வாரோ மாட்டாரோ, தெரியவில்லை! அவர் வரப்போகிருர் என்று நிமிடத்தை எண்ணி எண்ணி, என் பத்து விரல்களும் சோர்ந்து போய்விட்டன. ஆனல், கண்ண பெருமான் இன்னும் வந்து சேர்ந்தபாடில்லை.

தாளம், மிருதங்கம், புல்லாங்குழல், இவை எல்லா வற்றையும் முழக்கி விட்டேன்; எப்பொழுதும் கண்ணபெரு மானிடம் நினைவை யிழந்து அதே மயக்கில் இருக்கிறேன். வசந்த காலமும் வந்துவிட்டது; ஆனல் என் பிரபு கண்ணன் இன்னும் வந்தபாடில்லை. இதன் காரணமாக என்னுடைய விரகவேதனைகள் மிக்க ஆழமாகப் போய்க் கொண்டிருக்கின்றன.

ஒரு வேளை கண்ணபெருமான் என்னைத் தியாகம் செய்துவிட்டாரோ, தெரியவில்லை. ஏ கிரிதரா, நான் கைகளைக் கூப்பி, மண்டியிட்டு, உம்மிடம் வார்த்தைகளை ஒப்பிக்கின்றேன். என்னுடைய மானத்தையும் மரியாதை யையும் காப்பாற்ற வேண்டும். மீரா சொல்கிருள், ''என் பிரபு மாதவர். என்னிடம் ஒரு தடவை கலந்துவிட்டு,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இப்பொழுது ஏன் வர மறுக்கிறீர்? ஒரு தடவை வந்து விட்டுப் போம். உம்மை வேண்டி வேண்டி பிறவிகள் தோறும் ஏமாந்து போய் விட்டேன். கேவலம் உம்முடைய திருவடிகளையே புகலிடமாக நம்பி வந்திருக்கிறேன், உம்மைத் தவிர வேறு ஒரு துணை எனக்கு இல்லை.''

105. தோழீ, என் பிரபு இல்லாமல், எனக்கு இந்த ஹோலிப் பண்டிகை பிடிக்கவில்லை. இந்த வீட்டில் வசிப்பதற்கும் பிடிக்கவில்லை. இந்தத் தாழ்வாரத்திலும் வசிக்கப் பிடிக்கவில்லை. ஒன்றுமே பிடிக்கவில்லை. பரதேசத்தில் என் பிரபு கண்ணபிரானால் நெருப்புக் கொளுத்தப்பட்டு, ஊர் முழுவதும் நன்றாக அலங்கரிக்கப்பட்டிருக்கும். என் பிரபு வேறொரு பெண்ணோடு ஹோலிப் பண்டிகையைக் கொண்டாடி மகிழ்ச்சியாக இருப்பார். ஆனால், நல்வினை யற்றவளாகிய எனக்கு இந்த அலங்காரங்கள் நல்லபாம்பைப் போல நஞ்சாக இருக்கின்றன; நான் விழித்துக் கொண்டே இரவு முழுதும் கழித்துக் கொண்டிருக்கிறேன்.

நான் எத்தனை நாழியாக அவருக்காகக் காத்திருப்பது? பிரபுவுக்காக எதிர்பார்த்துக் கொண்டு விழித்துக் கொண்டிருக்கிறேன். அதனால் என்னுடைய விரக வேதனைகள் இரவு பகல் என்று பாராமல் அதிகரித்துக் கொண்டு போகின்றன. தோழீ, நான் யாரிடம் என் வேதனைகளைச் சொல்லி, ஆறுதல் பெறுவேன்? என் இதயம் வேதனை யடைந்து விட்டது. என் பிரபு எப்போது காட்சி தருவார் என்று தெரியவில்லை.

என்னிடம் உன்னைப் போல மிகுந்த நட்பைக் காட்டியவர் இதுவரை யாரும் கிடையாது. ஆகவே பிரபுவின் கடிதத்தைக் கொண்டுவந்து என்னிடம் கொடு. அவர் எப்பொழுது வருவார், எப்பொழுது அவருடைய திருக் கரங்களை என் கழுத்தில் போட்டு, சிரித்துக் கொண்டு, நான்கு வார்த்தைகள் பேசுவார்? பேரொலியுடன் ஹோலிப் பாட்டுக்கள் எப்போது பாடப் போகிறோம்? மீரா ஹோலிப் பாட்டு எப்போது பாடப் போகிறாள்?

106. ஏ மேக வண்ணக் கண்ணா, என் வேண்டுதலைக் கேளும். உம்மை விட்டுவிட்டு, நான் யாருடன் ஹோலி விளையாட்டுகள் செய்வேன்? இதற்குப் பதில் சொல்லும். நீரோ வேறு தேசத்திற்குச் சென்று விட்டீர். [பரதேசம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பது இன்னொரு பக்தன் எனப் பொருள் படும்] என்னுடைய இதயம் சுக்கு நூருக வெடித்துப் போய்விட்டது. உம்முடைய விரகத்தினுல் நான் என் உடலுக்கு வேண்டிய ஆபரணங்களையும், அலங்காரங்களையும் விட்டுவிட்டேன். அழகிய உடைகளை அணிவதையும் அழகு செய்து கொள்வதையும் விட்டுவிட்டேன்.

உம்மைப் பார்த்து நான்கு வார்த்தைகள் உரையாடுவதில் ஆசை உண்டாகியிருக்கிறது. உம்மைச் சந்திக்காமல், எனக்கு இதன் காரணமாக, நான் பொட்டு (திலகம் அணிவதையும்) இட்டுக்கொள்வதையும், உணவு உட்கொள்வதையும் விட்டு விட்டேன். மீரா சொல்கிருள், "என் பிரபு மாதவர், நீர் சீக்கிரம் என்னிடம் வாரும். என் வேண்டுதலே ஏற்றுக்கொண்டு எனக்குக் காட்சி நல்கி, விரகிணிப் பெண்ணைப் போல மிகுந்த துக்கமடைந்திருக்கும் என்னைக் காப்பாற்றும்."

107. ஏ பிரபு, என்னைத் தனியாக விட்டுவிட்டுச் சென்று விட்டீர். என்னுடைய வேண்டுதலைக் கேளும். பதில் சொல்லும். உம்மை விட்டு, நான் யாருடன் ஹோலி விளையாட்டுகளைச் செய்வேன்? நீரோ இப்போது என்னை விட்டு, வேருெரு பெண்ணுடன் ஹோலி விளையாட்டுகள் விளையாடுகிறீர். நானோ மாணிக்கம், மோதிரம் ஆகியவற்றை அணிவதை விட்டு விட்டு, வைராக்கிய பாவனையுடன் கழுத்தில் துளசி மாலையை அணிந்துகொண்டு இருக்கிறேன். அவரை விட்டு, இந்த அரண்மனை வாசம் எனக்குப் பிடிக்கவில்லை. என் பிரபுவின் காரணமாகப் பயித்தியம் கொண்டு விட்டேன்.

ஏ கண்ணு, என்னை ஏன் 'உதறித்தள்ளிவிட்டீர்? இப்பொழுது நீரோ வேருெரு பெண்ணிடம் பிரேமை செலுத்தி அவளுடன் கைகோத்துக் கொண்டீர். இவ்விதம் செய்யும் நீர் துவக்கத்திலேயே ஏன் என்னிடம் அன்பு செலுத்தினீர்? பல நாள்கள் சென்றுவிட்டன; ஆனுல் நீர் இதுவரை வந்தபாடில்லை. உம்மைக் காண்பதற்காக நான் பல கொடிய அனுபவங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்.

தோழீ, கண்ண பெருமான் ஏன் என்னை விட்டு விட்டார் என்று தெரியவில்லை. அவர் இல்லாமல் நான் வாடி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வதங்கி, நீரில்லாமல் வில்வப்பழம் வாடிப் போகுமே, அது போல ஆகிவிட்டேன். மீரா சொல்கிருள், "பிரபு, இப்போது எனக்குக் காட்சி தருவீர். நான் பிறவி பிறவி யாக உமது அடிமை. உம்மை அடையாமல் போனுல் நான் துக்கக் கடலில் மூழ்கிவிடுவேன்."

108. ஆவணி புரட்டாசி மாதங்களில் மிக்க வேகமாக வரும் மேகங்கள் ஒலி செய்துகொண்டு வந்துவிட்டன. ஆனுல், என் காதலர் கண்ண பெருமானிடமிருந்து கடிதம் இதுவரை வரவில்லை. மேகங்கள் மழை பொழிவதால், நான்கு பக்கங்களிலும் வெள்ளப் பெருக்கு நிரம்பி விட்டன. தவளை, மயில், சாதகம் போன்ற பறவைகள் கூவத் துவங்கி விட்டன. கோமளமான குரலுடன் குயிலும் கூவத் துவங்கி விட்டது. கருக்கிருட்டில் மின்னல் பாய்ந்து ஒளி வீசு கின்றது. விரகிணிப் பெண்ணின் துக்கங்களை நான் பொறுத்துக் கொண்டும், கவலையுடனும் இருக்கிறேன். மெதுவாகச் செல்லும் வாயுவும் மிக்க கம்பீரத்துடன் இரைச்ச விட்டுக் கொண்டு பயங்கரமான ஒலியுடன் செல்லத் துவங்கி விட்டது. மேகங்கள் மழைத் தாரைகளைப் பொழியத் துவங்கி விட்டன. இப்பேற்பட்ட மழைக் காலத்தில் விரக வடிவான கருநாகம் என்னை நோக்கி வந்து கொண்டிருக் கிறது. மீரா சொல்கிருள், "நான் எல்லாத் துக்கங்களையும் பொறுத்துக் கொண்டு விட்டேன். எனக்கு அரிபகவானிடம் காதல் ஏற்பட்டு விட்டது."

109. ஏ மேக வண்ணு, வானத்தில் கூட்டம் கூட்டமாக இருக்கும் மேகங்களைக் கண்டு, நான் விரகதுக்கங்களை அனுபவித்துக்கொண்டு, அழுகிறேன். வானத்தில் கருமை மஞ்சள் நிறங் கொண்ட மேகங்கள் சஞ்சரித்துக் கொண்டு, நான்கு பக்கங்களிலும் மழைப் பொழிவுகளைப் பெய்கின்றன. எங்குப் பார்த்தாலும் வெள்ளமயமாக இருக்கிறது. பூமியின் தாகம் அடங்கி, பசுமை நிறத்துடன் விளங்குகின்றது. என்னுடைய பிரபு அன்னிய தேசத்தில் இருக்கிருர், அவரை நான் எதிர்பார்த்துக் கொண்டு வாயிற் படியில் நின்று காத்துக் கிடக்கிறேன். மீரா சொல்கிருள், "ஏ அவிநாசிப் பிரபு, நீர் உண்மையாக, என்னை ஏமாற்ருமல் என்னிடம் பிரியம் செய்யக்கடவீர். எந்தப் பிரகாரம் பூமி பசுமையுடன் விளங்குகின்றதோ, வேறு தேசத்திற்குச் சென்ற பதி தம் சொந்த தேசத்திற்குத் திரும்பிவந்தால் எவ்விதம் மகிழ்ச்சி ஏற்படுமோ, அது போல நீரும் அன்னிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தேசத்திலிருந்து வந்து, என்னை ஆட்கொண்டு, என் துக்கங்களைப் போக்கி, என்னிடம் உண்மையான அன்பைச் செலுத்த வேண்டும்.''

110. ஏ பிரபு, உன் பொருட்டாக நான் சுகங்களனைத்தையும் இழந்துவிட்டேன். அவ்விதமிருக்கும் போது நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிருய் ? சீக்கிரமாகவே காட்சி தருவாய். விரக நோயிலிருந்து என்னைக் காப்பாற்றுவாய். என் இதயத்தில் படிந்திருக்கும் வேதனைகளை அகற்றுவாய். என் அன்பு, நீ என்னை மறந்து என்னை அகன்ருலும், உன்னையே, உன் நற்பண்புகளையே நினைக்கும்படி செய்கிறது; அந்த அன்பு ஆழமுள்ளது; அளவிட முடியாதது. ஆகவே நீ என்னிடம் தோன்றி என்னை ஏற்றுக்கொள். மீரா சொல்கிருள் 'பிறவி பிறவியாக நான் உனக்கு அடிமை. ஆகவே உடனே ஓடிவந்து என்னைத் தழுவிக் கொள்.''

111. ஏ இன்சொல் மிழற்றும் அன்ப, (மிட்போலா) வீட்டிற்கு வருவீர். நான் எப்போதும் வழிமேல் நின்று என் கொண்டு, உம்மை எதிர்பார்த்த வண்ணமிருக்கிறேன். நான் மிகக் கெஞ்சிக் கேட்கிறேன். நீர் வந்தால்தான் நான் மகிழ்ச்சியாக இருப்பேன். எனக்கு ஐயம் உண்டாகாமலும், நம்பிக்கை இழக்காமல் இருப்பதற்காகவுமாவது நீர் விரைந்து வருவீர். உம்மிடம் ஏற்பட்டிருக்கும் பெரு நம்பிக்கை தளரக்கூடாது. ஏ பிரபு, சீக்கிரம் காட்சி தருவீர். உம்மிடம் என் ஆன்மாவை அடைக்கலம் வைத்து விட்டேன். உம்மைக் காண்பதில் மிக்க ஆர்வமுள்ளவளாக இருக்கிறேன். நேரத்தை வீணுக்காதீர். உமக்காக நான் சுகங்களனைத்தையும் தன்னிழப்புச் செய்துவிட்டேன். கண்களில் அஞ்சனம் தீட்டுவதையும், திலகம் இடுவதையும் உணவு, உறக்கம் ஆகிய எல்லாவற்றையும் நீக்கிவிட்டேன். உம்மைக் காணுமல் மனத்தில் மகிழ்ச்சி இல்லை. ஆகவே உம்மை என் உள்ளங்கையில் (சாலிக்கிராமத்தைப் பார்த்துச் சொன்னதாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.) வைத்து எப்போதும் இன்பமடைகிறேன். என் கழுத்தில் உம்முடைய கரங்கள் மலர்மாலையாக இருப்பதாக எப்போதும் எண்ணமிட்டுக் கொண்டிருக்கிறேன். மீரா சொல்கிருள், ''ஏ பிரபு, நான் உமக்குப் பிறவி பிறவியாக வந்த அடிமை. ஆகவே என் மனத்திலுள்ள துக்கங்களைப் போக்குவீர்.''

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

112. ஏ கண்ணப் பிரபு, சீக்கிரமாகவே வருவீர், எனக்குக் காட்சி தருவீர். நான் உமக்காக நாள்தோறும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறன். என்னுடைய துக்கங்களை நீக்கி, எனக்குச் சுகத்தைக் கொடும். நான் உம்மைப் பல நாட்களாகத் தேடிக்கொண்டிருக்கிறேன். உம்மை எப் போதும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறன். நான் என்ன தீவினைகள் செய்தேன்? நீர் ஏன் வரக் காலதாமதம் செய் கின்றீர்? பிரபு, சீக்கிரம் வருவீர். மீரா சொல்கிருள், "சுவாமி, நான் உமது திருவடிகளில் படிந்திருக்கும் அடிமை. நான் உம்முடைய சொத்து, நீரும் என்னுடைய பொருள் ஆவீர்."

113. தோழீ, அரிபகவானை அடையாமல், நான் வாழ்வது வீண்; மிக்க துன்பமாக இருக்கிறது. தவளை எவ்வாறு நீரில் உண்டாகிறதோ, அதே தண்ணீரில் வளர் கின்றதோ; எவ்வாறு மீன் தண்ணீரை விட்டுப் பிரிந்து ஒரு கணமும் வாழாதோ, அதே பிரகாரம் அதே நிலையை உம்மைவிட்டுப் பிரிவதால் நான் அடைவேன். பிரபுவை அடையாமல் நான் நிறம் இழந்து, மாமை நிறம் பெற்று விட்டேன். உம்மை அடையாமல் மிக்க இளைத்து வாடிப் போனேன். மரத்தைப் பூச்சி எவ்வாறு சாப்பிட்டு விடுகிற தோ, அதுபோல நான் உம்முடைய பிரிவினுல் இளைத்துப் போய்விட்டேன். இந்தத் துன்பத்திற்கும் நோய்க்கும் மருந்து உமது காட்சியைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. ஏ பிரபு, என்னைக் குணப்படுத்த முடியாமல் மருத்துவர் நிராசையுடன் சென்று விட்டார். நானே உம்மைத் தேடித் தேடி வனம் வனமாக அலைகிறேன். விரகநோயின் சின்னங்கள், துன்பங்கள் என் மேனி முழுவதும் பரவி விட்டிருக்கின்றன. மீரா சொல்கிருள், "ஏ கிரிதர்லால், நான் உமக்கு அடிமை. சுகத்தைக் கொடுக்கும் கிரிதர்லால் எனக்குக் கிடைத்து விட்டார்."

114. ஏ மருத்துவ, நீர் கூட்டம், இவற்றைத் தள்ளி விட்டு, சந்தடி செய்யாமல், உம்முடைய வீட்டிற்குச் செல்வீர். என் உடலிலுள்ள நோய்கள் அதிகரிக்கின்றன. என் இதயத்தில் புண் ஏற்பட்டுவிட்டது. உம்மால் என்னைக் குணப்படுத்த முடியாது. உம்முடைய மருந்திற்குப் பயன் இல்லை. ஏ மருத்துவரே, நீர் மகிழ்ச்சியாக உம்முடைய இல்லத்திற்குச் செல்வீர். எனக்கு என் பிரபு கண்ணன் இல்லாமல், இந்த நோய் குணமடையாது. அதனுல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த வேதனைகள் ஏற்படுகின்றன. மன்மதன் தன்னுடைய பாணங்களால் விரகிணிப் பெண்ணை அடிப்பதுபோல என்னை அடிக்கிருன். எனக்கு என்னுடைய பிரபுவின் நினைவு இருக்கிறது. அவருடைய ஆழமான காதலும் அன்பும் என் நினைவில் இருக்கிறது. நான் ஒரு நிமிடமும் அவரை மறக்க முடியாது. மீரா சொல்கிருள், "நான் மிகவும் துக்கத்தை அடைந்துவிட்டேன். எனக்கு மகிழ்ச்சியை அளிக்கும் மருத்துவன், மருத்துவர் கிரிதாரி; அவர் வந்து போனால் என் நோய் தீரும்."

115. ஏ சாதகப் பறவையே, எப்பொழுதிலிருந்து நீ என்னிடம் வைரம் காட்டுகிருய்? "பீ, பீ" என்று கூவி என்னுடைய விரகத்தை ஏன் மிகுதிப்படுத்துகிருய்? இவ் விதம் நீ கூவுவதால் என் வேதனை அதிகரிக்க, என் இதயம் பிளந்து போகும் போலிருக்கிறது. நீயோ மரத்தின் கிளையின்மீது உட்கார்ந்துகொண்டு பேசாமலிருக்கிருயா, அல்லது கூவிக்கூவி என் கழுத்தை வெட்டுவதற்கு எண்ணம் கொண்டாயா? மீரா சொல்கிருள், "என் சுவாமி கிரிதர நாகர், அவருடைய திருவடிகளில் நான் என் கவலைகளையும் பொறுப்புகளையும் விட்டுவிட்டேன்."

116. ஏ சாதகப் பறவையே, நீ என் பிரபுவின் குரலோடு (வாணியினல்) ஒன்றும் பேசாதே. யாராவது விரகிணிப்பெண் ஒருத்தி உன் குரலைக் கேட்டாளோ, உன்னைப் பிடித்துக் கொண்டு இறக்கையைத் திருப்பித் தந்து உன்னை விடவே மாட்டாள். பிரியமுள்ள சாதகமே, நான் உன் அலகை வெட்டி விடுவேன், அப்புறம் உன் உடம்பு முழுவதினும் கருப்பு உப்பைத் தடவி விடுவேன், அப்புறம் நீ எவ்விதம் விரகிணிப் பெண்ணைத் துன்புறுத்துவாய் என்று பார்ப்பேன். கண்ணபெருமான் என்னுடையவர்; நானும் அவருடைய பொருள். அவ்வாறிருக்கும்போது உனக்குக் கூவுவதற்கு என்ன தகுதி இருக்கிறது? அவ்வாறு கூவுவதற்கு நீ யார்? ஒரு வேளை பிரபு இன்று என்னுடன் கலவி செய்தால், அப்போது நீ அழகாக ஒலி செய்யலாம்; சிரிக்கலாம்; எந்த நல்ல நாளில் கண்ணபிரான் என்னிடம் வருவாரோ, அந்த நாளிலிருந்து உன் அலகுக்குத் தங்கக் கவசம் செய்து போடுவேன். நான் உன் தலையை அன்புடன் தடவிக் கொடுப்பேன். ஏ காக்கையே, நான் என் பிரபுவுக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறேன், நீ அந்தக் கடிதத்தை எடுத்துக்கொண்டு, அவரிடம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொடு. அவரிடம், "நான் விரகதுக்கத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்," என்கிற செய்தியைச் சொல்லி, அவருக்கு என் நினைவை வரப்பண்ணு, நான் அன்னத்தைக் கூடத் தியாகம் செய்துவிட்டேன் என்று செய்தி சொல். "மேலும் உம்முடைய அடிமை மீரா மிகவும் வேதனை அடைந்திருக்கிருள்; உம்மை அடிக்கடி நினைவுபடுத்திக் கொண்டு, நீர் வராதபடியால் உயிரை இழக்க எண்ணியிருக்கிருள். ஆகவே ஏ பிரபு, நீர் சீக்கிரமாகவே அவளிடம் செல்வீர். உம்மை விட்டு அவளால் ஒரு கணம்கூட உயிருடன் வாழ முடியாது."

117. தோழீ, என் மனத்தைத் திருடிக்கொண்டு போன கண்ணன் இன்னும் வந்தபாடில்லை. இதிலிருந்து எனக்கு நம்பிக்கை தோன்றுகிறது, அஃதாவது சாதுக்களின் கூட்டத்தில் கண்வைத்திருக்கிருர். வைராக்கிய பாவனையை ஏற்றுக்கொண்டு, அவர் தம் வழியை விட்டு விட்டார். என் அன்புத் தோழீ, இப்பொழுது நான் என்ன செய்யக் கூடும்? யாரிடம் உதவி கேட்பேன்? எங்குச் செல்வேன்? விரக வேதனைகளைப் பிரபு எனக்கு ஏற்படுத்தி விட்டார். மீரா சொல்கிருள், "எனக்குக் கண்ணபிரானின் காட்சியில் ஆசை இருக்கிறது. நான் அவரைக் காண பதற்குத் தாகம் கொண்டிருக்கிறேன். மீரா அரிபகவானின் திருவடித்தாமரைகளை அழைக்கிருள்; ஆகவே அவரை விட்டு மீராவினுல் வாழ்க்கை நடத்த முடியாது."

118. ஏ தோழீ, நான் விரக வேதனைகளைப் பொறுத்துக் கொண்டும், இரவில் கண் விழித்துக்கொண்டும், உலக முழுதும் உறங்கும்போது, நான் மட்டும் தனியாகத் துக்கங்களை அனுபவித்துக்கொண்டு மிருக்கிறேன். விரகிணி மணிமண்டபத்தில் உட்கார்ந்துகொண்டு மிக விழிப்பாக பிரியதமரான கண்ணனை எதிர்பார்த்துக்கொண்டு காலம் கழிப்பதுபோல, நான் காலத்தைக் கழிந்துக்கொண்டிருக் கிறேன். கண்ணிர் மாலைமாலையாக வந்துகொண்டிருக் கிறது. இவ்விதம் நிமிடம் நிமிடமாக இரவு ஓடிக்கொண்டிருக் கிறது. மீரா சொல்கிருள், "சுவாமி, கிரிதர நாகர், என்னிடம் ஒரு தடவை கலவி செய்துவிட்டு மறுபடி பிரிவது நியாயமா? நீரே சொல்லும்."

119. ஏ தோழீ, என் பிரபுவைக் காணுமல், அதன் காரண மாக எனக்கு உறக்கம் வரவில்லை; சுகம் எல்லாம் போய்விட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரபுவின் வழியைக் கண்டு கண்டு, என் உறக்கமில்லாத இரவு கழிந்துகொண்டிருக்கிறது. என் தோழிமார்கள் எல்லாரும் சேர்ந்து, எனக்குப் பலவிதமாகப் பணிவிடை செய்தார்கள்; பலவிதமான புத்திமதிகள் செய்தார்கள்; ஆனால், என் மனத்திலோ அவர்களின் புத்திமதிகள் ஒன்றும் ஏறவில்லை. எனக்கு என் பிரபுவைக் காணமற் போனதால் ஒரே மனக்கலக்கம் ஏற்பட்டிருக்கிறது. மனத்தில் விரகத்தீ ஏற்பட்டு, எரிந்துகொண்டிருக்கிறது; விரகதாபத்தினுல் என்னுடைய உடல் தளர்ந்துகொண்டும், என் முகத்திலிருந்து கேவலம் என் பிரபுவின் நாம உச்சரிப்பைத் தவிர வேறு ஒன்றும் வருவதாக இல்லை. ஏ தோழீ, என்னுடைய விரக வேதனைகள் உள்ளூர ஏற்பட்டவை; இவற்றை யாவராலும் சரிவரப் புரிந்துகொள்ள முடியாது. எந்த முறையில் சாதகப் பறவை மேகங்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றதோ, மீன் தண்ணீரைவிட்டு விலகாதோ, அதே முறையில் நான் என் பிரபுவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். மீரா சொல்கிருள், "விரக வேதனையின் காரணமாகப் பல வேதனைகளை அனுபவித்துக்கொண்டிருக்கிறேன். என்னைப் பற்றிய சுகங்களும் நினைவுகளும் மறந்துபோய் விட்டன. எனக்கு எப்போது நல்வாழ்வு கிடைக்கும்?"

120. என் மனத்தில் கண்ணனுடைய மேகவண்ணமுள்ள அழகிய வடிவம் வசித்துக்கொண்டிருக்கின்றது. நான் இரவு பகல் என்று பாராமல் எப்பொழுதும் கண்ணபிரானின் நினைவுடனேயே வாழ்ந்து வருகிறேன். என் மனத்தில் மேகவண்ணக் கண்ணன் எப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கிருன். ஏ தோழீ, விரக வேதனைகளின் காரணமாக, என்னுல் செய்யப்பட வேண்டிய கடமைகள், செயல்முறைகள் எல்லாம் நாசமாகிவிட்டன. பல குற்றங்களும் எனக்கு ஏற்பட்டுவிட்டன. எனக்கு என்ன செய்வதென்று ஒன்றுமே புரியவில்லை. நான் யாரிடம் உதவி கேட்பேன்? யாரிடம் என் குறைகளைச் சொல்வேன்? கண்ணனின் விரகதுக்கத்தில் மூழ்கிப் போயிருக்கிறேன்; கண்ணன் என்கிற கருநாகத்தினுல் நான் கடிக்கப்பட்டேன். மீரா சொல்கிருள், "பிரபு, நீர் எப்போது என்னிடம் வருவீர்? உம்முடைய உண்மையான காதல் பக்தி என்னிடம் எப்போது ஏற்படும்? எப்போது துவங்கும்?"

121. தோழீ, என் பிரபு என்னைச் சந்திக்காமல் போனுல், எனக்கு வாழ்க்கையினுல் என்ன இலாபம்? அரி பகவான்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இல்லாமல் ஒரு கடமையும், வேலையும் என்னால் செய்யப்படுவதாயில்லை. என்னுடைய உயிரும் பிரியமாட்டேன் என்கிறது? ஆமையும் தவளையும் நீரில் தோன்றினாலும், அவை நீரிலிருந்து நீக்கப்பட்டால் பிழைத்து வாழ்கின்றன; அவற்றின் அன்பு உண்மையாக இல்லை. உண்மையான அன்பு மீனிடம் இருக்கிறது. நீரிலிருந்து பிரிக்கப்பட்டால், அஃது உயிர் இழந்துவிடுகிறது. என் அன்பும் மீனின் அன்பைப்போல இருக்கிறது. வெட்டப்பட்ட மரம் எதுவரை வனத்திலிருக்கிறதோ, அதுவரை அதில் பூச்சிகள் இருக்கின்றன. எப்போது என் பிரபு கண்ணபிரான் அந்தக் கட்டையின்மீது நெருப்பை வைக்கிறாரோ, அது சாம்பலாகிப் போய்விடுகிறது. இதே மாதிரி எதுவரை என்மனம் விரகதாபத்தினால் நெருப்பைப்போல் எரிகிறதோ, அதுவரை என் களங்கம் அழியாது. ஏ தோழீ, நான் என் பிரபுவைத் தேடித் தேடி வனம் வனமாக அலைகிறேன். அவருடைய முகவரி (விலாசம்) இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏ பிரபு, ஒரே ஒரு தடவை காட்சி தாரும். என்னுடைய மனத்திலுள்ள தேவைகள் தீர்ந்துவிடும். விரக வேதனையின் காரணமாக நான் மஞ்சள் நிறம் கொண்டேன். என் உடலில் பசலை படர்ந்திருக்கிறது. மீரா சொல்கிறாள், "கிரிதரநாத, நான் உம்முடைய அடிமை; என்னைக் காண ஓடி வருவீர். எனக்குச் சுகத்தைத் தருவீர்."

122. தோழீ, அரிபகவான் இல்லாமல் நான் எவ்வாறு வாழமுடியும்? கண்ணனை அடையாமல் நான் பயித்தியம் பிடித்த மாதிரி ஆகிவிட்டேன். என் மனத்தை விரகதாபம் எரித்துக் கொண்டிருக்கிறது; பூச்சி மரத்தைச் சாப்பிடுவது போல, சாப்பிட்டுக் கொண்டிருக்கிறது. என் நோய்க்குச் சரியான மருந்து ஒன்றும் அகப்படவில்லை. இதனால் காதல் வேதனை என்னை அரித்துக்கொண்டிருக்கிறது. தரையில் வந்த மீன் துடிப்பதைப் போல நான் துடித்துக் கொண்டிருக்கிறேன். நான் வாழ்வதில் பயன் இல்லை. கண்ணனுடைய புல்லாங்குழலின் கானத்தைக் கேட்டு அலைகிறேன். மீரா சொல்கிறாள், "கிரிதர கோபாலா, சீக்கிரமாக வாரும், என் விரக வேதனைகளைப் போக்குவீர்."

123. தோழீ, கண்ணனைக் காண்பதற்காக, என் இதயம் விரக வேதனைகளை அனுபவிக்கின்றது. அவரைக் காண்பதே, வணங்குவதே ஒரு சாதனை வேதனை. என் மனத்தில் குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இரவும் பகலும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒரு கணமும் தூங்காமல் நடுங்கிக்கொண்டிருக்கிறேன். விரகம் என்கிற நாகம் என் இதயத்தை நன்ருகக் கடித்து விட்டிருக்கிறது. என் உடல் முழுவதும் நஞ்சின் அலைகள் பரவிவிட்டன. "ஏ மேகவண்ணு, மீரா உம்முடைய விரகத்திஞல் மிக வேதனையடைந்து துக்கங்களை அனுபவித்துக் கொண்டு உம்முடைய காட்சியை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருள்."

124. தோழீ, என் பிரபுவைக் காணுமல், எனக்குத் தூக்கம்வர மறுக்கிறது. அவருடைய விரக தாபத்திஞல் ஒவ்வொரு கணமும் ஓர் ஊழிக்காலம் போல மெதுவாகச் செல்கிறது. ஒவ்வொரு விநாடியும் வேதனைகள் அதிகரிக்கின்றன. என் பிரபுவின் அஞ்ஞானம் இன்னும் தூர விலக வில்லை. இருளை விலக்குவதற்கு பிராகிருத தீபம் தேவைப் படாது. இலௌகீகமான செயல்களில் ஆசை இருப்பதில்லை. என்னுடைய படுக்கையில் முட்களைப் பரப்பி முட்படுக்கையாகச் செய்திருக்கின்றனர். என் துக்கங்கள் நீடித்துக் கொண்டு போகின்றன. நான் எப்பொழுது என்னை அலங்காரம் செய்துகொண்டேனே, அப்பொழுதிருந்தே துக்கங்களை அனுபவிக்கிறேன். இரவு வந்ததும் தூக்கம் வருவதில்லை; என் துக்க வேதனைகளைப் பிறருக்குச் சொல்வதஞல், யார் என்னைச் சரியாகப் புரிந்து கொள்வார்கள்? என்னிடம் எவர் நம்பிக்கை கொள்வார்கள்? விரக நாகம் வலக்கையைக் கடித்துவிட்டது. அதன் நஞ்சு உடம்பு முழுவதும் பரவிவிட்டது. தவளை, மயில், குயில் ஆகியவை ஒலி செய்யத் துவங்கிவிட்டன. மேகங்கள் கூட்டம் கூட்டமாக இடி இடித்துக்கொண்டு சஞ்சரிக்க, மின்னல் பளிச்சென்று மின்ன, எனக்கு அவற்றைக் கண்டதும் பயம் ஏற்படுகிறது. இந்த உலகத்தில் இராமபக்தியுள்ளவர் எவராவது என் துக்கங்களைக் கண்டு, என்மீது இரக்கம் கொண்டு, என் துக்கங்களை விலக்கமாட்டாரா? மீரா சொல்கிருள், "என் பிரபு அவிநாசி, அரிபகவான், அவரைக் கண்டால் என் மனம் களிப்படைகிறது."

125. தோழீ, என் உயிரை மேகவண்ணக் கண்ணனிடம் தானம் செய்துவிட்டேன். அவர் பொருட்டாக நான் அனைவரையும் எல்லாப் பொருள்களையும் தியாகம் செய்து விட்டேன். உலகத்தினிடம் ஒரு விதமான பற்றற்று, நான் அவர்களை ஒதுக்கிவிட்டேன். கண்ணு, உம்மைக் காணுமல் நான் மனத்தில் கலக்கமடைந்துவிட்டேன். எப்பொழுதும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து ஓடுகின்றது. என் வேதனைகளை யாரிடம் நான் சொல்வேன்? யார் எனக்கு ஆறுதல் அளிப்பார்? விரகத்தின் வேதனைகளை அனுபவிப்பது மிகக் கடினமாக இருக்கிறது. மீரா சொல்கிருள், "ஏ பிரபு, எப்போது நீர் காட்சி தரப் போகிறீர்? எனக்கு ஆதாரம் உம்முடைய திருவடிகளே."

126. மீரா சொல்கிருள், "ஏ மேகவண்ணக் கண்ணு, என்னுடைய வழிபாட்டைக் கருணை உள்ளத்துடன் ஏற்றருளும். நான் உம்முடைய அடிமை. உம்முடைய காட்சிக்காக எப்பொழுதும் பித்துப்பிடித்தவள் போல அலைந்து கொண்டிருக்கிறேன். விரக வேதனைகள் என்மீது பரவி என் உடலைத் துளைத்துவிட்டன. ஒவ்வொரு நடன மண்டபத்திலும் உம்மைத் தேடியலைகிறேன். உமக்காக என் அலங்காரங்கள் முழுவதும் சாம்பலைத் தடவிக்கொண்டு, கழுத்தில் உருத்திராக்கம் (ருத்ராட்சமாலை) அணிந்துகொண்டு, உம்மை எந்தவிதத்திலாவது அடைய ஆசை கொண்டிருக்கிறேன். என் பிரபு அவிநாசி; ஏ பிரபு, இன்று கூட நீர் எனக்குக் காட்சி தரவில்லை. உம்மைத் தேடித்தேடி வனம் வனமாக அலைகிறேன். நீர் வராமல் போனல், என்னல் இயன்றவரை அழுது தீர்த்துவிடுவேன். ஏ பிரபு, உம்முடைய அடிமைக்குக் கட்டாயம் உம்முடைய காட்சியைத் தருவீர். துக்கங்களை நாசம் செய்வீர். சுகத்தை அளிப்பீர். என் உடம்பில், என் இதயத்தில், ஒவ்வோர் உரோமக் காலிலும் சாந்தியின் சின்னங்கள் தோன்றத் தொடங்கி விட்டன. இதனல் என் பிறவித் துயரின் பிறப்பு இறப்புப் பிணி விட்டுப் போய்விட்டது. நான் திருவடிகளின் கீழ் அடி பணிந்து எப்பொழுதும் இருக்கிறேன். எப்பொழுதும் உமது திருவடிகளில் பணிவிடை செய்து கொண்டிருக்கிறேன்."

127. ஏ மேகவண்ணு, நீர் என் வீட்டிற்கு வருவீர். நீர் என்னுடைய பொருள்; நானும் உம் அடிமை. நான் உம்மைச் சேர்ந்தவள். உமக்காக எப்பொழுதும் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறேன். உம்முடைய வரவை எதிர் நோக்கிக்கொண்டு வழிமேல் விழிவைத்துக்கொண்டு காத்திருக்கிறேன். உம்முடைய வரவு உறுதியாகிவிட்டது. ஆனல், நீர் இதுவரை இன்னும் வந்தபாடில்லை. உமக்கு வேருெரு பெண்ணிடம் காதல் ஏற்பட்டுவிட்டது. மீரா சொல்கிருள், "ஏ பிரபு, நீர் எப்போது என்னைச் சந்திப்பீர்?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உம்முடைய காட்சியை அடையாமல், காலத்தைக் கடத்துவது மிகக் கடினமாக இருக்கிறது.''

128. புவனபதி, (சம்சாரத்தின் சுவாமியே) நீர் என் வீட்டுக்கு வருவீர், என் உடம்பு முழுவதும் பசலை பரவத்துவங்கிவிட்டது. என் முழு வாழ்க்கையும் எரிந்து போய்விட்டது. இதனுல் உம்முடைய காட்சியை ஒரு தடவை அளித்து, இந்த விரகாக்கினியைத் தணித்து விடுவீர்; அழுது அழுதும், தேடித் தேடியும் என் இரவு முழுவதும் கழிந்துபோய்விட்டது. பசியும் ஏற்படவில்லை. தூக்கமும் முடிந்துவிட்டது. ஆனுல் பாவியான எனக்கு எப்பொழுது மரணம் ஏற்படப்போகிறது என்று தெரிய வில்லை. இந்தத் துக்கங்களை மாற்றிச் சுகத்தை அளிப்பீர். எனக்குக் காட்சி அளித்து என்னை உயிர் பிழைப்பிக்க வழி செய்வீர். மீரா சொல்கிருள், "நான் வேதனையடைந்து, துக்கங்களை அனுபவிக்கிறேன். ஆகவே நேரம் ஆக்க வேண்டா. உடனேயே காட்சி அளிப்பீர். விரக நோயாகிய என்னுடைய மிகுதியான துக்கங்களை நாசம் செய்வீர்.''

129. ஏ பிரபு, உம்முடைய காட்சியை அளிப்பதால் எனக்குச் சுகம் ஏற்படும்; இல்லையேல், இந்த உலகத்தில் துக்கங்களை அனுபவித்துக்கொண்டு உமக்காக, இரவு பகலாக விரகத்தை அனுபவித்துக்கொண்டு, வேதனை அடைகிறேன். எனக்கு உடம்பு முழுவதும் வலி ஏற்பட்டு, பயித்தியம் கொண்டவள் போலவும், சித்தம், மன உறுதி யிழந்தவள் போலவும் ஆகிவிட்டேன். உம்மை அடைவதற் காக ஒவ்வோர் இடத்தையும் தேடித் தேடி அலைகிறேன். மீரா சொல்கிருள், "பிரபு, நான் உம்முடைய அடிமை. உம்முடைய விரகதாபத்தினுல் முகம் வெளிறிப்போய், என்னுடைய கருமையான கேசபாசங்களும் வெளுத்துப் போய்விட்டன.''

130 ஏ பிரபு, கண்ண யோகி, கேவலம் எனக்காக என் வீட்டிற்கு வாரும்; அவ்வாறில்லாவிடினும், என் வீட்டிற்கு அருகே, நீர் இங்கு மங்கும் அலைந்து திரிந்தால் கூட எனக்குப் போதும். நான் உம்மை அடைவதற்காக வைராக்கிய மனப்பான்மையுடன் இருக்கிறேன். காது களில் குண்டலங்களை அணிவதையும் விட்டுவிட்டேன். அதற்குப் பதிலாகப் பக்தச் சின்னங்களை அணிந்து கொண்டிருக்கிறேன்; உடல் முழுவதும் விபூதியை அணிந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொண்டிருக்கிறேன். உம்மைக் காணுமல் என் மனம் சாந்தி அடையாது. வீட்டில் இருக்கவும் எனக்குப் பிடிக்க வில்லை, மீரா சொல்கிருள், "பிரபு, நீர் அவிநாசி, நீர் கருணை செய்து என்னிடம் வருவீர். ஏன் எனக்குக் காட்சி தர, வர மறுக்கிறீர்?"

131. ஏ பிரபு, சீக்கிரமாக வருவீர், காட்சி அளிப்பீர். உம்வழியை எப்போதும் எதிர்பார்த்திருக்கிறேன். உம் விரகதாபத்தினுல், எனக்கு உணவு, உறக்கம் எல்லாம் அழிந்துவிட்டன. ஒன்றையும் நான் விரும்பவில்லை. என் கண்களின் (கதவுகளாகிற) இமைகள் எப்பொழுதும் திறந்த வண்ணமிருக்கின்றன. ஒவ்வொரு திமிடமும் உம்மை எதிர்பார்த்த வண்ணமிருக்கிறேன். நீர் வராது போனுல், எனக்குச் சுகம் ஏது? என் இதயம் அதிக வேதனை அடைந்திருக்கிறது. மீரா சொல்கிருள், "ஏ கண்ணு, உம்முடைய விரகதாபத்தினுல், நான் பயித்தியம் பிடித்தவளாகிவிட்டேன். ஆகையால் சீக்கிரமாகவே வரு வீர். என்னுடைய துக்கங்களைப் போக்குவீர். என்னுல் பொறுக்கமுடியவில்லை."

132. ஏ மேக வண்ணக் கண்ணு, நீர் என் வீட்டிற்கு வருவீர், எனக்குக் காட்சி தருவீர். உம்முடைய குரல் மிக்க இனிமையாக இருக்கிறது. பிரபு, உமக்கும் எனக்கும் ஏற்பட்டுள்ள அன்பு சிறு வயதிலிருந்து ஏற்பட்டது. இதை நீர் அறிவீர், அவ்வாறிருந்தும், நீர் இதற்கு உசிதமான பெருமையை அளிப்பீர். உம்மைக் காணுமல் என் மனம் கொந்தளிக்கிறது. உம் விரகத்தினுல் என் மனம் சரிந்து போய்க் கொண்டிருக்கிறது. மீரா சொல்கிருள், "பிரபு, உம்முடைய விரகதாபத்தினுல் நான் பயித்தியம் அடைந்து விட்டேன். நான் உம்மை அடைவதற்காக, இந்தக் காதலைத் தமுக்கடித்து, பறை சாற்றலாமா? பதில் சொல் வீர், பிரபு."

133. ஏ பிரபு, என்னிடம் வந்து நான்கு வார்த்தை களைச் சொல்வீர், உம்மைக் காணுமல், அடையாமல் என் வாழ்க்கை மிக்க கடினமாக இருக்கிறது. நீரில்லாமல் போனுல், தாமரைப்பூ வாடி வதங்கிப் போகிறது. சந்திரன் இல்லாமல் இரவு சூன்யமாகி விடுகிறது. அதே முறையில் உம்மை அடையாமல், என் வாழ்க்கையும் வாழ்நாட்களும் வீணுகிப் போகின்றன. விரக வேதனையினுல் இரவைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கழிக்கிறேன், விரகதுக்கங்கள் என் இதயத்தைத் தின்று கொண்டிருக்கின்றன. விரகதாபத்தினுல் பசி கிடையாது. எனக்குச் சாப்பாடும் மறந்துபோய்விடுகிறது. உறக்கமும் இரவில் வருவதில்லை. என் உள்ளத்திலுள்ள வேதனைகளை யார் அறிந்து கொள்வார்கள்? ஏ பிரபு, என்னை நீர் அடைந்து, என் துக்கங்களை நாசம் செய்வீர். ஏ கண்ணு, என்னிடம் ஏன் விளையாடுகிறீர்? சீக்கிரமாகவே வருவீர், என் இதய தாபங்களை நாசம் செய்வீர். மீரா வணக்கத்துடன் சொல்கிருள், "பிரபு, நான் உம்முடைய ஒவ்வொரு பிறவி தோறும் வரும் அடிமை; உம்மிடம் மிக்க பழையதான காதலைச் செய்துகொண்டு வருகிறேன், அருள் செய்வீர்."

134. ஏ பிரிய கண்ணு, உம்முடைய காட்சியை அடையாமல் ஒவ்வொரு கணமும் மன அமைதியை இழந்து மிக்க கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். உம்முடைய விரகதாபத்தின் காரணத்தினுல் நீர் என் இதயக் கோயிலில் எப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்; இஃது எனக்கும் பிடித்தமாக இருக்கிறது. இரவில் எனக்கு உம்முடைய புலப்பத்தினுல் உறக்கம் வருவதில்லை. ஒரு கணத்திலும் எனக்கு மனநிம்மதி இல்லை. என்னை விரகதாபங்கள் முற்றுகையிடுகின்றன. நான் அவற்ருல் நன்ருக அடிக்கப் பட்டு, மிக்க வாடுகிறேன். இந்தத் துக்கங்களை எவரும் சரியாக அறிந்துகொள்ளவில்லை; துக்கத்தின் காரணமாக நான் அழுதுகொண்டிருக்கிறேன். உயிரையும் இழந்து கொண்டிருக்கிறேன். உம்முடைய வழியை எப்பொழுதும் எதிர்பார்த்த வண்ணமிருக்கிறேன். மீரா சொல்கிருள், "ஏ பிரபு, எப்போது என்னைச் சந்திப்பீர்? உம்மை அடைந்த பின்புதான் எனக்கு மகிழ்ச்சி ஏற்படும்."

135. ஏ பிரபு, உம்முடைய காட்சிக்காக, உம் வழியை எப்பொழுதும் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதால், என் கண்கள் துக்கத்தை அனுபவிக்கின்றன. உம்முடைய நினைவு வந்ததும், என் இதயம் துடிக்கிறது. இனிமை யான வசனங்களையும், மதுரமான உரையாடல் களையும் நினைவு படுத்திக்கொண்டு, காலத்தைக் கழிக் கிறேன். என் விரக வேதனைகளை நான் யாரிடம் சொல் வேன்? விரகத்தினுல் ஏற்பட்ட துக்கங்களின் கண்ணீர்த் தாரைகள் என் இதயத்தை நனைத்து ஓடி வழிகின்றன. உம்மை விட்டுவிட்டு, எனக்கு ஒரு கணமும் சுகமில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உம்முடைய வழியை எதிர்பார்த்த வண்ணமிருக்கிறேன். உம்முடைய வழி தனிவழியாகவும், கடினமாகவும், நீளமாகவும் இருக்கிறது. உம்முடைய தாபத்தினுல் நான் நடுங்கிய வண்ணமிருக்கிறேன். என்னுடைய எல்லா உறுப்புகளும் உணர்விழந்துவிட்டன. மீரா சொல்கிருள், "ஏ பிரபு, என்னை எப்போது நீர் காண்பீர்? எப்போது என்துக்கங்களை நாசம் செய்வீர்? சுகங்களை எப்போது தருவீர்?"

136. ஏ கண்ணு, ஏன் என்னை இவ்வளவு தொந்தரவு செய்கிறீர்? என்று நான் அறியேன். உம்முடைய காரணத்தினுல், நான் என் சுற்றத்தையும், சூழவுள்ளவர்களையும், உலக இன்பங்களையும் தியாகம் செய்துவிட்டேன். அவ்விதமிருந்தும், நீர் என்னைப் புறக்கணித்து விட்டீர். என் இதயத்தில் விரகவேதனைகள் தோன்றிவிட்டன. நீர் என் துக்கங்களைச் சீக்கிரமாகவே அழித்து விடுவீர் என்று நான் கனவு கண்டுகொண்டிருக்கிறேன். இஃது உண்மையா, பிரபு! என் துக்கங்களை அழிக்கப் போகிறீரா? இல்லையா? ஏ முராரி, நீர் என்னைப் புறக்கணித்தாலும் நான் உம்மை விடவே மாட்டேன். நான் என்னை முழுவதையும் உமக்கு அளித்து விட்டேன், நான் அடைக்கலமாக உம்மை அடைந்து விட்டேன். மீரா சொல்கிருள், "பிரபு, நான் பிறவி பிறவியாக உமக்கு அடிமை. ஏ பக்தவத்சல, உமக்கு அன்பர்களை ஆட்கொள்வது கடமை அன்ருே? அந்தக் கடமையை நீர் நிறைவேற்றுவீர். மீராவைக் கடைத்தேறச் செய்வீர்."

137. ஏ மணிவண்ணு, நாகர் நந்தகுமார்; என்னுடைய காதல் உம்மிடம் ஏற்பட்டுவிட்டது. உம்முடைய புல்லாங்குழலின் ஓசையைக் கேட்டுவிட்டு, நான் என் வீட்டைத் தியாகம் செய்து எந்த இடத்தில் நீர் இருக்கிறீரோ, அந்த இடம் வந்திருக்கிறேன். தண்ணீரை விட்டுப் பிரிந்த மீன் துடிக்கிறது, உயிரை இழக்கிறது. ஆனுல், தண்ணீர் அந்த மீனின் உணர்ச்சியைத் தெரிந்து கொள்கிறதோ? என்ருல், இல்லை. விட்டிற் பூச்சிகள் விளக்கொளியில் ஓடிவிழுந்து இறந்து போகின்றன. ஆனுல், விளக்கொளிக்கு அதன் அன்பை அறிய முடிகிறதில்லை. மீரா சொல்கிருள், "பிரபு, இந்த முறையில், உமக்காக இந்த உடலைத் தாங்கிக் கொண்டிருக்கிறேன். நீர் என் உடல் வேதனைகளைத் தெரிந்துகொண்டு, காட்சி தந்தருள்வீர்."

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

138. ஏ கண்ணு, நீர் பிறவி பிறவியாக எனக்குக் கணவர். உம்மை இரவு பகல் என்று பாராமல் எப்பொழுதும் உமது நாமத்தைப் புலம்பிக் கொண்டிருக்கிறேன். மறக்கவே முடியவில்லை. உம்மை நேரில் காணுமல் துடித்துக் கொண்டிருக்கிறேன். நான் இதை நன்ருகத் தெரிந்து கொண்டிருக்கிறேன். உம்முடைய வரவை மிக்க ஆர்வத்துடன் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறேன். இதனுல் என் கண்கள் சிவந்துபோய்விட்டன. இந்த உலகக்காட்சியாகிய பெருங்கடலும், உலகத்தின் கட்டுகளும் பொய். ஒவ்வொரு நிமிடமும் உம் வடிவை மனத்தினுல் வணங்கி மகிழ்ச்சி அடைகின்றேன். மீரா சொல்கிருள், ''ஏ கிரிதர நாகர், மீராவின் மனம் உமது திருவடிகளில் அடிபணிந்து நிற்கிறது. உம்மைவிட்டு, மீராவுக்குக் கதி இல்லை. ஆகவே சீக்கிரமாகவே காட்சி அளிப்பீர்.''

139. ஏ பிரபு, எந்த முறையில் என்னை நீர் நன்கு அறிவீரோ, அதே முறையில் என்னையும் மகிழ்ச்சிப் படுத்துவீர். உம்மைத் தவிர மீராவுக்கு உதவி செய்பவர் யாருமிலர். ஆகவே அருள் செய்வீர். உம்முடைய விரகத்தின் காரணமாக, எனக்குப் பசி ஏற்படுவதில்லை. இரவில் உறக்கம் வருவதில்லை. என் உடம்பு துடித்துக் கொண்டிருக்கிறது; தளர்ந்துகொண்டு போகின்றது. மீரா சொல்கிருள், ''கிரிதர நாகர், ஒரு தடவை எப்போதாவது வந்துவிட்டுப் போவீர். உம்முடைய விரக வேதனையால் என் நெஞ்சங்கள் பிளந்து போகின்றன.''

140. எனக்குக் கண்ணனைக் காண்பதற்குத் தீவிரமான ஆசை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே எப்பொழுதும் விழித்துக் கொண்டிருக்கிறேன். ஒன்றும் எனக்குப் பிடிக்கவில்லை; மனத்தில் அமைதியும் இல்லை. பிரபு, உம்மை நினைந்து நினைந்து வாடி, பலநாள்கள் சென்றுவிட்டன. என் கழுத்தில் பாசம் தொங்குகிறது. ஆகவே சீக்கிரம் வருவீர். நான் உம்முடைய அடிமை. கண்கள் எப்பொழுதும் கண்ணீர்த் தாரைகளை வடித்துக் கொண்டிருக்கின்றன. என் மூச்சு நின்றுவிடும்போல் இருக்கிறது. இரவும் பகலும் வணங்கி வேண்டியும் நீர் வந்தபாடில்லையே என்று எண்ணி எப்போதும் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றேன். உம்மிடம் ஏற்பட்ட காதலை நான் மறக்க முடியவில்லை. என்னை உமது அருகில் வைத்துக் கொள்ளவும். என்னை உம்மை விட்டுப் பிரிக்க முடியாது. ஆகவே எனக்குக் காட்சி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அளிப்பீர். என்னைப் புறக்கணிப்பீராகில், என்னை உயிருடன் பார்க்கமுடியாது. மீரா சொல்கிருள், "ஏ பிரபு, என்னை எப்போது காண்பீர் ? என்னிடம் வந்து, என் விருப்பங்களை எபபோது நிறைவேற்றுவீர் ? சீக்கிரமாகவே வருவீர்."

141. ஏ பிரபு, மன்னர் மன்ன (மஹாராஜ்), என் வீட்டிற்குத் தயவுசெய்து வாரும். உமக்காக நான் எப்பொழுதும் வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கிறேன். உம்மை நான் என் இதயத்தில் வைத்துக் கொண்டும், தலை மீது அணிந்துகொண்டும் வாழ்வேன். ஏ அன்புள்ள விருந்தினரே, எங்களைக் கடைத்தேற்றுவதற்காக நீர் கட்டாயம் வரவேண்டும்; எங்கள் நல்வினையைச் சிறக்கச் செய்யவேண்டும்; ஏ பிரபு, நீர் எவ்வளவோ உம்முடைய அன்பர்களின் இன்னல்களை விலக்கி, அவர்களைக் காப்பாற்றி யிருக்கிறீர். அதேபோல எத்தனையோ தீவினையாளர்களையும் காப்பாற்றி, புண்ணியவான்கள் அடையும் சிறப்புகளைப் பெறும்படி பல அற்புதங்கள் செய்திருக்கிறீர். ஏ கிரிதர நாகர், என் கையைப் பற்றிக்கொண்டு, என் மானத்தைக் காப்பாற்றும். எனக்குக் காட்சிதந்து என்னை அருளுடை யவளாக ஆக்குவீர்.

142. சாதுக் கூட்டங்களே, எனக்கு எப்போது என் பிரபு காட்சி தரப்போகிருர் என்று தெரியவில்லை. கிரிதர நாகரின் திருவடிகளை நான் புகலடைந்திருக்கிறேன் என்று அவர் நினைத்து எனக்குச் சுகத்தை அளிக்கவேண்டும். என்னைத் தம்முடைய கண் முன்பு எப்போதும் நிறுத்தி நிலை பெறச் செய்துகொள்ள வேண்டும். அவருடைய காட்சியை அடைவதற்காக என் மனத்தில் திரண்ட ஆசை ஏற்பட்டிருக் கிறது. ஏ கிரிதாரி, எப்பொழுது உமது முகத்தை ஒரு தடவை பார்த்தேனே, அப்பொழுதிலிருந்து எனக்கு மிக்க வேதனை ஏற்பட்டுவிட்டது. எந்த வழியிலும் என் மனத்திற்கு ஆறுதல் செய்துகொள்ளத் தெரியவில்லை. ஆகவே, நீர் சீக்கிரமாக வந்து உம் காட்சியைத் தருவீர், என் வேதனை களைப் போக்கிடுவீர். மீரா சொல்கிருள், "கிரிதரநாகர், சுவாமி, உம்மை அடையாமல் நான் மிக்க துக்கத்தை அடைந்திருக்கிறேன்."

143. ஏ பிரபு, எந்தவிதமாக நீர் என்னை அறிந்து கொண்டீரோ, அதே வழியில் எனக்கு நன்மை செய்வீர். ஒவ்வொரு கணமும் நான் உம்மை எதிர்பார்த்துக் கொண்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காலம் தள்ளுகிறேன். உம்முடைய காட்சியை எனக்குக் கட்டாயமாக அளிப்பீர். எனக்குப் பல தீய குணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தத் தீக்குணங்களை, நற்பண்புகளுக்கு உறைவிடமாக இருக்கின்ற நீர் அன்புகூர்ந்து நினைவுபடுத்திக்கொள்ள வேண்டா. நான் உம்முடைய அடிமை. என்னை ஏற்றுக்கொண்டு, எனக்குக் காட்சி அளிப்பீர். மீரா சொல்கிருள், "நான் சத்குருவின் (கண்ணன்) திருவடிகளை அடிபணிந்தேன். அரிபகவானின் தாமரைத் திருவடிகளில் என் மனத்தை வைத்தேன்."

144. கண்ணு, என் வீட்டிற்குத் தயவு செய்து வருவீர். உம்மை அடையாமல், எனக்கு இந்த உலகம் முழுவதும் மகிழ்ச்சி தருவதாக இல்லை. எனக்கு என்று ஒன்றும் வைத்துக் கொள்ளாமல், என் உடல், மனம், செல்வங்கள் எல்லாவற்றையும் உமக்கே அளித்து விட்டேன். உம்மையே எப்பொழுதும் நினைத்துக் கொண்டு, காலம் கழிப்பேன். நீர் குணவான்; குணக்கடல்; நானே எல்லாத் தீக் குணங்களுக்கும் இருப்பிடம். ஆகவே என் குற்றங்களை மன்னித்து என்னை ஆட்கொள்வீர். மீரா சொல்கிருள், "பிரபு, எப்பொழுது நீர் வருவீர்? உம்மையே எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் என் கண்களுக்குச் சுகத்தைத் தருவதற்கு, எப்போது காட்சி தருவீர்? என் கண்கள் உம்மைக் காணுமல் மிக்க துக்கத்தை அனுபவிக்கின்றன."

145. ஏ ராம், உம்மையே நம்பியிருக்கிறேன், ஆகவே என் வீட்டிற்காவது, என் தெருவுக்காவது வருவீர். உம்மைக் காணுமல் என் மனம் தவிக்கிறது. உம்மையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு உம்மைத் தவிர நண்பன் தோழி யாரும் இலர். உம்மிடம் நான் மனம் இழந்துவிட்டேன். நாணமும் போய்விட்டது. என் குற்றங்களை மன்னித்துவிடும். உம்முடைய திருவடிகளையே புகலிடமாக நம்பி வந்திருக்கிறேன். ஏ அன்பர்கள் துணைவனே, உம்முடைய திருவடிகளே அடைக்கலம் எனக்கருதி அடிபணிந்த அடிமை நான். பவக்கடலைக் கடப்பேன். அடிக்கடி உம்மீது அளவிறந்த காதல்கொண்டேன். எனக்கு நன்மை புரிவீர்."

146. ஏ ராம், என் வீட்டிற்கு வருவீர். அப்பொழுது தான் எனக்கு ஆறுதல் ஏற்படும். உம்மைக் கண்டபிறகு தான் எனக்கு அதிக சுகம் ஏற்படும். அப்பொழுதுதான் என்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனத்திலுள்ள ஆசைகள் நிறைவெய்தியதாகக் கருதுவேன். எவ்விதம் கதிரவனுக்கும், வெயிலுக்கும் வேற்றுமையறிவு ஏற்படுவதில்லையோ, அதுபோல எனக்கும் உமக்கும் நடுவே ஒரு வேற்றுமையும் இல்லை. பிரபு, அத்வைதபாவத்தினால் உம்மை நான் அடைந்திருக்கிறேன். மீரா சொல்கிறாள், "மேகவண்ணா, உம்மையே நான் விரும்புகிறேன், வேறு ஆசை ஒன்றும் எனக்குக் கிடையாது."

147. ஏ பிரபு, சீக்கிரமாகவே எனக்குக் காட்சியளிப்பீர். உம்மையே நினைந்து வாடிக் கொண்டிருக்கிறேன். கட்டாயம் நீர் அருள் செய்தல் வேண்டும். ஆனி மாதம் வந்து விட்டது. தண்ணீர் இல்லாமல் பறவைகள் துக்கவேதனையடைகின்றன. ஆடிமாதத்தில் மயில் மேகங்களைக் காண்பதற்குக் கருணையொலிகளைச் செய்கின்றன. அதேமாதிரி சாதகப்பறவைகளும் கருணைவேண்டி ஒலிசெய்கின்றன. ஆவணிமாதமும் வந்துவிட்டது. நான்கு பக்கங்களிலும் மழைத்துளிகள் நிரம்பியிருக்கின்றன. தோழிமார்கள் களிப்புடன் விளையாடுகிறார்கள். புரட்டாசி மாதத்தில் ஆறுகளில் தண்ணீர் நிரம்பி ஓடுகிறது. எந்தப் பிரபு நெடுந்தொலைவில் இருக்கிறாரோ, அவர் என்னைக் காண்பதற்கு இன்னும் வரவில்லை. ஐப்பசி மாதத்தில் சுவாதி நட்சத்திரத்தில் மழைத்துளி முத்துச் சிப்பியில் விழுந்து ஆணிமுத்தாக மாறி விடுகிறது. கார்த்திகை மாதத்தில் எல்லாத் தோழிமார்களும் தங்கள் தங்கள் தெய்வங்களை வழிபாடு செய்கின்றார்கள். அவர்கள் மாதிரி நானும் உம்மை நிலைபெறச் செய்து வணங்க எண்ணம் கொண்டிருக்கிறேன். ஏனெனில் நீர்தாம் எனக்கு எல்லாம் ஆவீர். ஆனால், நீரோ வருவதாக இல்லை. மார்கழியில் அதிகப் பனியும் குளிரும் ஏற்படுகிறது. ஆகவே அருள் கூர்ந்து என்னைக் காப்பாற்றுவீர். தை மாதத்தில் குளிர் அதிகம் ஏற்படுகிறது. அஃது உம்மைப் போல என்னை வாட்டுகிறது. நீரே நேரில் வந்து என் துன்பத்தைக் கண்டு, என்னை அணைத்துக் கொள்ளவேண்டும். மாசி மாதத்தில் பூமி தளத்தில் வசந்த பஞ்சமி நடமாடுகிறது. அனைவரும் ஹோலிப் பண்டிகை கொண்டாடுகிறார்கள்; இன்னிசை பாடுகிறார்கள். பங்குனி மாதத்தில் எல்லாரும் மகிழ்ச்சியாக விளையாடுகிறார்கள். ஆனால், இந்த வசந்த காலம் என்னை மிகவும் வாட்டுகிறது. உம்முடைய விரக தாபத்தினால் துடித்துக்கொண்டிருக்கிறேன். சித்திரை மாதத்தில் உம்மைக் காண்பதற்கு ஆசையும் இச்சையும் அதிகரிக்கிறது. ஆகவே, எனக்குக் காட்சி தருவீர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வைகாசியில் எங்கு பார்த்தாலும் மலர்கள் பூத்துக் கிடக்கின்றன. எங்கு பார்த்தாலும் குயில்களின் இனிமையானதும் கருணை கொண்டதுமான ஒலிகள் கேட்கப்படுகின்றன. "உன் பிரபு வரப் போகிறுர்" என்று காகம் கூவுதலைக் கேட்டு நான் நாள் முழுவதும் காத்துக் கிடக்கிறேன். அறிஞர்களும் புலவர்களும் கணியர்களும் என்னிடம் வந்து பல நற்செய்திகளைக் கூறிவிட்டுச் சென்றுர்கள். அவ்விதமிருந்தும் எனக்கு ஓர் இலாபமும் ஏற்படவில்லை. மீரா சொல்கிறுள், "நான் மிக்க வேதனை அடைந்து விட்டேன். ஏ பிரபு, அருள் கூர்ந்து பதில் அளிப்பீர், எப்போது என்னிடம் வருவீர்? பூலோகத்தில் எல்லாரும் மகிழ்ச்சியாக இருக்கும்போது, எனக்கு மட்டும் விரக வேதனைகளை அளித்துவிட்டு, சும்மா இருக்கலாமா? என் வேதனைகள் அதிகரித்துக் கொண்டு போகின்றன. ஆகவே விரைவில் வந்து காட்சி அளித்து, என் வேதனைகளை அகற்றுவீர்."

148. ஏ பிரபு, நீர் எங்கள் தேசத்திற்கு வருவீர். நான் உம்மைக் கண்டவுடனே, ஓடித்தாவி உம்மை அணைத்துக் கொள்வேன். உம்மிடம் நயமாக வணங்குவேன். ஏ கண்ணு, இப்பொழுது ஆவணி புரட்டாசி மாதங்கள் வந்துவிட்டன. எங்கு பார்த்தாலும் நீரினுல் நிரம்பப்பட்டு, எங்கும் ஒரே தண்ணீர் மயமாக இருக்கிறது. என் பிரபுவை எவர் தடுத்து விட்டாரோ தெரியவில்லை. அவர் இன்னும் வந்தபாடில்லை. அதனுல் வருத்தமுற்றவளாக இருக்கிறேன். அவர் என்னிடம் புறக்கணிப்பாக இருந்து பல நாள்கள் ஆகிவிட்டன. ஒரு கண நேரம் கூட என்னுல் கழிக்க முடியவில்லை; விரக வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். ஏ பிரபு, அருள் கூர்ந்து ஒரு தடவையாவது என்னிடம் வந்துவிட்டுப் போகலாம். என் வீட்டிற்கு ஒரு தடவையாவது வந்து விடவும். உம்முடைய அழகிய வடிவம் என் மனத்தில் எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது. உம்மைவிட்டு ஒரு கணமும் என்னுல் வாழ முடியாது. மீரா சொல்கிறுள், "ஏ பிரபு, உமக்கும் எனக்கும் உள்ள தொடர்பு பிரிக்க வொண்ணுதது. உம்மை விட்டு, எனக்கு ஒன்றும் இல்லை. விரைவாகவே என்னிடம் வருவீர்."

149. தன் தோழியிடம் மீரா சொல்கிறுள், "ஏ பிரபு, என் வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டும். நீர் வல்லவர். யாவரிடமும் அன்பு செய்யக் கூடியவர். மகாதேவரும் சேட நாகரும் எப்பொழுதும் உம்மை வணங்கிய வண்ணமிருக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கின்றனர். ஏ பிரபு, நீர் ஏன் பரதேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்? உம்மை விட்டு என்னால் வாழமுடியாது. அதனால் கட்டாயம் நீர் வருவீர். ஏ தோழீ, என்மீதிரங்கி அருள் செய்வீர். என்னை உம் அருகில் வைத்துக் கொள்வீர். உம்மை அடைவதற்கு நான் துறவுக் கோலத்தை அணிந்து கொள்வதற்குத் தீர்மானித்துவிட்டேன். ஏ பிரபு, சிவமணி மாலை, துளசிமாலை, முத்திரைகள் எல்லாம் அணிந்து கொண்டு, யோகினியைப்போல ஆகி விட்டேன். உலகம் முழுவதிலும் உம்மைத் தேடியலைவேன். என்னுடைய மன்னர் மன்னரைக் கண்டு, அவருடன் நான் வீற்றிருப்பேன். என் பிரபு, நீர் ஆவணியில் வருவதாக வாக்களித்தீர். ஆனால் இது வரை வரவில்லை. இவ்விதம் உம்மால் வஞ்சிக்கப்பட்டு, என் கைவிரல்கள் நாழிகையை எண்ணி எண்ணி, வலி எடுக்கத் தொடங்கிவிட்டது. பிரபு, உம்முடைய விரக காரணத்தினால் மாமை நிறம் பெற்றேன். இப்பொழுது உமக்காக நான் புதிய இளமைபெற்றுப் புதுவடிவத்தில் பொலிவுடன் விளங்குகின்றேன். மீரா சொல்கிறாள், "ஏ ராம், நான் உமக்கு அடிமை. என் உடல், மனம் எல்லா வற்றையும் உமக்கே அளித்துவிட்டேன். நீர்தாம் என்னைக் காப்பாற்ற வேண்டும்."

150. (தீனநாத,) எளியவர்க்கு அன்பனே, நீர் என்னை வந்துபாரும். நான் உம்முடைய ஆணையை ஏற்றுக்கொண்டு, எப்பொழுதும் உம்முடைய தொண்டுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன். உம் பொருட்டாக என் உறவினர்கள் அனைவரும் எதிரிகளாகி விட்டனர். இரவிலும் பகலிலும் உறக்கம் வருவதில்லை. உம்மை எதிர்பார்த்துக் கொண்டு காலம் தள்ளுகிறேன். என் இதயம் விரகபாணத்தினால் அடியுண்டு தவிக்கிறது. ஒரு கணநேரம் கூட உம்மை மறக்கமுடியவில்லை. நீர் கல்லிலிருந்து அகலிகையை உயிர் பெற்றெழச் செய்தீர். மீரா சொல்கிறாள், "என்னிடம் என்ன குற்றம் இருக்க, நீர் புறக்கணிக்கிறீர்? என்னையும் உயிர்ப்பித்துக் காப்பாற்ற வேண்டும். அகலிகையைப் போலத் துக்கம் அனுபவித்துக் கொண்டு துன்பப்படுகிறேன். நீர் தாம் காப்பாற்ற வேண்டும்."

151. ஏ பரதேசிக் கண்ணா, என் வீட்டிற்கு வருவீர். உம்மை நேரில் சந்திப்பதால், என் உடலிலுள்ள வேதனைகள் விலகிப் போகின்றன; சுகத்தை அடைவேன், நாமிருவரும் இணைந்து கூடி மகிழ்ச்சி இன்பம் அடைவோம். மேகங்களின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒலியைக் கேட்டு, மயில் இனிப்பாகக் கூவத் தொடங்கி விட்டது. இந்தச் சமயத்தில் நீர் கட்டாயம் இங்கு வர வேண்டும். சந்திரனைக் கண்டு குமுதமலர் மலர்கிறது. என் மனத்தில் மகிழ்ச்சி ஏற்படும்படி செய்யவும். அன்புத் தோழீ, எந்த நாளில் பிரபு என் இல்லத்திற்கு வந்தாரோ, எனக்கு மயிர்க்கூச்சம் ஏற்பட்டிருக்கிறது. ஏ கிரிதரநாகர், நீர் பல அன்பர்களின் ஆசையை நிறைவேற்றியிருக்கிறீர். ஆதலால் என் விரகத்தையும் நிறைவேற்றுவீர். மீரா சொல்கிருள், "கிரிதரநாகர், உமக்காக நான் விரகிணிப் பெண் ஆகிவிட்டேன். ஆகையால், என் துக்கங்களைப் போக்கியருள்வீர்."

152. ஏ மேகவண்ணு, என் வீட்டிற்கு வருவீர். நான்கு வார்த்தைகளைச் சொல்வீர். உம்மைக் காண்பதால் எனக்கு மகிழ்ச்சியும் கிளர்ச்சியும் ஏற்படுகிறது. என்னுடையவை அனைத்தையும் உமக்கு உரிமையாக்கி விட்டேன். நான் உம்முடைய அடிமை. ஆகவே எனக்கு நன்மை செய்யும். மேகங்கள் ஒலி செய்கின்றன; மழையைப் பெய்விக்கின்றன. குயில் கூவத் தொடங்கிவிட்டது. விரகிணிப் பெண்கள் தங்கள் பதிகளை அழைக்கத் தொடங்கிவிட்டனர். பிரபு, என் வீட்டிற்கு வருவீர். நான் உம் திருவடிகளைத் தொடுகிறேன். மீரா சொல்கிருள், "பிரபு, உம்திருவடிகளில் அடிபணிந்தேன். எனக்கு அருள் செய்வீர்."

153. இன்று அரிபகவான் என்னிடம் வருவதாகச் செய்தி கேட்டேன். மனத்திற்குள் வருவதாகக் கற்பனை செய்தேன். ஆனல், உண்மையில் அவர் வரவில்லை. ஆனல் வழியில் அவரைப் பார்த்தேன். ஆனல் அவர் என் வீட்டிற்கு வரவில்லை. ஆனல், என் ஆசைமட்டும் மிகுதியாகியது. என் இசைவு இல்லாமல், அவர் எனக்குத் தம் வடிவழகைக் காட்டி, என்னை விரும்பிவிட்டார். இதனல் என் கண்களில் கண்ணீர்த் தாரைகள் நிரம்பி வழிகின்றன. நான் என்ன செய்வேன்? எனக்கு மிக்க துன்பமாக இருக்கிறது. எனக்கு இறக்கைகளும் இல்லை; இருந்ததானல் நான் உயரக் கிளம்பி அவரிடம் சென்றுவிடுவேன். மீரா சொல்கிருள், "கிரிதரநாகர், நான் உம்மை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்."

154. ஆவணி மாதம் வந்துகொண்டிருக்கிறது. மேகங்கள் கூட்டம் கூட்டங்களாகச் சஞ்சரிக்கின்றன. நான்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நினைந்து கொண்டிருக்கிறேன். பிரபு, நீரோ சுயநலத்தால் பரதேசத்திற்குச் சென்று அமர்ந்துவிட்டீர். என் மனம் உம்முடைய பிரிவால் துடிக்கிறது. நான் என் மனத்தை எவ்வாறு ஆறுதல் படுத்துவேன்? அடிக்கடி தாள் எடுத்து உமக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். நீர் எனக்கு எப்போது காட்சி யளிப்பீர்? உம்மிடமிருந்து பதில் ஒன்றும் வரவில்லை. மீரா சொல்கிறாள், "என் பிரபு கிரிதரநாகர், ஆகவே, நீர் சீக்கிரமாக வந்து காட்சி அளிப்பீர்."

155. நான் என்னுடைய ராமப் பிரபுவுக்குக் கடிதம் எழுதி அனுப்புகிறேன். ஆனால், அவரிடமிருந்து எனக்குக் கடிதம் ஒன்றும் வரவில்லை. ஏ பிரபு, நீரோ வாய்பேசாமல் இருக்கிறீர். உம்மை எதிர்நோக்கிக்கொண்டு வழியைத் தூய்மைப்படுத்தி எதிர்பார்க்கிறேன். என் கண்கள் சிவந்து போய்விட்டன. உம்முடைய விரகத்தினால் எனக்கு இரவில் மனநிம்மதி இல்லை. விரக துக்கத்தின் காரணமாக என் இதயம் துடிக்கிறது. என் இதயம் வெடித்துவிடும்போல் இருக்கிறது. மீரா சொல்கிறாள், "பிரபு, நான் உமக்கு முன் பிறவிகளிலிருந்தே அடிமை. எப்போது எனக்குக் காட்சி தருவீர்? எப்போது என் துக்கங்களைப் போக்குவீர்?"

156. ஏ மேகவண்ணக்கண்ணா, என் வீட்டிற்கு வருவீர். நீர் வராமல் போனால் எனக்குச் சுகம் இல்லை. துக்கம் ஏற்பட்டதனால், வெளுத்துப்போய், என் கடிதம்கூட மஞ்சள் (வெள்ளை) நிறமாகி விட்டது. சுவாமி, உம்மிடம் ஏற்பட்டுள்ள மிக ஆசைக்கு ஓர் ஆதாரமும் இல்லை. ஆகவே கேவலம் உம்மையே எண்ணி வணங்கிக் கொண்டிருக்கிறேன். மீரா சொல்கிறாள், "பிரபு, சீக்கிரம் காட்சி தருவீர், என்னைக் கடைக்கணித்து மானத்தையும் காப்பாற்றுவீர்."

157. கோவிந்தப் பிரபு, தம் அன்பர்களை இடுக்கணிலிருந்து விடுவிப்பவர், உள்ளன்பு கொண்டு உறவாடும் நண்பர்களுக்கு, அவர்களின் உள்விருப்பங்களை நிறைவேற்றுபவர்; அப்பேற்பட்ட பிரபுவை நான் எதிர்நோக்கிக் காத்துக் கிடக்கிறேன். அவருடைய வழியைத் தூய்மை செய்து செய்து வைக்கிறேன். அவரைக் காண்பதால் சுகம் ஏற்படுகிறது. ஏ கோவிந்தா, என் மனத்தை நீர் ஒருவரே நன்கு அறிவீர். ஆகையினால் என் மனம் சிந்தனை செய்வதிலிருந்து விடுபட்டுவிட்டது. மீரா சொல்கிறாள், "ஏ பிரபு, அவிநாசி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரிபகவானே, நீர் முன்பிறவியிலிருந்தே எனக்கு வேண்டியவர். கட்டாயம் எனக்குக் காட்சி தருவீர்.''

158. ஏ பிரபு, இன்று சாதுக்களிடம் போய்ச் சேர்ந்து விடவா? உமக்காக நான் எப்பொழுதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். கட்டாயம் வருவீர். உம்முடைய வழியை எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிறேன். உம் பொருட்டாக இரவில் தூக்கம் எனக்கு வருவதில்லை. உம்மை அடையாமல் என் மனம் கலங்கி எனக்கு வெறுப்பான போக்கு ஏற்பட்டுவிட்டது. இதனால், ஏ நீலவண்ண அழகா, அவிநாசிப் பிரபு, கட்டாயம் எனக்குக் காட்சி தரவேண்டும். உம்முடைய காரணமாக நான் எல்லாவற்றையும் தன்னிழப்புச் செய்துவிட்டேன். உணவு, உறக்கம் எல்லாம் போய்விட்டது. மீரா சொல்கிறாள், ''ஏ பிரபு, சீக்கிரமாகவே வந்து காட்சி தருவீர், தயவுசெய்து என்னுடைய வேண்டுகோளைக் கேட்டு அறிவீர்.''

159. ஏ கோபால், நான் உம்முடைய திருவடிகளை வந்தடைந்திருக்கிறேன். எப்பொழுதிலிருந்து உம்மிடம் எனக்கு அன்பு ஏற்பட்டதோ, அப்பொழுதிலிருந்தே உம்மிடம் வைத்திருக்கும் அளவு வேறு யாரிடமும் நான் அன்பு வைக்கவில்லை. இந்த உண்மை உலகம் முழுவதற்கும் தெரியும். ஆகவே தாங்கள் அருள்கூர்ந்து எனக்குக் காட்சிக் கொடை அருளி, சீக்கிரமாகவே எனக்கு மகிழ்ச்சியை அளிப்பீர். மீரா சொல்கிறாள், ''கிரிதரநாகர், நான் உம்முடைய திருவடித்தாமரைகளில் அடிபணிந்து எல்லாவற்றையும் தன்னிழப்புச் (தியாகம்) செய்து விட்டிருக்கின்றேன், காப்பாற்ற வேண்டும்.''

160. என்னுடைய அன்பு கண்ணனின் திருவடிகளில் அடிமைகொண்டு விட்டது. அவருடைய காட்சி கிடைக்காமல், எனக்கு ஒன்றும் பிடிக்கவில்லை; இந்தப் பரந்த உலக மனைத்தும் மாயாரூபமாக விளங்குகிறது. கனவில் இருப்பது போல, மயக்குட்பட்டது. தீவினைக்கு ஏதுவான இவ்வுலகம் அச்சத்திற்கு மூலகாரணமாக விளங்குகிறது. உறவும் நட்பும் எல்லாம் எனக்குக் கட்டுகள். இதனால் இவற்றை எல்லாம் தியாகம் செய்துவிட்டுக் கேவலம் அரிபகவானையே புகலிடமாக அடைந்தேன். எல்லாவற்றையும் அவருக்கே அளித்து விட்டேன். மீரா சொல்கிறாள், ''பிரபு, கிரிதரநாகர், நீர் என்னைக் காப்பாற்றுவீர் என்ற ஆசையினால் உம்முடைய திருவடிகளைப் பற்றியிருக்கிறேன்.''

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

161. ஏ கண்ணா, என் அன்புக்கு வெகுமதி அளிப்பீர்; ஒரு முடிவு கொடுப்பீர், நீர் பண்புகளுக்கு உறைவிடமாதலால், தீக்குணங்கள் நிரம்பிய என்னிடம் வெறுப்பாக இருக்க வேண்டா. அவற்றை நினைத்து என்னைப் புறக்கணிக்க வேண்டா. உலகத்தார் என்னைப் பலவிதமாகத் தூற்றியும் குறைவாகவும் பேசிவிட்டார்கள். ஆனால், நான் அவற்றைப் பொருட்படுத்தவில்லை. ஆகையால் நீரே மனம் ஒருப்பட்டு இங்கு எழுந்தருளி, உம்முடைய ஒளி முகத்தினால் என்னைக் கடைக்கணித்து ஆட்கொள்ளவேண்டும். நானோ உம்முடைய பிறவி பிறவியாக வரும் அடிமை. ஆகையினால் என்னுடைய வீட்டிற்கு வருவீர், என் பிரபு கிரிதரநாகர், என்னைச் சீக்கிர மாகக் காப்பாற்றுவீர்.

162. ஏ கர்வீ, நீர் என்னிடம் வந்து கலவிசெய்து அருள் செய்வீர். ஏனெனில் உம்முடைய வடிவழகைக் கண்டு விட்டு, நான் சொக்கிப்போய் விட்டேன். நீர் யாரிடமாவது என்னைப் பற்றி விசாரித்து அறிந்து கொள்ளலாம். நான் உம்முடைய அன்புக்காதலில் மூழ்கிப் போயிருக்கின்றேன் என்று எல்லாருக்கும் தெரியும். உம்மை அடையாமல் பகல் இரவு முழுவதும் நான் கலங்கி நிற்கிறேன். எப்பொழுதும் நடுநடுங்கிக் கொண்டிருக்கிறேன். தண்ணீரை விட்டுப் பிரிந்த மீன் எவ்வாறு துடிக்குமோ, அதுபோல நான் துடித்துக் கொண்டிருக்கின்றேன். உம்மைக் காணாமல் எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. நான் சிறிது சிறிதாக நடுங்கிச் செத்துக் கொண்டிருக்கின்றேன். மீரா சொல்கிறாள், "ஏ கண்ணா, உம்முடைய திருவடிகளைப் பற்றிய நான் உம்முடைய அடிமை. ஏ சுகத்தின் இருப்பிடமே, இந்த வார்த்தையை நன்றாகக் கேட்டு அறிந்து கொள்ளும், எனக்கும் சுகத்தை அளிப்பீர்."

163 கோவர்த்தன கிரிதாரி, உம்மைத் தவிர என்னிட மிருந்து வேறு எவர் செய்தி கொண்டுவரக் கூடும்? நீர்தாமே எனக்கு உறுதியாக உதவி செய்பவர். உம்முடைய மோரமுகுடமும் (மயில் இறகுகளால் அலங்கரிக்கப்பட்ட தலையும்), காதுகுண்டலங்களும், மஞ்சள் பட்டாடையும், கண்கொள்ளாக் காட்சியாக இருக்கின்றன! உவமை கூற முடியாதபடி அழகுடையனவாய் இருக்கின்றன! ஏ முராரி, நீர் எல்லாரும் நிரம்பி வீற்றிருக்கும் துரியோதனனுடைய சபையில் திரௌபதியின் நாணத்தையும் மானத்தையும் காப்பாற்றினீர். மீரா சொல்கிறாள், "ஏ பிரபு, கிரிதரநாகர்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உம்முடைய திருவடித் தாமரைகளின்மீது வந்து அடைந்த என்னைக் காப்பாற்றும்."

164. பிரபு, என் வேண்டுகோளைக் கேட்பீர். ஏ என்னைக் கட்டிக்காக்கும் மன்னவா, நான் அபலை, (மீரா என்கிற பெண்) என்னைக் காப்பாற்றிக்கொள்ள ஆற்றல் எனக்கில்லை. இதனால் நீர் என்னைக் காப்பாற்ற வேண்டும். நீர் அயக்கிரீவராகத் தோன்றி, அரக்கனைக் கொன்று, தொழில்களை முடித்து உலகத்தைக் காப்பாற்றியருளினீர். அதுபோல உம்முடைய பக்தையாகிய என்னையும் காப்பாற்ற வேண்டும். மீரா சொல்கிறாள், "ஏ பிரபு, உம்மைத்தவிர எனக்குத் துணையாக யாருமில்லை, நீர்தாம் எனக்குக் கடவுள்."

165. ஏ ராம், நான் உம்மைப் புகலடைந்தேன். நீர் எந்தவிதமாக என்னை ஆட்கொள்ள நினைக்கிறீரோ, அதே முறையில் என்னை ஆட்கொள்ளலாம். என் மனம் ஒரு நிலையில் இல்லை. பல புண்ணிய இடங்களில் அலைந்து திரிந்தும், உம்மைக் காணாமல், என் விருப்பம் ஈடேறவில்லை. ஆனால், அதே என் மனம் தோல்வியை ஒப்புக்கொள்ள மறுக்கிறது. உம்மை மறக்கவும் முடியவில்லை. முராரி, உம்முடைய காதுகளால் நன்றாக நான் சொல்லும் வார்த்தைகளைக் கேட்கவும். இந்தப் பரந்த உலகத்தில் உம்மைத்தவிர எனக்கு யாரும் துணை இல்லை. மீரா சொல்லுகிறாள், "ஏ ராம், நான் உம்முடைய அடிமை. உம்மையே முழுமையாக நம்பியிருக்கிறேன். இந்த உலகக் கட்டுக்களிலிருந்து விடுவித்து என்னைக் காப்பாற்றும்."

166. ஏ கிரிதாரி, நான் உம்முடைய திருவடிகளையே வந்தடைந்தேன். கருணைக் கடலே, என் மானத்தைக் காப்பாற்றும். என்னைக் காப்பாற்றும். நீர் அஜாமிளன் என்பவனைக் காப்பாற்றவில்லையா? மிக்க நீசச் செயலைச் செய்த சத்னு என்ற பெண்ணைக் காப்பாற்றவில்லையா? மூழ்கிப் போக விருந்த கஜராஜனைக் (கசேந்திரனை) காப்பாற்ற வில்லையா? உம்முடைய அற்புதமான மற்றொரு செயல், கணிகா (விபசார)ப் பெண்ணை யாவரும் பார்க்கும்படி வீடுபேறு அடையச் செய்தீரே! தண்ணீரில் உயிரைவிடப் போகும் கசேந்திரனைக் காப்பாற்றவில்லையா? இவ்வாறாகப் பல தீவினையாளர்களைக் காப்பாற்றி, நல்வினையாளர்களைப் போல அவர்களை ஆக்கி, அவர்களால் அவர்களைப் புகழும்படி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்தீரே! ஏ கிரிதரகோபாலா, கூனியாகிய வேடச்சியையும் காப்பாற்றினீர். இந்தச் செய்தி இந்த உலகம் முழுதும் அறியும். அவ்விதமான புகழை யாராலும் செய்து முடிவடைய முடியாது. வேத புராணங்களும் "நேதி, நேதி" என்று சொல்லி ஓய்வடைந்துவிட்டன. மீரா சொல்கிருள், "பிரபு, நான் உம் திருவடிகளைப் புகலடைந்தேன். என் வேண்டுகோள் மொழிகளைக் காதுகளால் கேட்டு, என்னை அருள்செய்ய வேண்டும்."

(சத்ஞ என்ற பெண் புலால் விற்கும் நீசப்பெண். அவளிடம் சாளிக்கிராமம் நிறைபடிக் கல்லாக இருந்தது. ஒரு சமயம் ஒரு சாது அந்தப் படிக்கல்லாக இருந்த சாளிக்கிராமத்தை எடுத்துக் கொண்டுபோக, அவருடைய கனவில், "நான் சத்ஞ என்கிற பெண்ணிடம் அதிகப் பிரியமாக இருக்கிறேன். அவளிடமே என்னைக் கொண்டு சேர்" என்று பிரபு சாதிக்க, அவரும் அவ்விதமே செய்ய, சத்ஞ களிப்பு மிகுதியால் பெருமாளை வழிபட்டு வைகுண்ட பதவியை அடைந்தாள்.)

கணிகா: ஜீவந்தி என்கிற வைசியப்பெண் விபசாரத் தொழிலைச் செய்துகொண்டிருந்தாள். அவள் ஒரு கிளியை விலைக்கு வாங்கினுள். அது தன் புதல்வனை அன்போடு நாள்தோறும் "ராம்" என்று வேதனையோடு அழைக்கும். அதைக்கேட்டு, நாம உச்சரிப்பின் பயனுல் கிளியும் கணிகாப்பெண்ணும் (புண்ணியம் செய்தவர்களுக்குக் கிடைக்கக்கூடிய) கண்ணனுடைய திருவடிப் பேறு பெற்ருர்கள்.

குப்ஜா: கம்சனுடைய பணிப்பெண். கம்சனுக்காக வைத்திருந்த சந்தனம், மலர்மாலைகளைக் கண்ணனுக்கு அளித்து, கண்ணனுடைய அருளைப் பெற்ருள்.

167. மது, உம்மிடம் மீண்டும் வணங்கிச் சொல்கிறேன். என்னைப் பிறவிக் கடலிலிருந்து அக்கரைக்கு அழைத்துச் செல். என்னைக் காப்பாற்று. இந்தப் பிறவியில் பல இன்னல்கள் இருக்கின்றன. என் ஐயங்களையும் துன்பங்களையும் நீக்கியருள்வீர். எனக்குப் பல செயல்களைச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. உலகக்கட்டுக்களினுல் ஏற்படும் பாசங்கள் அநேகம் இருக்கின்றன. பிரபு, நீர் இந்தக் கட்டுகளை அறுத்து, விடுதலை அளிப்பீர். நான் பல பிறவி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களில் பிறந்து, பிறவி வெள்ளத்திஞல் அடித்துக்கொண்டு போகப்படுகிறேன். பிறப்பு இறப்புக் கடலுக்குட்பட்டு அழுந்திக் கொண்டிருக்கிறேன். மீரா சொல்கிருள், "கிரிதரநாகர், எனக்கு வீடுபேறு அளிப்பீர், பிறப்பு இறப்புக் கடலாகிய கட்டுக்களில் இருந்து விடுதலே அளிப்பீர்."

168. கருணைக்கு இருப்பிடமானவரே! என் வழிபாட்டு வேண்டுகோள்களே உம்முடைய காதுகளால் கேட்டு, அருள் செய்வீர். உம்முடைய தூய்மையான புகழ் என்னே மகிழ் வூட்டுகிறது. இந்தப் பரந்த உலகத்தில் எனக்குத் தோழி யாரும் இல்லே; எல்லாரையும் நான் பகைத்துக்கொண்டு விட்டேன். நீர் கசேந்திரனே முதலேயிடமிருந்து காப் பாற்றினீர். அதுபோல என்னேயும் காப்பாற்றவேண்டும். நீர் வாய்பேசாமல் இருக்கலாமா? சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கலாமா? மீரா சொல்கிருள், "நான் உம்முடைய அடிமை. உம்மிடம் வணங்கி வேண்டுகின்றேன், உம்மை விட்டு, இந்த உலகத்தில் எனக்கு யாரும் உதவி செய்பவர் இலர்."

169. ஏ அரிபகவானே, தீவினேயாளர்களேக் காப் பாற்றும் பேரருளாளன் என்று உம்மை எல்லாரும் சொல் கிருர்கள். அதேமாதிரி, சம்சாரக்கடலின் பயத்திலிருந்து விடுதலே அளிப்பவரே, துக்கங்களே அனுபவிக்கும் உம்முடைய அன்பர்களுக்கு நன்மையைச் செய்விப்பவர் என்றும் சாதுக்கள் புகழ்கிருர்கள். ஏ பிரபு, என் வணக்க வழிபாடு களேயும் ஏற்று என்னிடமும் சீக்கிரமாக ஓடிவந்து கசேந் திரனேக் காப்பாற்றியதுபோல் என்னேயும் காப்பாற்ற வேண்டும். நீர் அன்பர்களின் தீவினேகளேப் போக்கி நன்மை செய்பவர். திரௌபதியின் அலறலேக் கேட்டு, அவளேக் காப்பாற்றி, துச்சாதனனுடைய கர்வத்தையும் நாசம் செய்தீர். இரண்யகசிபைக் கொன்று, பக்தபிரகலாதனேக் காப்பாற்றினீர். உம்முடைய அருள் நோக்கிஞல் முனிவர் மனேவியாகிய அகலிகை உயிர்ப்பிக்கப் பட்டாள். அதேபோல் நட்பிற் சிறந்தவராகிய குசேலருடைய துன்பங்களேயும் நீக்கியருளினீர். மீரா சொல்கிருள், "ஏ பிரபு, என்னுடைய வேண்டுதலேயும் கேட்பீர். எந்தக் காரணத்திஞல் நீர் மீராவைக் காப்பாற்றுவதற்குத் தயங்கு கிறீர்? என்று எனக்குத் தெரியாது."

170. ஏ மேகவண்ணு, நான் பிறவிச் சுழலில் அழுந்தி மூழ்கிக் கொண்டிருக்கிறேன். என் கையைப் பற்றி எழுப்பி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்னைக் காப்பாற்ற வேண்டும். உம்மை நான் புகலடைந்து விட்டேன். என்னிடம் பல தீக்குணங்கள் இருக்கின்றன. அவற்றை நீர் ஒருவர்தாம் பொறுத்துக் கொள்ள முடியும். என்னால் பிறவிக்கடலின் அக்கரையைத் தாண்ட முடியாது. மீரா சொல்கிருள், "அரிப்பிரபு, நீர் அவிநாசி. உம்முடைய பெயரைக் காப்பாற்றுவதற்காக, உம்முடைய புகழைக் காப்பதற்காகவாவது, தீவினையாளர்களையும் காப்பாற்றக் கூடியவர் என்கிற பெயருக்கு ஏற்ப, என்னையும் காப்பாற்றியருள்வீர். என்னைக் காப்பாற்றவில்லையானல், உம்முடைய இனிமையான பெயரின் புகழ்களும் முடிவடைந்துவிடும்."

171. ஏ மேகவண்ணா, சியாம், கோவிந்தா, எப்பொழுதும் என்னிடமே இருப்பீர். என்னைவிட்டுப் போய்விட வேண்டா. நீர் கபீர்தாஸ் வீட்டிற்கு வந்து அந்தக் குடும்பத்திற்குத் தேவையான பொருள்களை வண்டியில் கொணர்ந்துவந்து இறக்கினீர். அதேபோல நாமதேவரையும் ஆட்கொண்டீர். அவர் வீட்டைக் கட்டிக் கொடுத்தீர். தாஸர்கன்னாவின் வயலில் செழுமை உண்டாக்கினீர், கசேந்திரனின் துக்கத்தைப் போக்கினீர். குசேலர் என்கிற அந்தணனும் உம்முடைய மனநிறைவுக்காக அவல் கொணர்ந்துவர அதையும் பெற்றுக்கொண்டு களிப்பித்தீர். சபரீ என்கிற வேட்டுவப் பெண்ணின் வீட்டில் இலந்தைப் பழத்தையும்; கர்மாபாஈ என்கிற பக்தனின் வீட்டில் கிச்சடி சாப்பிட்டும், நீர் மகிழ்ச்சி எய்தினீர். ஏ பிரபு, நீர் ஆயிரக் கணக்கான கோபிகைகளின் நடுவே விளையாடித் தாரகைகளின் நடுவில் சந்திரன் ஒளிவிடுவதுபோல் பிரகாசித்தீர். மீரா சொல்கிருள், "சாதுக்களனைவருக்கும் பிரியமானவரே, என் துக்கங்களையும் விலக்கியருள்வீர்."

(கபீர்தாஸ் விலைக்கு விற்க வந்த பட்டாடையை சாதுவுக்குக் கொடுக்க, பகவான் வியாபாரியாக வந்து எல்லாப் பொருள்களையும் கபீருக்கு அளித்தார்.)

(நாமதேவரின் வீடு நெருப்புக்கு இரையானபோது பகவானைப் பார்த்து, "என்னையும் பெற்றுக் கொள்ளவும்" என்று கேட்க, பிரபு மகிழ்ச்சியடைந்து, இரவே அந்தக் கூரையை ஓடுகளால் நிரப்பிச் சீரமைத்தார்.)

(கன்னா என்கிற பக்தன் விதைக்க வைத்திருந்த நெல்லைச் சாதுக்களுக்குச் சமைத்து உணவு படைத்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விட்டார். தம் எசமானியம்மாவுக்குப் பயந்து, வெறும் தாம்பாளத்துடன் வயலுக்குச் சென்று நெல் விதைப்பது போலப் பாவிக்க, அந்த ஆண்டு பகவானருளால் நிலம் மிகச் செழிப்பாக விளைந்திருந்தது. அதைப் பார்த்த உலகமக்கள் வியப்படைந்தனர்.)

(கர்மாபாஈ நாள்தோறும் சாதுக்களுக்கு அன்னம் படைப்பார். ஒருசமயம் பகவான் சாதுவேடமணிந்து கர்மாபாஈ வீட்டிற்குச் சென்று கிச்சடி சாப்பிட்டு வந்தார். அப்பொழுது நேரமாகிவிட்டபடியால் தம் வாயை அலம்பாமல் ஓடிவந்து விட்டார். கோவிலில் மூர்த்தியின் வாயில் கிச்சடியின் பருக்கை ஒட்டிக் கொண்டிருக்க, கோவில் பூசாரி வியப்பாக அதைப் பார்த்துக் கொண்டிருக்க, ஓர் உருவிலி வாக்கு (ஆகாசவாணி) நடந்த விவரத்தைச் சொல்லி, "கர்மாபாஈயின் வீட்டிற்குச் சென்று உணவு அருந்தியதால், இஃது ஏற்பட்டது" என்று கூற, எல்லாரும் வியப்பில் மூழ்கினர்.)

172. ஏ கண்ணா, நான் உம்முடைய பெயர்ப்பெருமை யால் கவரப்பட்டேன். நற்செய்கை ஒன்றும் நான் செய்ய வில்லை. உம்முடைய பெயரை நாவில் உச்சரிக்கும் ஆற்ற லால் அனைவரும், கல்லாக இருந்த பொருளும், யாவரும் காப்பாற்றப்பட்டார்கள். உலகமே உருவமானவரே! உம் பெயர் உச்சரிப்பினால் பிறவிக் கடலைத் தாண்டி விட்டார்கள். "கணிகா" என்கிற தாசி ஒரு சுபமான செயலைச் செய்யவில்லை. அவளால் விலைக்கு வாங்கப்பட்ட கிளி "ராம், ராம்" என்று சொல்ல, அதைக்கேட்ட அந்தத் தாசி வைகுண்ட வாசியாக ஆனாள். கஜேந்திரனும் மூழ்கிப் போகிற சமயம் உம் பெயர் உச்சரிப்பினால் காப்பாற்றப் பட்டான். இவர்கள் அனைவருக்கும் உம்மால் துன்பம் விளைவிக்கப்பட்டது. அதுவே அவர்களுக்கு நன்மையாகி விட்டது. கருடன்மீதுகூட வராமல், தாமே நேரில் ஓடி வந்து கஜேந்திரனைக் காப்பாற்றினீர். அஜாமிளன் என்கிற தீவினையாளனும் மரணசமயத்தில் "நாராயணா" என்கிற பிள்ளையைக் கூப்பிடும் சமயத்தில், நீர் உம்முடைய சேவகர் களுடன் தோன்றி ஆட்கொண்டு விட்டீர். இதே போல் உம்மைப் புகலடைந்த அன்பர்களைக் காப்பாற்றியருள் செய் திருக்கின்றீர். மீரா சொல்கிறாள், "பிரபு, நானும் உம் அடிமை. என்னையும் நீர்தாம் காப்பாற்ற வேண்டும்."

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

173. ஏ பிரபோ, நான் அபலையான பெண். உம்மையே முழுவதும் திடமாக நம்பியிருக்கின்றேன். ஏனெனில், கண்ணன் தாமாகவே என் வீட்டிற்கு எழுந்தருளியிருக்கிருர். கண்ணன் வடிவாகிய என் பதிக்கு நான் உடந்தையான படியால், என் காதுகளுக்குக் குண்டலங்களை அணிந்து கொள்வேன். ஏனெனில் கண்ணன் வடிவாகிய மாலை என்னிடம் இருக்கிறது. துளசிமாலை (சித்தமாலை), நான்கு தோள்பட்டைகளின் வளையல்கள், ஆகியன எல்லாம் எனக்குக் கண்ணனைப் போல இருக்கின்றன. ஆகவே நான் இவற்றுக்காக, ஏன் தட்டான் வீட்டிற்குச் செல்லவேண்டும்? அங்குச் செல்வதற்கு ஒரு தேவையும் ஏற்படவில்லை. "ஜாஞ்ச்ரியா," காலில் அணியப்படும் கொலுசு, தண்டைகள், உலக வாழ்க்கையினரான மக்களுக்குத் தேவை. எனக்கு (கிருஷ்ண நாமமே) சலங்கை போன்றது, கால்களுக்குச் சிறந்த அணி; அதுவே கண்ணன். என் உள்ளத்துள் வீற்றிருக்கும் இராம நாராயணனே எனக்குக் கால் விரல்களில் அணியப்படும் (பீஞ்சியா) மிட்டி போன்ற நகைகள். ஆகவே எனக்கு மற்றக் கால்களுக்கு வேண்டிய அணிவகைகள் தேவை இல்லை. இடுப்பில் கட்டிக் கொள்வதற்கு மேகலை, ஒட்டியாணம் போன்ற நகைகள் சாதாரணக் கலியாணப் பெண்ணுக்குத் தேவை. எனக்குப் "புருஷோத்தமன்" என்கிற பெயரே இடுப்பில் கட்டிக் கொள்ளும் அணி, (பேட்டி) "திரிவிக்ரம" என்ற பெயரும் அதில் ஒலி ஒலிக்கும் சலங்கைகள் (தாலா) "கருணாநந்தர்" அவற்றையே தாளமாக நினைப்பார். ஆகவே அவரை நான் இறுக அணைத்துக் கொண்டு, சாவதானமாக வீற்றிருப்பேன். நான் மாமியாரைக் காண்பதற்காக நன்ருக ஒப்பனை செய்துகொண்டு இருக்கிறேன். எனக்கு இப்போது வேறு வேலை இல்லை. மீரா சொல்கிருள், "ஏ பிரபு, கிரிதர நாகர், நான் இப்போது அரிபகவான் திருவடிகளில் வழிபாடு செய்கின்றேன்."

174. என் மனத்தில் கண்ணபெருமான் எப்பொழுதும் வசித்துக் கொண்டிருக்கிருர். வானத்தில் மேகக் கூட்டங்கள் சஞ்சரிக்கின்றன. ஒரு மேகம் ஒலி செய்ய, இன்னொன்று நாணத்தால் அடங்க, மின்னல் ஒளி எங்கும் பரவ, எங்கு பார்த்தாலும் கனமேகங்கள் நிழல் தருவதுபோலக் குடை பிடிக்க, கிழக்கேயிருந்து வரும் தென்றற்காற்று மெதுவாகச் செல்கிறது. தவளை, மயில், குயில் ஆகிய எல்லாம் பேசத் துவங்கிவிட்டன. குயில் இனிமையான ஒலிகளைச் செய்ய, எல்லாரும் இன்பமாக இருக்க, மீரா சொல்கிருள், "பிரபு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிரிதர நாகர், நீர்தாம் என் சுவாமி, உம்முடைய திருவடித் தாமரைகளில் என் மனம் பணிந்து அடங்கிக் கிடக்கிறது.''

175. தோழீ, கண்ண பெருமான் இன்று என் வீட்டிற்கு வருவார், இதற்காக எப்பொழுதும் அவரை எதிர்பார்த்துக் கொண்டு நான் என் அரண்மனை உப்பரிகைமீது ஏறிச் சென்று அவரைப் பார்த்த வண்ணமிருக்கிறேன். தவளை, மயில், குயில் ஆகியவை ஒலிசெய்யத் தொடங்கிவிட்டன. அவை கோமளமான குரலால் இனிய ஒலிகளைச் செய்கின்றன. மேகக் கூட்டங்கள் நான்கு பக்கங்களிலும் பசுமை விளங்கு கிறது. இதைக் கண்டால், மேகங்களைப் பசுமை பொருந்திய பூமி தழுவுவதற்குப் புதிய இளமையான வடிவத்தை எடுத்துக் கொண்டதுபோல இருக்கிறது. மீரா சொல்கிருள், ''கிரிதர நாகர் மஹாராஜ், என் பிரபு, சீக்கிரமாகவே ஓடிவந்து காட்சி யளிப்பீர்.''

176. சோதிடர்களுக்கு நான் இலட்சம் தடவைகள் நன்றி செலுத்துகிறேன். என் பேரின்பரான மேகவண்ணக் கண்ணன் வந்துவிட்டார். இதனுல் என் உள்ளம் மகிழ்ச்சி யடைகிறது. மிகக் களிப்புடன் இருக்கிறது. நான் என் உயிர் நேசர் இருக்குமிடத்தை அடைந்துவிட்டேன். மனத்தில் மிக்க மகிழ்ச்சியனுபவம் ஏற்பட்டிருக்கிறது. என்னுடைய ஐம்புலன்களுடன் சேர்ந்து நான் என் காதலருடன் இன்பக் கூட்டுறவை அடைந்தேன். அங்கஅங்கமாகக் கலந்தேன். இன்பப் பெருக்கு ஏற்பட்டது. பிரியமுள்ள தோழீ, என் பிரியநாயகரைக் கண்டதும், என் துக்கங்கள் மாய்ந்தன. என்னுடைய உள்ள வேட்கைகளும் இச்சைகளும் தீர்ந்து விட்டன. மீரா சொல்கிருள், ''என்னுடைய வீடு (பவனம்) இன்பக் கடல், அமுதான பானசுகக் கொத்து, சுவாமி கண்ணன் என்ற பதிக்கு ஒப்பித்துவிட்டேன். (எல்லாம் அவருக்கு அளித்துவிட்டேன்.)''

177. ஏ மேகவண்ணக் கண்ணு, நீர் என் வீட்டிற்கு எழுந்தருளியபடியால், என்னுடைய கௌரி நோன்பு முடி வடைந்து, மிக்க பேரொளியுடன் விளங்குகிறது. நான் மகிழ்ச்சியடைந்தேன். மிக்க (ஹர்ஷ) களிப்புடன் இருக் கிறேன். கருமை, மஞ்சள் நிறம் கொண்ட மேகங்கள், களிப்புடன் சஞ்சரிக்கத் துவங்கிவிட்டன. மின்னல் ஒளியுடன் பிரகாசிக்கிறது. மேகக் கூட்டங்கள் ஒலி செய்கின்றன; தவளை, மயில், குயில்கள் ஒலிசெய்யத் துவங்குகின்றன;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோமள மதுரமான குரலில் மகிழ்ச்சியுடன் குயில்கள் கூவுகின்றன. மீரா சொல்கிருள், "கிரிதரநாகர் என் பிரபு. உம்முடைய திருவடிகளில் நான் அடிபணிந்தேன். எனக்கு உம்மீது மிக்க நம்பிக்கை ஏற்பட்டு, உம்மையே புகலடைந்தேன்."

178. தோழீ, உள்ளத்திற்கு இன்பம் தரும் ஆவணி மாதத்தில் மேகங்கள் மழையைப் பொழிகின்றன. இந்த இன்பமான வேளையில் என் மனம் மகிழ்ச்சி நிரம்பிக் களிப்புடன் இருக்கிறது. கண்ணபெருமான் வந்துவிட்டது போல நான் அவற்றைக் காண்கின்றேன்; செய்தி கேட்டதுபோல மகிழ்ச்சி அடைகின்றேன். வானத்தில் மேகங்களின் அடர்த்தி சாயையில், மின்னல் ஒளியையும் நான் காண்கின்றேன். எங்கு பார்த்தாலும் தண்ணீர் வழிந்து ஓடுகிறது. மேகங்களின் நீர்த்துளிகள் எங்கும் தெறித்து விழுகின்றன. எங்கு பார்த்தாலும் குளிர்மையானதும் இன்பத்தை அளிப்பதுமான காற்று வீசிக் கொண்டிருக்கிறது. மீரா சொல்கிருள், "என் பிரபு கிரிதரநாகர். இந்தச் சமயம் மங்கள கீதங்களைப் பாடும் சமயம். தோழீ, நீ செல்வாய், மகிழ்ச்சி (ஆஹ்லாத) யடைந்து, இன்னிசை பாடிக் கொண்டிருக்கின்றேன்."

179. ஏ கண்ணு, ஆவணி மாதம் என் மனத்தில் காதல் நினைவுகளை எழுப்பி, களிப்புடன் விளங்கும்படி செய்கிறது. ஆகவே நீர் பரதேசத்திலிருந்து என் வீட்டிற்கு இந்தச் சமயம் வருவீர். வானத்தில் மேகக் கூட்டங்கள் சஞ்சரிக்கின்றன; மிகக் கொடூரமாக ஒலிக்கின்றன. தவளை, மயில், சாதக பக்ஷி எல்லாம் இனிமையாக ஒலி செய்கின்றன. குயில் ஒரே களிப்பு மிகுதியால் ஒலி செய்கிறது. மீரா சொல்கிருள், "என் பிரபு கிரிதரநாகர், ஏ பிரபு, உம்மிடம் என் உயிர் முழுவதையும் அளித்துவிட்டேன். இவை எல்லாம் உம்முடைய அன்பின் முன்பு மிகமிக அற்பமானது (துச்சமானது).

180. நான் காதலார்வத்துடன் இருக்கின்றேன். ஒரே பயித்தியம் பிடித்தவள்போல, கண்ணனுடன் "ஹோலி விளையாட்டுகள்" செய்தேன். சிவப்பு நிறமுள்ள தூசுகள் எங்கும் பரவியிருக்கின்றன. கருமைநிறமுள்ள மேகங்களும் சிவப்பு நிறமடைந்துவிட்டன. சாயம் அடிப்பதனல், பீச்சுவதால், பல வண்ணமுள்ள தண்ணீர்த் தாரைகள் எங்கும் கிளம்பி எல்லோர்மீதும் விழுகின்றன. என்னுடைய குடமும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முழுவதும் மணப்பொருள்களாலும், சந்தனத்தாலும், கேசரி, அகர்பத்தி, கத்தூரி, கோரோசனை முதலிய மணப் பொருள்களாலும் நிரம்பியிருக்கின்றன. மீரா சொல்கிருள், "கிரிதர நாகர், நான் உமது அடிமை. உமது திருவடிகளையே புகலடைந்தேன்."

181. ஏ மேகமே, நீ பூமியிலிருந்து தண்ணீரைச் சுமந்து கொண்டு, மீண்டும் தண்ணீரைப் பூமிக்கு வஞ்சனையின்றிப் பொழிகின்ருய். ஏ தோழீ, மழைத்துளிகள் எங்கும் தோன்றுகின்றன. குயில் இனிமையான குரலுடன் கூவுகின்றது. ஒலிக்கும் பண்புள்ள காற்று மெல்லென வீசுகிறது. வானத்தில் மேகக் கூட்டங்கள் அங்குமிங்கும் உலவுகின்றன. நான் என் பிரபுவுக்காகப் படுக்கை (சய்யாசனம்) தயார் செய்திருக்கின்றேன். ஏ பிரபு, நீர் என்னுடைய இல்லத்திற்கு வாரும். நான் என் தோழிமார்களுடன் சேர்ந்து, மகிழ்ச்சியான உள்ளங்கொண்டு உம்மை வரவேற்று, காதுக்கினிய இன்னிசை பாடுகின்றேன். மீரா சொல்கிருள், "என் சுவாமி, அவிநாசி. அவரை வணங்குபவர்கள் உண்மையாகவே எல்லா நன்மைகளும் அடைந்தவர்கள். எவர்களுக்கு நல்வினை இருக்கிறதோ, அவர்களே அவரை வணங்குகின்ருர்கள்."

182. என் பிரபு என் வீட்டிற்கு வந்தார். ஊழிஊழிக் காலமாக அவரை எதிர்பார்த்து விரகிணிப் பெண் தன் பதியை எவ்வாறு எதிர்பார்ப்பாளோ, அதுபோலக் காத்துக் கிடந்தேன். நான் அவருக்காக விலைமதிப்பில்லாத இரத்தினமாகிற அன்புக்காக எல்லாவற்றையும் தன்னிழப்புச் செய்து விட்டேன். நான் என் வேண்டுதலைத் தெரிவித்துவிட்டேன். பிரபு தம்முடைய கடிதத்தை அனுப்பிவிட்டார். பேரருளாளரான அவர் என்மீது கருணை கொண்டு, எனக்குச் செய்தி அனுப்பியிருக்கிருர். கண்ணபகவான் என்னிடம் வந்து சேர்ந்தார். எனக்கு அங்க அங்கமாக இன்பம் ஏற்பட்டது. என்னுடைய அரிப் பிரபுவின் அன்பு, காதற்பெருங்கடல் போல எங்கும் பரந்தது. அதில் என் ஐம்புலன்களும் மூழ்கிவிட்டிருக்கின்றன. மீரா சொல்கிருள், "பிரபு, சுகத்தின் இருப்பிடமே, இன்பக் கடலே, நீரே என் தலைமீது ஒளிசெய்து (விராஜமானமாக) இருக்கிறீர்."

183. ஏ கண்ணப் பிரபு, மஹாராஜ், என் வீட்டிற்கு வருவீர். நான் என் வீட்டைப் புதிதுபுதிதான இளம் தளிர்க

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ளாலும், பூக்களாலும் அலங்கரித்திருக்கின்றேன். முழுநிறை ஒப்பனையுடன் விளங்குகிறது. நான் பிறவிபிறவியாக உமக்கு அடிமை. நீர் எனக்குப் பதி. மீரா சொல்கிருள், ''அரி பகவான் அவிநாசி, நீரே என் பிரபு. இன்று எனக்குக் காட்சி அளிப்பீர்.''

184. இராதாகேள்வரே. மஹாராஜ, உம்முடைய பேரழகு என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. இரத்தினங்களால் அணி செய்யப்பட்ட உம்முடைய தலை முகுடத்தின்மீது மயிலிறகுகள் விளங்குகின்றன. உம்முடைய வேடம், அணிகள் மஞ்சள் நிறமுள்ளதாக (குங்குமப்பூ நிறமுள்ளதாக) இருக்கின்றன. உம்முடைய மயிலிறகுகளின் தலைமுகுடமும், காதுகளில் அணியப்பட்ட மலர்களும், மகர குண்டலங்களும் எல்லாம் உம்மை இரசிக சிரோன்மணியாக விளங்கும்படி செய்கின்றன. மீரா சொல்கிருள், ''கிரிதர நாகர் என் பிரபு, ப்ரஜ்ராஜ், என் மன்னர் மன்னராகிய கண்ணப் பிரபுவை நான் சந்தித்தேன். என் பேறே பேறு.''

185. தோழிமார்களே, இன்று என் பிரபு என் வீட்டிற்கு வந்து விட்டார்! நான் இதுவரை விரகிணிப் பெண்ணைப் போல என் பிரபுவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இன்றுதான் அவரை என்னுல் அடைய முடிந்தது. இன்று அவர்மீது என் அருமைக் கருவூலமான அன்பு இரத்தினத்தை அலங்கரித்து அவருக்கு அளித்துவிட்டேன். அவருக்கு நல்ல அலங்காரம் செய்து ஆரத்தி எடுத்தேன். எந்தப் பிரபுவால் எனக்கு இன்று வருவதாகக் கடிதம் அனுப்பப்பட்டதோ, அந்தப் பிரபுவுக்கு நான் பலவிதத்தில் அன்பு செலுத்துவேன். இன்று என்னுடைய ஐம்புலன்களும் சேர்ந்து மகிழ்ச்சி கொண்டு, மங்கள கீதங்கள் பாடுகின்றன. இன்றுதான் என் பிரபுவைப் பார்த்து அவருடைய காதலுணர்வால் சகல இன்பங்களையும் அடைந்தேன். அரிபகவான் காதலன்பின் கடலாவார். அவர் தம்முடைய காதலன்பினுல் என் கண்களை நன்ருகக் கட்டிப் போட்டுவிட்டார். மீரா சொல்கிருள், ''என் வீட்டின் முற்றத்தில் பால்மழை பொழிந்திருக்கிறது. இன்ப நிறைவுடன் நான் விளங்குகின்றேன்.''

186. காதலன்பின் பெருக்கில் திளைக்கும் ச்யாம (மேக வண்ணர்) இராம் (கண்ணன்) என் நகரத்திற்கு வந்து இறங்கினுர். நகரத்தில் புகுந்தார். என் உயிர்போனுலும் போகட்டும், நான் இந்தக் கண்ணனிடம் வைத்திருக்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அன்பை ஒருகாலும் விடமாட்டேன், மறக்கமாட்டேன். அவருடைய திருவடித் தாமரைகளில் இணைக்கப்பட்டு விளங்கு வேன். ஏழு தீவுகளையும் வலம் வந்து முடித்தேன்; இதனால் அரிபகவானுடன் ஒன்றாகக் கலந்தேன். அவர் மூன்று உலகங்களையும் தம் வயிற்றுள் வைத்திருக்கிறார். அவர் தமது திருவடிகளின் மூன்று அடி கொண்டு இந்த உலகம் முழுவதை யும் அளந்தார். மீரா சொல்கிறாள், "என் சுவாமி அவிநாசி, அரிபகவான், அவருடைய திருவடிகளில் நான் ஒட்டிக் கொண்டிருக்கிறேன்; புகலடைந்திருக்கிறேன்.''

187. எத்தனை முறைகள் மேகங்கள் பொழிந்த போதிலும், என் உடம்பைப் பற்றி எனக்கு உணர்வில்லை. இதற்குக் காரணம் என் பேரருளாளர் கண்ணப்பிரபு என் அருகே இருக்கிறார். ஏ மேகமே, சிறியசிறிய நீர்த்துளி களால் நன்றாகப் பொழிந்து, குளம் குட்டைகள் முழுவதும் நிரப்பு; இடைவிடாமல் மழை பெய்துகொண்டிரு. எனக்குத் துன்பம் ஒன்றும் இல்லை. என் பிரபு பல நாட்களுக்குப் பிறகு என்பக்கம் வந்து சேர்ந்தார். என்னைவிட்டுப் போய் விடுவாரோ என்று பயம் இருந்துகொண்டிருக்கிறது. மீரா சொல்கிறாள், ''என் பிரபுவினிடம் மிகுந்த அன்பைக் காட்டி வளர்த்துக் கொண்டேன். ஏனெனில் அவரே எனக்கு முன் பிறவிகளில் இருந்து வந்த பதி.''

188. மனமே, பிரபு வசிக்கும் அந்தத் தேசத்திற்குச் செல். அங்குதான் அவர் உனக்குக் கிடைப்பார். ஏ பிரபு, உமக்கு விருப்பமாகில் நான் மலர்களின் பல நிறங்கள் போலச் சிவப்புநிறப் புடவையை உடுத்திக் கொள்கிறேன்; உமக்குச் சம்மதமிருந்தால், பக்தசிரோன்மணியைப் போல வேடமணிந்துகொள்கின்றேன். உமதுமார்க்கத்தைமுத்துகளை வைத்து அலங்கரிக்கிறேன். இல்லை, உமக்கு விருப்பமாகில், உம் அடியார்களைத் தேடியலைகிறேன். மீரா சொல்கிறாள், "என் பிரபு கிரிதரநாகர், என் வேண்டுகோளைக் கேட்டு அருள் செய்வீர்.''

189. கிரிதாரி, நீர் என்னை அடிமையாகக் கருதி என்னை ஆட்கொள்வீர். உமக்காக நந்தவனம் சென்று உம்மை எதிர்பார்த்துக் கொண்டு உமது காட்சியை அடைவேன். பிருந்தாவனத்தின் இரத்தின மண்டபத்திலும் தெருவீதி களிலும் கோவிந்தனுடைய புகழைப் பாடிக் கொண்டிருப்பேன். அடிமையான எனக்கு நீர் காட்சி அளித்தீர்; தோழியின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வடிவத்தையும் நினைத்து, உம்மை அடைவேன். பரம்பரையாக வரும் பக்தியை, பிறவிபிறவியாக வரும் பக்தியை உறுதியாகப் பெறுவேன். உம்முடைய தலையின்மீது மயில் இறகுகளும், பட்டுப் பீதாம்பரமும் மிக்க அழகாக இருக்கின்றன. உம்முடைய கழுத்தில் வைஜயந்திமாலை அழகாக இருக்கிறது. புல்லாங்குழலினைக் கையிலேந்திய மாயக்கண்ணன் பிருந்தாவனத்திற்கு வந்திருக்கிறார். என்னால் ஏற்படுத்தப்பட்டதும் பசுமையானதும் புதியதுமான குஞ்ச மண்டபத்தில் கொடிகளின் நடுவே நான் இருப்பேன். மலர்களின் பலநிறங்களுக்கேற்ப, நான் சிவப்புப் புடவை உடுத்திக்கொண்டு, நீல நிறமுள்ள கண்ணனைக் காட்சி பெறுவேன். மீரா சொல்கிறாள், "என் சுவாமி கிரிதர நாகர், உம்முடைய காட்சியை அடைவதற்காக நான் பலவிதமாகத் துன்பங்களை அனுபவிக்கின்றேன். ஏ பிரபு, யமுனைக் கரையில் நடுஇரவில் கட்டாயம் எழுந்தருள்வீர், காட்சி தந்தருள்வீர்."

190. அன்புத் தோழீ, கண்ணப் பிரபுவினால் காதலம்பு என்மீது அடிக்கப்பட்டது. நான் அவருடைய காதலுக்குக் கட்டுப்பட்டு விட்டேன். என் இதயத்தில் விரகதாபத்துடன், காமபாணத்தின் தீவிரத்தினால் என் தேகம் எரிக்கப்படுகிறது. நான் மிக்க வேதனையடைந்து விட்டேன். என் வேதனையான மனம் உடனேயே அவரை அடைய விரும்புகிறது. ஆனால், என் உடலோ அதைச் செய்து முடிக்க விரும்புகிறதில்லை; பிரபுவை விட்டு எனக்கு உதவி யாருமிலர். நான் அவருடைய காதலன்பில் இறுகக் கட்டுப்பட்டு விட்டேன். ஏ மீராவின் பேரன்பரே, என்னுடைய விரகதுக்கங்களைப் போக்குவீர். நீரே அவற்றை நன்கு அறிவீர். இந்த வேதனையில் எனக்கு ஒருவிதக் குற்றமில்லை. என் இரு கண்களும் ஒரே நிலையாகக் கண்ணீர்த் தாரைகளை வடித்துக் கொண்டிருக்கின்றன. அவையே உம்மைக் காண ஆசைகொண்டு இவ்வாறு துன்பப் படுகின்றன. மீரா சொல்கிறாள், "நான் என் சுவாமியைக் காணாமல், எந்த வழியிலும் நான் ஆறுதலடைய மாட்டேன். என்னால் முடியாது."

191. என் மனத்தில் இராமநாமம் எப்பொழுதும் வசித்துக் கொண்டிருக்கிறது. ஏ மேகவண்ணக் கண்ணா, உம்மை விரும்பிக் காதல் கொண்டதால், உலகத்தினரின் கேலிக்கு நான் இலக்காகி விட்டேன். சிலர் எனக்குப் பயித்தியம் பிடித்திருக்கிறது என்கிறார்கள்; இன்னும் சிலர் நான் குலமரியாதைகளை நாசம் செய்துவிட்டேன் என்று கூறி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விட்டார்கள் ; என்றும் ; இன்னும் சிலர், மீரா விளக்கின் ஒளியைப்போல இருக்கிருள் என்று சொல்கிருர்கள். இவை அனைத்தும் தவருன வார்த்தைகள். நான் என் பிரபுவின் பெயர்ப்புலம்பலில் என் முழு அறிவையும் இழந்துவிட்டேன். மீரா சொல்கிருள், "பக்தி என்கிற கத்திமுனை விபரீதப் பலனைக் கொடுக்கிறது. மரணக் கட்டுகளை அறுப்பதிலும், பிறவி விடுதலையை அளிப்பதிலும் பக்தியின் கத்தி மிக்க பயன்படுகிறது."

192. என் மனத்தில் இராதையும் கண்ணனும் எப்பொழுதும் வசித்துக் கொண்டிருக்கிருர்கள். சில பேர் மீராவுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டது என்கிருர்கள்; இன்னும் சிலர் மீரா குலத்தின் மரியாதைகளை நாசம் செய்து விட்டாள் என்று சொல்கிருர்கள். இன்னும் சிலர் மீரா திரையை விலக்கிவிட்டு, உலக நாணத்தையும் துறந்துவிட்டு, அன்பிளுல் கண்ணன் முன்பு, நடனம் ஆடுகிருள், பாட்டுப் பாடுகிருள் என்று என்னைத் திட்டுகிருர்கள்; இராதையைப் போல மீராவும் உத்யான மண்டபத்தில் உள்ள செடி கொடி களின் நடுவே சஞ்சரிக்கிருள் என்றும் சிலர் சொல்கிருர்கள். இருதயத்திலும் நெற்றியிலும் திலகம் அணிந்து கொண்டிருக் கிருள். அவளைக் கொல்வதற்கு அரசர் நஞ்சை அனுப்பி வைத்தார். மீரா மகிழ்ச்சியுடன் அதைக் குடித்தாள். மீரா சொல்கிருள், "என் பிரபு கிரிதரநாகர்; நான் அவரிடம் பக்தி கொண்டு கலந்துவிட்டேன்."

193. அன்புத்தோழீ, கண்ணன் என்பக்கம் இல்லாமல் நான் மிகுந்த துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக் கிறேன். அவரைவிட்டு என் மனத்தைக் கட்டுப்படுத்துபவர் யாரும் இலர். இந்த உலகமோ அஞ்ஞானத்தின் இருப் பிடம். இதில் சாதுக்களின் சேர்க்கையின் பெருமையை நன்ருகப் புரிந்து கொள்பவர்கள் யாருமிலர். இங்குச் சிலர் சாதுக் கூட்டத்தை நிந்தனை செய்கிருர்கள் ; கெட்டவழிகளில் பணம் சம்பாதிக்கிருர்கள். எந்த மனிதனும் இராமனுடைய திருப்பெயர் உச்சரிப்பில்லாமல் வீடுபேறு எய்துவதில்லை. அவர்கள் கோடி, இலட்சக்கணக்கான பிறவிகளில் பிறந்து இறந்து மீண்டும் பிறக்கிருர்கள். இந்த உலகத்தில் வசிக்கும் மக்கள் மூர்க்கர்கள். அவர்கள் மறந்தும் கூடச் சாதுக் கூட்டங்களை அடைகின்ருர்களில்லை. அவர்கள் தங்கள் பிறவியைப் பாழ்படுத்திக் கொள்கிருர்கள். மீரா சொல்கிருள், "ஏ பிரபு, நான் உம்முடைய திருவடிகளை அடிபணிந்தேன். உம்முடைய திருவடிகளை அடைவதே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பரமபதம்; மேலான நிலை. அவனே பிறப்பு இறப்பிலிருந்து விடுதலை பெற்று வீடுபேறு அடைகின்றான்.''

194. இந்த உலகத்தில் மக்கள் மிக்க மூர்க்க குணம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். இராமனுடைய பெயரை உச்சரிப்பதில் நாணத்தை அடைகிறார்கள். அரிபகவானுடைய கோவிலுக்குப் போவதில் அவர்களின் கால்கள் மிக்க துக்கமடைகின்றன; ஆனால், அவர்கள் மற்ற இடங்களுக்குச் சென்று அலைந்து திரிகிறார்கள்; அங்குச் செல்வதில் அவர்களுக்குக் களைப்புக் கிடையாது. எங்கே விழாக்களின் கொடி நாட்டுகிறார்களோ, அங்கே வீட்டு வேலைகளை விட்டு விட்டு, ஓடிச் செல்கிறார்கள். எங்கு பாண்டு வாத்தியங்களும் மேள வாத்தியங்களும் நடன நிகழ்ச்சிகளும் இருக்கின்றதோ ஆங்கு அவர்கள் பல நேரம் காத்துக் கிடக்கிறார்கள். மீரா சொல்கிறாள், ''என் சுவாமி கிரிதர நாகர்; அவருடைய திருவடித் தாமரைகளில் நான் என் மனத்தை முழுமையாக அளித்துவிட்டேன். ஆகவே எனக்கு உலகத்தில் ஒருவித ஆசையும் இல்லை.''

195. மனிதனுக்கு உலகக் கட்டுகள், வாசனைகள் இருக்கும் வரை, எந்த முறையில் அவனுக்குப் பக்தி ஏற்படும்? அவனுடைய மனம் தீவினை வயத்தது. அவனுக்குக் கட்டுகள் விலகுவதில்லை; அவன் தன் நெற்றியைத் தண்ணீரினால் தூய்மைப் படுத்தி, திலகமிட்டுக் கொண்டாலும், மனம் தூய்மை எய்தாமல் போனால், அவனுக்கு அது உண்மையான திலகமாகாது. வாசனைகள் என்கிற கொடிய நாயினால் அவன் கடிக்கப்பட்டு, அடங்கிவிடுகிறான். அவனுக்குப் பகை எண்ணம் இதயத்தில் கொழுந்து விட்டு எரிகிறது. அவனால் கண்ணபெருமானை அடைய முடிகிறதில்லை. மனத்தில் வாசனைகள் அழிந்துபோனால் ஒழிய, கண்ணனை அடையமுடிகிறதில்லை. மனத்திலுள்ள வாசனை நீங்கியும், லோபம் அழிந்தும், வன்மம் மாய்ந்தும் மனம் தெளிவடைந்த பிறகே பகவானை அடையமுடியும். சிற்றின்ப ஆசை, பொருள்கள் மீது பற்று, இவற்றால் சூழப்பட்ட ஏ மனிதனே, உனக்கு உணவுக்காகக் கெட்ட தொழில்களைச் செய்துகொண்டு, தீவினை வயத்தனாக இருக்கிறாயே? உனக்குப் பசி, எளிமைத்தனம் இவற்றால் துன்பம் ஏற்பட்டு வேதனை அடைகின்றாய். ஆனால், இராம நாமத்தை ஏன் உச்சரிக்கமாட்டேனென்கிறாய்? தன் சொந்த வீட்டின் மேன்மைகளில் ஊறியவனாக, எப்பொழுதும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தற்பெருமையைப் பறைசாற்றிக் கொண்டும், எப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கிறாயே, உனக்குத் தற்பெருமையால் ஏற்படும் கர்வங்களும், ஏழைகளை அவமதித்தலும், இயற்கைப் பண்பாக இருக்கும் போது, எப்படி வணக்கம் என்கிற தண்ணீர் உன் உள்ளத்தில் ஊற்றாகப் பொங்கும்? கனிவு சார்ந்த அடக்கம் இல்லை; உன் இதயத்தில் பகவான் குடி கொண்டு வாழும் போது, அவருக்குக் கபட, வஞ்சக வாழ்க்கை பிடிக்காது. உன் மனத்தில் இராம நாமம் தங்குவதில்லை; ஆனால், அழகுக்காகவே நீ துளசிமாலையை அணிந்து கொண்டிருக்கிறாய். ஏ மனிதனே, உனக்கு நல்லகதி கிடைக்க வேண்டுமானால், இனிமேலாவது அரியினிடம் பக்தி செலுத்தி, உலக இன்பங்களைத் தியாகம் செய். மீரா சொல்கிறாள், "கிரிதர நாகரிடம் உள்ளார்ந்த அன்பைச் செலுத்தி, உலக சுகதுக்கங்களிலிருந்து விடுபட்டு, பகவானை வணங்கு. வீடு பேற்றை எய்துவதற்கு முயல்வாயாக."

196. எந்த வழியில் பிரபுவை அடைய முடியும், எந்த வழியில் பிரபுவின் மேலான நிலையை அடையமுடியும்? ஏனெனில், உலக வாழ்க்கை ஐம்புலன்களின் சேட்டைகளால் ஏற்பட்டது; மூன்று விதமாக, உணவு, உறக்கம், செயல் என்று மூன்று வழிகளால் வாழ்நாள்கள் கழிந்து போகின்றன. ஏ மனிதனே, உனக்குக் கிடைக்கப் பெறாத மானிடப் பிறவி ஏற்பட்டிருக்கிறது. அவ்விதமிருக்கும் போது நீ ஏன் உலக இன்பங்களில் ஈடுபட்டு, ஏன் அழிந்துபோகிறாய்? மீரா சொல்கிறாள், "கிரிதர நாகரைப் புகழ் பாடி வழிபடவேண்டும். எது நடக்க வேண்டுமோ, அது நடந்தே தீரும். ஆகவே இவற்றில் மனத்தைச் செலுத்துவது வீணே."

197. ஏ தோழீ, எனக்குப் பிருந்தாவனத்திற்குப் போவது மனத்திற்கு மிக்க இன்பமாக இருக்கின்றது. எங்கே கண்ணன் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கிறாரோ, அங்கேதான் துளசி நடமாடுகிறாள்; அதனால் கண்ணனுடைய காட்சி அடிக்கடி ஏற்படுகிறது. அங்கே யமுனை தூய தண்ணீரை வழங்கிக் கொண்டு செல்கிறாள். மக்கள் பால், தயிர் போன்ற எளிமையான உணவுகளை உட்கொண்டு, தூய்மையாக இருக்கிறார்கள். அங்கேதான் கண்ணபகவான் துளசியினால் செய்யப்பட்ட முகுடத்தைத் தரித்துக் கொண்டு, இரத்தின சிம்மாசனத்தின்மீது அமர்ந்துகொண்டு பொலிவுடன் விளங்குகின்றார். அங்கேதான் ஒவ்வொரு வீட்டிலும், நடன மண்டபத்திலும் புல்லாங்குழலொலி கேட்கப்படுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண்ணபெருமானும் அங்கேதான் ஒவ்வோர் இடத்திலும் உலாவுகின்றார். மீரா சொல்கிறாள், "என் பிரபு கிரிதர நாகர், அவரிடம் அன்பு செய்யாமல் போனால், மானிடப் பிறவி வீணே."

198. ஏ மனமே, நீ யமுனா நதிக்கரைக்குப் போய் உலவு. அங்கேதான் தண்ணீர் தூய்மையாக இருக்கிறது. அங்கே நீராடினால் உலக வேதனைகள் அடங்கி, உடல், மனம் ஆகிய இரண்டும் குளிர்ந்துபோகின்றன. துக்கங்கள் நாசமடைகின்றன. இங்கேதான் பலராமனுடன் கூடக் கண்ணபெருமான் புல்லாங்குழல் இசைக்கின்றார்; அவருடைய தலையின்மீது மயில் இறகுகள் கொண்ட மகுடம் அழகாக விளங்குகின்றது. அவர் காதுகளில் குண்டலங்களும் மிக்க ஒளியுடன் இருக்கின்றன. மீரா சொல்கிறாள், "என் பிரபு கிரிதர நாகர், அவர் பலராமனுடன் சேர்ந்து எப்பொழுதும் விளையாடிக் கொண்டிருக்கிறார்."

199. ஏ கண்ணா, உன்னுடைய கருமை நிறம் கொண்ட நெற்றி யாரால் சந்தனப் பொட்டு இடப்பட்டு அலங்கரிக்கப் பட்டு ஒளியுடன் விளங்குகின்றது? என் மனத்தில் ஓர் எண்ணம் தோன்றுகிறது. யசோதாதேவி தன் கலைத்திறமையைப் பயன்படுத்தி, உனக்கு மிக்க திறமையுடன் அழகுபடுத்தியிருக்கிறாளா? இல்லாவிடில் நீர் என் வீட்டிற்கு வாரும். நான் சந்தன மரத்தின் பொடிகளால் அலங்கரித்துச் சீரமைக்கின்றேன். அஃதாவது உம்மை என்னை விட்டு வெளியில் போகாதபடி செய்துவிடுகின்றேன். மீரா சொல்கிறாள், "என் சுவாமி கிரிதரநாகர், நான் அவருடைய நெற்றியின் அழகில் தோற்று அவருக்கு அடிமைப்பட்டு விட்டேன்."

200. என் பிரபு கோகுலவாசியாகிய கண்ணபிரான் வந்து விட்டார் என்பதைக் கேட்டதும் எனக்கு மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்தக் கோகுலப் பெண்களுக்குக் கண்ணப்பிரபுவைப் பார்ப்பதில் மிக்க இன்பம் ஏற்பட்டு, அவர்களையுமறியாமல் நாட்டியமாடுகிறார்கள். சிலர் சிரித்துக் கொண்டு மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். அவர்கள் மஞ்சள்பட்டுப் பீதாம்பரம் உடுத்தியவர்களாகவும் அரகஜா போன்ற மணம் மிகுந்த பொருள்களால் தங்களை நன்றாக அலங்கரித்துக் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள். இதிலிருந்து மீராவுக்கு ஐயமில்லாத உறுதியான வார்த்தை தோன்றியது; "மீராவின் கண்ணன் அழகாகவும் சுவாமி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யாகவும் இருக்கிறார். அவரைக் காணும்படி பேறுபெற்றாள், அவரிடம் தன் உள்ளத்தையும் அவள் கொடுத்து விட்டாள்.''

201. ஏ தோழீ, என் பிரபுவாகிய கண்ணன் என்னை மிகவும் நேசிக்கின்றார். அவருடைய தலையின்மீது மயில் இறகுகள் கொண்ட முகுடம் அழகாக இருக்கிறது. காதுகளில் குண்டலங்கள் ஆடிக்கொண்டு அழகாக இருக்கின்றன! இந்த நந்தகுமார் பிருந்தாவனத்தின் நடன மண்டபத்தில் சுகமாக அலைந்து திரிந்து கொண்டிருக்கிறார். மீரா சொல்கிறாள், ''என் சுவாமி கிரிதர நாகர், அவர் என் உள்ளத்தைப் பறித்துக் கொண்டார். நான் அவருடைய திருவடித்தாமரைகளில் அடிபணிந்தேன்.''

202. புல்லாங்குழலிசையினை இனிமையாக இசைக்கும் கண்ணபெருமானே, எழுந்திரும். என் அன்பரே எழுந்திரும். இப்பொழுது இரவு கழிந்து போய்விட்டது. காலைப் பொழுது வந்துவிட்டது. எல்லா இடைச்சியர்களும் தயிர் கடைகிறார்கள். அவர்களுடைய கைவளையல்களின் புனித ஒலி கேட்கப்படுகிறது. ஏ பிரபு, எழுந்திரும். உம் திருமுகக் காட்சிக்காக நான்முகன் முதலிய தேவர்களும், மனிதர்களும் உமது வாயிலில் காத்துக் கிடக்கிறார்கள். உம்முடைய நண்பர்களாகிய கோவலர்கள் அனைவரும் சேர்ந்து வந்திருக்கிறார்கள். உமக்கு வெற்றி முழக்கங்கள் செய்த வண்ணம் இருக்கிறார்கள். இந்தப் பணிவான வார்த்தைகளைக் கேட்ட கண்ணப்பிரபு படுக்கையைவிட்டு எழுந்திருந்தார். கோபாலன் அவர்களிடமிருந்து வெண்ணெய் ரொட்டியை அபகரித்துக் கொண்டார். மீரா சொல்கிறாள், ''என் சுவாமி கிரிதர நாகர், அவருடைய திருவடிகளில் வணங்கும் அன்பர்களைக் காக்கும் பண்பாளர்; பிரபோ, நீரே என்னையும் காக்க வேண்டும்.''

203. யமுனை யாற்றங்கரையில், புல்லாங்குழலின் ஓசை கேட்கப்படுகிறது. அந்தப் பிரபுவால் என் உள்ளம் அபகரிக்கப்பட்டது; நான் அதனால் தளர்ந்திருக்கின்றேன். கண்ணபெருமானின் கருமை நிறம், அவருடைய இடுப்பு கருமை நிறம், யமுனையின் நீரும் கருமை நிறம்; புல்லாங்குழலின் ஒலி கேட்டு, நான் என் சுயநிலையை இழந்தேன். என் உடல் வெறுங் கட்டைபோல் ஆகிவிட்டது. மீரா சொல்கிறாள், ''என் பிரபு கிரிதர நாகர், ஏ பிரபு, விரைவிலேயே வந்து என்னுடைய விரக வேதனைகளை விலக்குவீர்.''

204. ஏ தோழீ, கண்ணபிரானின் புல்லாங்குழல் ஒலியைக் கேட்டு நான் பயித்தியம் கொண்டேன். கண்ணன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என் பக்கத்தில் இல்லாமல் எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. என் மனம் தன் சுயநிலை இழந்து போயிற்று. அவரிடம் எவள் இப்போது சேர்ந்து கொண்டு, இன்பத்தை அனுபவிக்கிருளோ, அவள் கட்டாயமாகவே நல்வினை செய்தவளாகத் தான் இருக்கவேண்டும். அவருடைய மகிமையினுல் நான் காதல் கொண்டேன். (மீராவின் மனத்தைக் கண்ணனின் புல்லாங்குழல் கவர்ந்துவிட்டது.) மீரா சொல்கிருள், "இந்தப் புல்லாங்குழல் என்னையும் அவர் வசம் சேர்க்க, இழுத்துக் கொண்டு கவர்ந்து செல்கிறது. இது கானத்தின் ஏழு ஸ்வரங்களையும், என்னையும் தாங்கிக் கொண்டிருக்கிறது."

205. தாமரை யிதழ்களைப்போன்ற கண்களைக் கொண்ட கண்ணு, உம்மால் காலத்திற்கு ஒப்பானதும் பயங்கரமானது மான காளிங்கன் ஆட்கொள்ளப்பட்டான். அந்தக் காளிங்கன் யமுனை மடுவில் வசித்து வந்தான்; அவனுடைய பயங்கரமான பணிமண்டபத்தில், பிரபு, ஏறியமர்ந்து நாட்டியமாடினீர். நீர் பயப்படாமல் யமுனையில் குதித்து அவனை அடக்கிக் காப்பாற்றினீர். உமக்கு ஒரு கையும், பல பல கைகளும் இருப்பதால் அனந்தன் என்று சொல்லப்படுகிறீர். மீரா சொல்கிருள், "என் பிரபு கிரிதரநாகர், நீர் கோபிகாப் பெண்களின் பதி. விரகப் பெண்களின் மணம் நிறைந்த இன்பப் பொருள். அதுபோல எனக்கும் ஆவீர்."

206. ஒருநாள் கண்ணன் திருட்டுத்தனமாக என் பின் வந்து என் தலையின்மீதிருந்த சும்மாட்டையும், மண்பானையையும் கீழே தள்ளி, என் புடவையையும் பிடித்து இழுத்தார். கதம்ப மரத்தின்மீது அமர்ந்து கொண்டார். எனக்கு நாணம் தாங்க முடியவில்லை. ஒருநாள் நான் யமுனைக்குத் தண்ணீர் எடுத்துவரச் சென்றிருந்தேன். அந்தச் சமயத்தில் முராரி கண்ணன் வந்தார். நான் தண்ணீரில் மூழ்கிக் கொண்டிருக்கும்போது, என் புடவையைக் கவர்ந்து விட்டார். என் சகி என்னைப் பார்த்து பரிகாசம் செய்தாள். அப்பொழுது கிருஷ்ணனும் என்னைப் பார்த்துச் சிரித்து பரிகாசம் செய்தார். என் மாமியார் இதனுல் என்மீது கோபம் கொண்டாள்; என் நாத்தனுர் வைதாள். ஆனுல் நான் என் அன்பரால் மோகிக்கப்பட்டேன். மீரா சொல்கிருள், "என் பிரபு கிரிதர நாகர், அவருடைய திருவடித் தாமரைகளை நான் அடி பணிந்து, என் தலையில் வைத்துச் சூட்டிக் கொண்டேன். அவரை நான் சரணமடைந்து விட்டேன்."

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

207. நான் இன்று என் வீதியில் வந்து கொண்டிருக்கும் போது கிரிதாரி கண்ணபகவானைக் கண்டேன். எனக்கு நாணம் வந்துவிட்டது. உடனே ஓடிப் போய் ஒளிந்து கொண்டேன். அவர் சிவப்பு நிறம் கொண்ட தலைப்பாகை அணிந்து கொண்டிருந்தார். அவருடைய உடை குங்குமப்பூ நிறம் போல மஞ்சள் நிறத்துடன் இருந்தது; அதன்மேல் ஆயிரக்கணக்கான மலர்கள் வரையப்பட்டிருந்தன. அவருடைய தலைமுகுடம் மிக்க அழகும் ஒளியும் வாய்ந்து திகழ்ந்தது. அவருடைய காதுகுண்டலங்களும் மிக்க ஒளி வாய்ந்திருந்தன. இராதை குங்குமப்பூ நிறமுடைய மேலாக்கு அணிந்து கொண்டிருந்தாள்; அவளுடைய இடுப்பு உடை பட்டுத் துணியாக இருந்தது; மேலே கெட்டியான இரவிக்கை ஒன்று அணிந்து கொண்டிருந்தாள். எப்பொழுது இராதை கண்ணன் வருவதைக் கண்டாளோ, அவளும் நாணத்தினால் ஓடி ஒளிந்து கொண்டாள். அவருடைய தலையின்மீது மயில் இறகுகளினால் செய்யப்பட்ட முகுடம் மிக்க ஒளியும் அழகும் மனோஹரமாகவும் வாய்ந்திருந்தது. அவருடைய அழகு புதிய மெருகுடன் ஒளிர்ந்தது. அவருடைய மார்பிலும் கழுத்திலும் முத்து மாலைகள் இருந்தன. அப்பேற்பட்ட பேரொளியுடன் விளங்கிய கண்ணபிரானின் திருவடித் தாமரைகளில் நான் எல்லாவற்றையும் தியாகம் செய்து விட்டேன். "ஏ கண்ணா, என் வேண்டுகோளைக் கேட்பாய். தோழி இராதா உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாள். உன்னைக் கெஞ்சிக் கேட்கிறாள்"; மீரா சொல்கிறாள், "என் சுவாமி, கிரிதர நாகர், நான் அவருடைய திருவடித் தாமரைகளைப் புகலடைந்தேன்."

208. ஏ தோழீ, என் மோஹன் கண்ணன் என் மனத்தைக் கவர்ந்து விட்டார். பிரியமானவளே, நான் என்ன சொல்வேன்? எங்குச் செல்வேன்? என் மனம் பேரன்பர் கண்ணபிரானிடம் இணைந்துவிட்டது. "சாதுக்களே, அவரே என் பிராண புருஷர்; நான் யமுனையில் ஜலம் எடுத்து வருவதற்குச் சென்றேன். சாதுக்களே, அங்கு என் பிரேமைகலசத்தில் கிருஷ்ணனை நிரப்பிக்கொண்டேன்." என் பிரபு மேகவண்ணர்; யுவர், அழகு வடிவர்; அவர் என்னிடம் மாயைகள் செய்து, அவரை நான் நோக்கிக்கொண்டிருக்கும் போதே என்னை அவர் கவர்ந்துவிட்டார். எனக்கு நாணமும் மானமும் பறந்து போய்விட்டன. என் எல்லாக் கட்டுப்பாடுகளையும் மீறி, என் மனத்தைத் திறந்து விட்டு அவரிடம் கலந்து விட்டேன். உலகம் என்னை நிந்திப்பதால் யாது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பயன்? மீரா சொல்கிருள், "கிரிதரா, நான் உம்முடைய அடிமை. நான் ஒளிந்து ஒளிந்து உம்மைப் பதி வடிவமாகக் கண்டேன்; என்னை ஆட்கொள்வீர்."

209. என் இதயத்தில் காதலன்பாகிய கிண்ணம் நிரம்பி விட்டது. நான் யமுனைக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்காகப் போயிருந்தேன். அங்கு நான் கண்ணனைக் கண்டேன். அவருடைய தலையின்மீது தங்கமுகுடம் இருந்தது. அந்தச்சமயத்தில் கண்ணனின் அன்பினுல் கட்டப்பட்டேன்; அவரால் இழுத்துச் செல்லப்பட்டேன். மீரா சொல்கிருள், "என் சுவாமி கிரிதரநாகர், அவருடைய மேக நிறம் மிக்க அழகாக இருக்கிறது, கவர்ச்சி யூட்டுவதாக இருக்கிறது, என் மனம் இழுக்கப்பட்டு அவரிடம் சென்று விட்டது."

210. தோழீ, நீலமேக வர்ணக் கண்ணனின் பார்வை என் மீதுபட்டதும், என் காதலன்பாகிய கிண்ணம் நிரம்பிவிடுகிறது. அவருடைய பார்வை பட்டதும் எனக்கு ஒரே மகிழ்ச்சி ஏற்படுகிறது; நான் என் நிலையை மறந்து விடுகின்றேன். என் உடல் முழுவதும் காதல் அலைபாய்ந்து என்னைப் பயித்தியம் ஆக்கிவிடுகிறது. எனக்கு ஒரு விஷயம் நன்ருகத் தெரியும். அவர் நடனமண்டபத்தில் ஒளிந்து கொண்டிருக்கிருர். எப்போதாவது வெளியில் வருகிருர்; அந்தச் சமயத்தில் அவரைக் கண்டதும் பல கோபிகைப் பெண்கள் பயித்தியம் பிடித்தவர்கள் போல ஆகிவிடுகிருர்கள். சகோரப் பறவை சந்திரனை விரும்புகிறது; விருப்பம் காரணமாக, விளக்கில் பூச்சிகள் ஓடிவந்து விழுந்து இறந்துபோகின்றன. அதே போல் மீன் குஞ்சுகளும் தண்ணீரை விட்டுப் பிரிந்து இறந்துவிடுகின்றன. என் காதலும் நிராசையாகப் போய் விட்டது. ஏ மேகவண்ணு, உம்மைப் பார்க்காமல் நான் எவ்விதம் உயிர் வாழ்வேன்? எனக்கு மன நிம்மதி இல்லை; ஒரு கணமும உயிருடன் வாழ முடியாது. மீரா சொல்கிருள், "தோழீ, என் பிரபு கண்ணனிடம் சென்று, மீரா உம்முடைய பொருள். அவள் உமது அன்பிற்காகப் பல வேதனைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிருள். உடனே ஓடிவாரும்" என்று செய்தி சொல். அவளுடைய துக்கங்களைப் போக்கும்.

211. கிரிதர கோபாலன் "ஹோலி" விளையாட்டுகளை நடத்திக் கொண்டிருக்கிருர். புல்லாங்குழல், சங்கு, பேரி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கைகள் தனித்தனியாக ஒலிக்கின்றன. விரகப் பெண்கள் இன்னிசை பாடிக் கொண்டிருக்கிறார்கள். மோஹன் லால்பிஹாரி பிரபு தம்முடைய கைகளால் சந்தனம், கேசரி வர்ணங்களை அவர்கள்மீது வாரி அப்புகிறார். அவருடைய கையில் சிகப்பு, பல வர்ண சாயத்தூள்கள் நிரம்பியிருக்கின்றன. அவருடைய மார்பில், இளமையுடைய பிரபு கண்ணனுடன் மிக்க அழகுள் ளவளும் பிராணப்யாரி இராதையும் சேர்ந்து இருந்தாள். எல்லாரும் கைகளைத் தட்டிக்கொண்டு இன்னிசை தமார் ராகத்தில் பாடுகிறார்கள். எந்த முறையில் சுவைமணியாகிய கண்ணனுடன் இராசலீலை செய்கிறாளோ, அதைவிட மதுராவில் விரசபுரியில் மிக்க மகிழ்ச்சி ஏற்பட்டது. மீரா சொல்கிறாள், ''என் பிரபு கிரிதர நாகர் அனைவர் உள்ளங்களையும் சொக்கும்படி செய்யும் வல்லமை உள்ளவர்; அவரே என்னையும் உள்ளம் கவர்ந்து விட்டார், மோஹன் லால் பிஹாரி;''

212. கன்னையா, ஏ கண்ணா, உம்முடன் நான் எங்கு எங்குச் செல்லவேண்டும்? நீர் பிருந்தாவன நடன மண்டபத்தில் என் கையைப் பற்றிக்கொண்டு விளையாடினீர். என்னிடமிருந்து தயிர் சாப்பிட்டீர்; என்னுடைய மண் பானையை உடைத்து, என்னை உம் அரவணைப்பில் இறுகத் தழுவிக் கொண்டீர். மேகநிறமும், வழவழப்புடன் கூடியதும் ஆன அழகிய மேனி கொண்ட நீர் என்னுடைய மேலாடையைப் பிடித்து இழுத்தும் என்னுடைய தலையில் உள்ள சும்மாட்டைக் கீழே பூமியில் தள்ளியும் விளையாட்டுச் செய்தீர். ஹே மன்மோஹன், நான் கோகுலத்திற்கு வந்து வந்து போய்க்கொண்டிருந்தேன். அப்போது நீர் எனக்குத் தயிர் ஒரு சமயமும் கொடுக்கவில்லை. மீரா சொல்கிறாள், ''என் சுவாமி கிரிதரநாகர், அவரே எனக்குப் பிறவி பிறவியாக வந்த நாதர்; அவரே எனக்குப் பதி.''

213. ஏ தோழீ, இந்த விரசபுரியில் அவரைப் போல மந்திரவாதியைப் பார்த்ததில்லை; ஒரு தடவை அவரைப் பார்த்துவிட்டால், யாரும் தம்முடைய சுயநிலையை இழந்துவிடுகிறார்கள். (மீரா தன் தலையில் தயிர்ப்பானையை வைத்துக்கொண்டு சென்று கொண்டிருந்தாள். வழியில் நந்தகோபரின் நந்தன் கண்ணனைக் கண்டாள்.) பிரியத் தோழீ, ஸ்யாம் என்னும் அவரைப் பார்த்ததும் எனக்கு அவர்மீது காதல் மிகுதியாகிவிட்டது. நான் என் சுய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிலையை இழந்துவிட்டேன். தயிரின் பெயரை மறந்து விட்டேன். ''தயிர் வாங்கவில்லையா'' என்று கூவுவதற்குப் பதிலாக, (சிந்தயந்தியைப் போல) "சுந்தர சியாம் வாங்க வில்லையோ'' என்று கூவிக்கொண்டு பிருந்தாவனத்தின் தெரு வழியில் சென்று கொண்டிருந்தேன். அவ்வாறு என் மனத்தைக் கவரப்பண்ணும் மன்மோஹன் கண்ணப்பிரபு பிருந்தாவனத்தில் நடன மண்டபத்தில் கொடிகளின் நடுவே என்னைப் பார்த்தார்; என்னிடம் அன்பு செலுத்தினர். மீரா சொல்கிருள், "என் சுவாமி கிரிதரநாகர், அவர் மிக்க அழகானவர், மென்மைக் குணமுடையவர்."

214. யாரோ ஒருவன் ஸ்யாம், மனோஹர் என்று இருந்தார். அவர் எங்கள் தலைமீதிருந்த தயிர்ப்பானைகளை உடைத்து விட்டார்! (இதென்ன அநியாயம்!); கோபிகைப் பெண்களின் தலைமீது தயிர்ப்பானை இருந்தது. அவர்கள் கூவிக்கொண்டு சென்றுர்கள். ''தயிர் வாங்கவில்லையோ'' என்பதற்குப் பதிலாக, ''அழகான சியாம் வாங்கவில்லையோ'' என்று கேட்டுக் கொண்டு சென்றுர்கள். மீரா சொல்கிருள், ''பிரபு கிரிதரநாகர் ஒருவிதக் கவலையுமின்றிக் கோபிகைப் பெண்கள் உமக்கு அடிமைகளாகி விட்டார்கள்; உம்முடைய உலகைக் கவரும் வடிவழகில் தம் மனம் முழுவதும் இழந்தார்கள்; உம்முடன் பேசி மகிழ்வடைந்தார்கள்."

215. ஏ ஹரிபகவானே, என்னிடம் காதல் கொண்டு விட்டு, எங்கு சென்றீர்? என்னிடம் காதல் மொழிகள் இனிப்பாகப் பேசிவிட்டு, அதற்கு முன்பு என் மனத்தையும் கொள்ளை கொண்டு விட்டு, என்னைத் தனியாகத் தவிக்க விட்டு விட்டு, நீர் எங்கு சென்றீர்? இந்த விரக வேதனைகளை நான் அனுபவித்துத் தான் தீரவேண்டும் என்று நினைப் பீராகில், இஃது எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. நான் நஞ்சை உண்டு இறந்து போய்விடுகிறேன். நம்பிக்கை ஊட்டுபவளே, நீ பிரபுவின் ஓடத்தின்மீது ஏறி என்னை அவர் இருக்குமிடத்தில் விட்டு விடு. மீரா சொல்கிருள், "நான் எப்பொழுது என் பிரபுவைக் காண்பேன்?"

216. என் பிரபு கண்ணபகவான் இன்னொரு சந்திரன் தோன்றினுற் போலக் காட்சி தந்தார்; சந்திரனைப் போல மறைந்து போகிருர். சிலநாள்கள் எனக்குக் காட்சி தந்து விட்டு, பிற்பாடு மறைந்து போகிருர்; மதுராபுரிக்குச் சென்று விடுகிருர். அங்குச் சென்று அந்த நகர் வாசிகளுடன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேர்ந்து வசிக்கிறார். அதனால் அவர் என்னை முற்றிலும் மறந்துவிட்டார். ஆனால், என்மீது காதல் என்கிற வழியைக் காண்பிக்கிறார். (கற்பனைக் காட்சியினால் அனுபவிக்க வழி செய்கிறார்). மீரா சொல்கிறாள், ''என் பிரபு கிரிதர நாகர், ஏ பிரபு, உமக்கு என்னிடம் அன்பு சிறிது குறைந்து விட்டது. என்மீது அருள் செய்து, என்னை நினைவுபடுத்திக் கொண்டு, சீக்கிரமாக வந்து காட்சி தருவீர்.''

217. ஏ மேகவண்ணா, நீர் என்னை இவ்விடம் அழைத்து விட்டு, என்னுடன் சுற்றுவதற்குப் பதிலாக, என்னை விட்டு விட்டு அன்னியப் பெண் சிருங்கார கலாவல்லியுடன் சேர்ந்து மகிழ்வடைகின்றீர்; அவளுடன் நீர் அலைகிறீர். என்னுடன் ஒரு வார்த்தை கூடப் பேசுகிறீரில்லை. என்னுடைய தெருவுக்குக் கூட வருகின்றீரில்லை. அவளுடன் சேர்ந்து எங்கும் அலைகிறீர். அவளுடன் சேர்ந்து மகிழ்கின்றீர். நான் அன்னியப் பெண்ணின் இரகசியத்தை வெளிப்படச் சொல்கின்றேன். ஆனால் நானோ அவரை விடவே மாட்டேன். மீரா சொல்கிறாள், ''ஏ மேகவண்ணா, பிரபு, நீர் மேகநிறம் கொண்ட பெரிய சிறந்த வள்ளல்! காம உணர்வுடன் எங்கும் செல்கின்றீர்.''

218. தோழீ, எனக்கு மிக்க நாணமாக இருக்கிறது. எனக்கு வைராக்கியம் வந்துவிட்டது. ஏனெனில், பிரபுவுடன் இணையும் சமயத்தில் அவருடன் பேச இயலவில்லை. கிரிதரகோபாலருடன் ஏன் நான் செல்லவில்லை என்கிற எண்ணத்தால் நான் மிகவும் நாணப்படுகின்றேன். அந்தக் கண்ணனை இரதத்தில் வைத்து மதுராபுரிக்கு அழைத்துச் சென்ற "அக்ரூரர்'' உண்மையாகவே "க்ரூர'' மனத்துடன் இருக்க வேண்டும்; அப்பொழுது நான் ஒன்றும் அவரிடமோ, கண்ணனிடமோ சொல்லவில்லை. கேவலம், கையைக் குலுக்கி, கும்பிட்டுக் கொண்டோம்! அந்தக் கண்ணனுடைய இதயமும் உண்மையாகவே கல்லைப் போலக் கடினமாக இருக்க வேண்டும்; என்னைப் போல அவரும் விரக துக்கங்களால் பாதித்திருக்க வேண்டும். ஆனால், அதை அவர் வெளிப்படுத்திக் கொள்ளவில்லை. மீரா சொல்கிறாள், ''மேகவண்ணக் கண்ணா, நீர் போனபடியால், நான் விரக துக்கங்களை அனுபவிக்கிறேன். என்னால் இந்தத் துக்கங்களைப் பொறுக்க முடியவில்லையே? என்ன செய்வேன்? நீர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்னை விட்டு ஏன் சென்றீர்? போகாமல் இருக்கக் கூடாதா?''

219. ஏ உத்தவ, கண்ணனை விட்டுப்பிரிவது பாக்கியத்தின் குற்றமே தவிர வேறு ஒன்றுமில்லை. இதில் யாரிடம் எந்தக் குற்றத்தைக் காண்பது? நான் வழியில் சென்று கொண்டிருக்கும் போது, எனக்கும் சுமக்கமுடியாத துக்கம் ஏற்பட்டது. அந்தச் சமயம் நான் மற்றொரு கோபிகைப் பெண்ணிடமிருந்து கண்ணன் மதுராபுரி செல்லப் போவதை அறிந்தேன். இந்தச் செய்தியைப்பற்றி என்னிடம் முன்னால் ஒருவரும் சொல்லவில்லை. இதனால் அஞ்ஞானத்தினால் செருக்குக் கொண்டு விளங்கினேன். எனக்கு மட்டும் கண்ணன் எங்களை விட்டுச் சென்று விடுவாரென்று சிறிதளவாவது தெரிந்திருந்தால், எவ்விதமாவது அவரை விடாமல் ஏதாவது சூழ்ச்சி செய்து எங்களிடமே இருக்கும்படி செய்திருப்பேன். ஆனால், இப்போது எங்களுக்கு நல்வினை குறைந்து விட்டது. எங்களுடைய புண்ணியமெல்லாம் முடிந்து விட்டது. கெட்ட காலம் தொடங்கியபடியால், கண்ணன் எங்களை விட்டுச் சென்றுவிட்டார். மீரா சொல்கிறாள், ''அரி எங்கள் பிரபு, அவிநாசி, ஏ பிரபு, எங்கள் கவலைகளை நீர்தாம் அகலும்படி விலக்க வேண்டும்.'' (இந்தப் பதாவளியில் உத்தவருடன் கோபிகைகள் உரையாடுவதை நினைவுபடுத்திக் கொள்கிறாள் மீரா.)

220. நான் ஏன் கண்ணபிரானுடன் சேர்ந்து எப்போதும் இருக்கக் கூடாது? அவருடைய தாமரை முகத்தைக் கண்டு கொண்டு எப்பொழுதும் ஏன் மகிழ்ச்சியாக இருக்கக் கூடாது, என்று எண்ணம் தோன்றுகிறது. என் மேனியை நான் ஒழுங்குபடுத்திக்கொண்டு, புல்லாங்குழலைக் கையில் எடுத்துக்கொண்டு, மஞ்சள் பட்டாடையை அணிந்து கொண்டு தலையின்மீது மயிலிறகுகளால் செய்யப்பட்ட முகுடத்தை அணிந்துகொண்டு, கோப வேடமணிந்து கொண்டு ஒரு கோபிகைப் பெண்ணையும் கூட அழைத்துக் கொண்டு, ஏன் ஊர் ஊராக அலையக் கூடாது? பிருந்தாவனத்தில் இருக்கும் பசு, பறவை, வானரம், சாதுக் கூட்டங்களின் பேச்சொலிகளைக் காதுகளால் கேட்டுக்கொண்டு இருப்பதால், நான் உண்மையாகவே பிருந்தாவனத்தின் அழகிய கொடியாகவும், மண்ணின் புழுதியாகவும் மாறி விட்டிருக்க வேண்டும். அங்கு இது போன்ற பிறப்பு எடுத்திருப்பேனாகில், நான் மிக்க நல்வினை உள்ளவளாகக் கண்ணனுடைய அன்பை விலையாகப் பெற்றிருப்பேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குருமக்களால் கடினமான மரியாதை, ஒழுங்குகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன; ஆகவே, என் மனத்தின் துக்கங்களை யாரிடம் போய் நான் சொல்வேன்? மீரா சொல்கிருள், "கிரிதர கோபாலனை இவ்விதமாகச் சந்தித்து, அவருடன் எப்பொழுதும் சேர்ந்து வாழவேண்டும். கண்ணனுடன் கூட, கோப வேடம் தரித்துக் கொண்டு, பிருந்தாவனத்தில் ஒரு கொடியாவது, மண்ணின் புழுதியாவது ஏன் மாறி, கண்ணன் தொடர்பை, அன்பைப் பெற்று நிலையாக ஏன் வாழக் கூடாது?"

221. உத்தவரால் கண்ணனுக்கு என்ன கடிதம் கொண்டுவரப்பட்டது, யாரால் எழுதப்பட்டது, என்ன செய்தியைப் பற்றி எழுதப்பட்டது, அதைப் பிரபு கண்ணபகவானைத் தவிர வேறுயார் படித்தார்கள்? ஏ உத்தவ, நீர் இந்தக் கடிதத்தை ஏன் கிழிக்காமல் கொண்டுவந்தீர்? கண்ணன் எங்கிருந்தார்? நீர் வந்த சமயம், அவரை எங்கு கண்டீர்? நான் அவரைத் தேடித் தேடி, அகப்படாமல் மனவேதனை அடைந்தேன்; அவரைக் காணுமல், என் கண்கள் வருத்தத்தால் சிவந்து போயிற்று. எப்பொழுது இராதை அந்தக் கடிதத்தைப் படித்தாளோ, அவளுடைய இதயம் விண்டு விடும் போல் சுமக்க முடியாத துக்கம் இருந்தது. கங்கா ஜலம் பெருகுவதுபோல கண்ணீர் விட்டாள் கமலக்கண்ணி ராதை! கண்ணன் பிரிவு தாங்க முடியாமல், அவளுடைய நிறம் காய்ந்த இலையைப் போல மஞ்சளாகி விட்டது; அவள் உணவு, உறக்கம் அனைத்தையும் துறந்துவிட்டாள். கண்ணனை விட்டுப் பிரியப்போகிருேமே என்ற துக்கத்தினுல் அவள் நரக வேதனையை அனுபவித்தாள். விளக்கிலுள்ள திரி எரிந்து முடிவது போல அவளும் முடிந்து போய்க் கொண்டிருந்தாள். என்ன செய்வாள் அவள்? கிரிதர கோபாலனுடைய அடிமையாகிய மீரா சொல்கிருள், "எனக்கு இந்தக் கண்ணன்மீதுதான் நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அந்த இராமப் பிரபுதாம் தண்ணீரில் மூழ்கிக் கொண்டிருக்கிற கசேந்திரனைக் காப்பாற்றினுர். அவர் தாம் என்னையும் துயரங்களிலிருந்து காப்பாற்றுவார்."

222. வேடுவச்சியான சபரீ சுவைத்துப் பார்த்துவிட்டு, மதுரமானதும் சுவையுள்ளதுமான பழங்களைப் பிரபு சிரீ இராமச்சந்திரனுக்கு அளித்தாள்; இந்த எச்சில்பட்ட பழங்களைப் பிரபு ஏற்றுக் கொண்டார். அவள் பிரபுவின் ஆசார சீலங்களை எண்ணிப் பார்த்தாளா? பிரபுவும் அதைப் பொருட்படுத்தவில்லை. இழிந்த குலத்தில் பிறந்திருந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போதிலும் அவள் இராமன்மீது மிக்க அன்பு விஸ்வாசம் உடையவளாக விளங்கினாள். அழுக்குப் படிந்த உடைகளை அணிந்துகொண்டிருந்தாள். ஆனால், இராமப் பிரபு அவளைப் பாராட்டினார். உண்மையான அன்பின் சாரத்தை அனுபவிப்பதில், மேலானவர்கள் கீழானவர்கள் என்று வேறுபாடு பார்ப்பதுண்டா? வேறுபாடுகளைப் பார்ப்பது சரியல்ல; வர்ண என்கிற வேடுவச்சி (காட்டில் வசிப்பவள்) ஒருத்தி சில வார்த்தைகளைச் சொன்னாள், "மறை கூறுவது, ஒரு கணத்தில் அந்தப் பக்தனை வைகுந்தத்திற்கு அனுப்பி விடுகிறது. பிரபு அவனிடம் அன்பு கொண்டு தம் அருளை வழங்கிவிடுகிறார்." பிரபுவின் அடிமையான மீரா சொல்கிறாள், "பிரபுவினிடம் எந்த மனிதன் இவ்விதம் அன்பு வைக்கின்றானோ, அவன் உலகத் தொடக்காகிய கடலை மிக எளிதாகக் கடந்து விடுகின்றான். உலகக் கட்டுக்களை அறுத்து வீடு கின்றான். எங்கள் பிரபு பதிதர்களையும் பாவனம் செய்யும் பிரபு; அன்பர்களைக் காப்பதில் மிகவும் வல்லமை வாய்ந்தவர். நான் முன் பிறவியில் கோகுலத்தில் பிறந்த ஒரு கோபிகை. ஆகவே பிரபு என்னையும் கட்டாயம் காப்பாற்று வார்."

223. எப்பொழுது குசேலர் தம்முடைய வறுமையைப் போக்குவதற்காகத் துவாரகாபுரியை அடைந்து கண்ண பகவானைக் காணச் சென்றாரோ, அப்போது, பிரபு அவரிடம் மிக்க மகிழ்ச்சி அடைந்தார். அவருடைய செருப்பு கிழிந்து போயிருந்தது. அவருடைய கால்கள் தூசிபடிந்து செருப்பில்லாதபடியால், விரிவு பிளவுகளுடன் காணப்பட்டது. அவ்விதமிருந்தும், குசேலர், "கண்ணா, நானும் நீயும் சிறு வயதிலிருந்து சேர்ந்து குருகுலவாசம் செய்தவர்கள் அன்றோ? மிக்க நட்பினர்கள் அன்றோ? ஆகையால் என்னை ஏன் தொலைவில் விலக்கி வைத்திருக்கிறாய்?" என்று கேட்டார். கண்ணன் பதில் சொன்னார், "என் மன்னி எனக்குத் தின்ப தற்கு என்ன தின்பண்டம் அனுப்பியிருக்கிறாள்?" என்று கேட்டுக்கொண்டே, குசேலரின் தோளிலிருந்த அவல் முடிச்சை எடுத்து உண்டார்; மிக்க உரிமையன்பினுடன். மூன்று பிடி அவலை உண்டார். இதனால் குசேலர் மூன்று உலகங்களையும் அதன் வைபவங்களையும் அடைந்துவிட்டார். பிற்பாடு குசேலர் தம் வீட்டிற்குச் சென்றார். அங்குத் தம் வீட்டிற்குப் பதிலாக ஒரு பெரிய மாளிகையைக் கண்டார். அவர் யோசிக்கத் தொடங்கினார். "என்னுடைய பழைமையான வீடு எங்கு சென்றுவிட்டது? இங்கே வைரம், முத்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவற்ருல் அலங்கரிக்கப்பட்ட மாளிகை எவ்வாறு ஏற்பட்டது? என்னுடைய பசுமாடு, என் குழந்தைகள் எங்கு சென்று விட்டனர்?''—இவ்வாறு குசேலர் மயங்கிக் கொண்டிருக்கும் சமயம் குசேலர் தம் மனைவியை மாளிகை வாசலில் பார்த்து விட்டு, தமக்குள், ''வீட்டு மாளிகையின் வாசற்படியில் சிரித்துக்கொண்டு விளங்கும் இந்தப் பெண் யார்?'' என்று எண்ணினர். மீரா சொல்கிருள், ''அவிநாசிப்பிரபு, நானும் உமது திருவடித் தாமரைகளைப் புகலடைந்தேன். என்னைப் பொறுத்தவரையில் எந்தவிதமாக அருள் செய்ய எண்ணம் கொண்டிருக்கிறீர்? குசேலருக்கு அளித்தது போல், எனக்கும் உம் அருளைத் தந்திடுவீர். பிரபு, என்மீது இரங்கி அருள் செய்யவேண்டும்.''

224. யோகீஸ்வரரே, பிரியமுள்ள கண்ணு, உம்முடைய மர்ம இரகசியம் யாருக்கும் புரியவில்லை; இருக்கையில் அமர்ந்துகொண்டும், முழைஞ்சில் வசித்துக்கொண்டும், வழி பாடு செய்துகொண்டும் இருந்தாலும் சரி; கழுத்தில் யோகிகளால் அணியப்படும் மாலைகளை அணிந்து கொண்டாலும்; கைகளில் கைக்குட்டை அணிந்துகொண்டும், உடல் முழுவதும் திருநீறு அணிந்து கொண்டாலும் சரி, எவ்வித மாகிலும் உம்மை அடைவது மிகக் கடினம். ஆகவே மீரா சொல்கிருள், ''ஏ அவிநாசிப் பிரபு, எந்த மனிதனுக்கு உம் அருள் கிட்டுகிறதோ, அவன்தான் உம் காட்சியைப் பெறுகிருன். அவனுக்குத்தான் உம்முடைய கூட்டுறவு கிடைக்கிறது.''

225. நல்வினையின் பயன் கிடைக்கவேண்டிய சமயத்தில் தான் கிடைக்கிறது; அது நடக்கவேண்டிய சமயத்தில் நடந்து விடுகிறது; அதை யாவராலும் ஒத்திப்போட இயலாது. ஊழ்வினையின் காரணமாகச் சத்தியவாதியான அரிச்சந்திரன் தோட்டியின் (பங்கி) வீட்டிற்குச் சென்று தண்ணீர் எடுத்து வாழ்க்கை நடத்தினன். ஊழ்வினையின் காரணமாகப் பஞ்ச பாண்டவர்களின் மனைவி திரௌபதி இமயமலையில் ஏறும் பொழுது கீழே விழுந்தாள். பலிச்சக்கரவர்த்தியும் இந்திர பதவிக்காக வேள்வி இயற்றும்போது, முன்வினையின் காரண மாகப் பாதாளத்தில் போய் விழுந்தான். ஆகவே மீரா சொல்கிருள், ''என் சுவாமி கிரிதரநாகர், நஞ்சை அமுதமாக ஆக்குபவர். அவருடைய அருள்தான் வேண்டும்.''

226. ஏ தோழீ, கடவுளுடைய நியமம் விசித்திரமானது. கத்தூரிமானுக்கு விஞ்ஞானக் கண் ஏற்படினும் அது கத்தூரி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எங்கே என்று காடு காடாக அலையும். கொக்கு, நாரை முதலியவை தூய்மையான வெண்மையான உடலைப் பெற்றிருந்தும் அவை மீன் போன்றவற்றைத்தான் உண்ணும். குயில் கருமை நிறம்பெற்றிருந்த போதிலும், அதன் குரலில் இனிமையும் மதுரத்தன்மையும் இருக்கிறது. ஆறு, ஓடை முதலியவற்றின் தண்ணீர் தூய்மையாகவும் இனிமையாகவும் இருக்கிறது; ஆனால் கடல் நீரோ உப்புமயமாக இருக்கிறது. மூர்க்கனுக்கு அரச இருக்கையும், இன்பவாய்ப்புகளும் ஏற்படுகின்றன. ஆனால், அறிவாளியோ அவ்வாறின்றி, அவன் ஒவ்வொரு வீட்டின் வாசலின் முன்பு இரந்து கேட்கப் போகின்றான். மீரா சொல்கிறாள், ''ஏ பிரபு, கிரிதரநாகர், ராணா உம்முடைய பக்கைதக்குக் கூட மிக்க இடைஞ்சல்கள் உண்டுபண்ணுகின்றார்; நீர் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு வாய்திறவாமல் இருக்கின்றீர்.''

227. வேட்டுவத் தோழீ, காதலன்பின் பெருமையைப் பற்றி என்ன சொல்லமுடியும்? காதலன்பின் வழியும் விசித்திரமாக இருக்கிறது. இந்த வழியில் வருபவனுக்கு உடல் இளைத்துப் போகிறது. உனக்குப் பக்திநெறி வேண்டுமானால், தலையை வெட்டி, அதை இருக்கையாகக் கொள்ள வேண்டும். விளக்குப்பூச்சி விளக்கை நேசித்து அதைச் சுற்றி வருகிறது; அதன் பின்பு விளக்கின் ஒளியில் உயிரையும் கொடுத்துவிடுகிறது. அதுபோலவும், மான் இசைவயப்பட்டு வேடனின் முன்பு தானே அகப்பட்டுக் கொள்வதுபோலவும், நானும் அவ்விதம் உயிரை இழந்து கொண்டிருக்கின்றேன். சகோரப்பறவை சந்திரனைக் காதலிக்கிறது. நெருப்பின் ஒரு துண்டத்தைச் சந்திரன் என்று கருதி அதை உண்டு, உயிரை இழக்கிறது. தண்ணீரை மீன் மிகவும் நேசிக்கிறது; அதை விட்டு நீங்கினால் அஃது உயிரை இழக்கிறது. தேன் வண்டு மலரின்மீது அன்புவைத்து அதன் காரணமாக, தாமரைமலர் இதழ்களை மூடும்போது சிறைவைக்கப்படுவதுபோல, நானும் அவதிப்படுகின்றேன். மீரா சொல்கிறாள், ''ஏ மானிடா, நீ, என் பிரபு கிரிதரநாகரின் திருவடித்தாமரைகளில் அடிபணிந்து மனத்தால் வணங்குவாய் வீண் காலம் போக்காதே.''

228 காதலன்பின் வேதனை கடினமாக இருக்கிறது. யாருக்கு இந்தக் காதலன்பு ஏற்படுகிறதோ, அவனே காதலன்பின் வேதனைகளை அறிவான். எவனுக்குத் துன்பங்கள், தீமைகள் ஏற்படுகின்றனவோ அவனை ஒருவராலும் காப்பாற்றமுடியாது; எந்த மனிதன் இன்பத்துக்காகவே படைக்கப்பட்டிருக்கின்றானோ, அவனுடைய இன்பங்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களுக்காகவே எல்லாமக்களும் படைக்கப்பட்டிருப்பது போலத் தோன்றும். இந்தக் காதலன்பின் வேதனைகள், துன்பங்கள் எவராலும் புரிந்துகொள்ள முடியாதபடி, வியப்பாக விளங்குகின்றன. வெளித்தோற்றத்தினால் அறியப்படக் கூடியன அல்ல. அதன் வேதனைகள் அகத்தே ஒவ்வொரு மயிரிழையிலும் ஏற்படக்கூடியவை. ஆகவே மீரா சொல்கிருள், "நான் கிரிதரநாகரின் அடிமை. அவரிடம் என் உடலை ஒப்புவித்திருக்கின்றேன். அவர்தாம் எனக்குக் கதி."

229. ஏ மனமே, எப்பொழுதும் பகவானைச் சிந்தனை செய்வாய். பகவானுடைய உலகத்தை அடைவதற்கு முயல்வாய். அந்த உலகத்தைக் கண்டு, மரணதேவன் நடுநடுங்குகிருன். அங்கு மரணபயம் இல்லை. அங்கே அன்பு என்ற குளம் விளிம்பு நிரம்பி இருக்கின்றது. அன்னவடிவான ஆத்மா அந்தக் குளத்தில் மகிழ்ச்சியுடன் குளிக்கிறது. அங்குச் சாதுக்களின் சேர்க்கை ஏற்படுகிறது. ஞானஒளி ஏற்படுகிறது. அதனால் கண்ணபகவானை நினைப்பதற்கு உள்ளம் தூய்மையாகி, பாவ புண்ணியங்களிலிருந்து விடுபட்டுத் தெளிவாக விளங்குகிறது. அங்குச் சீலம் என்கிற சலங்கையைக் கால்களில் அணிந்துகொண்டு மகிழ்ச்சியுடன் நாட்டியமாடுகிருர்கள். அங்குப் பெண்கள் பதினறுவகைகளாகத் தங்களை அலங்காரம் செய்துகொண்டும், தலையை அணிசெய்துகொண்டும் விளங்குகிருர்கள். அங்குக் கண்ணன் ஒருவரிடமே பக்தியும் அன்பும் ஏற்படுகிறது. மற்றத் தேவதைகளிடமோ, பொருள்களிடமோ அவ்வளவு விருப்பம் ஏற்படுகிறதில்லை. வெறுப்பே ஏற்படுகிறது.

230. என் பிரபு மேகவண்ணக் கண்ணன் மதுராபுரியில் வசிப்பவர். அன்புத் தோழீ, இந்த உலகத்தில் இன்பங்களனைத்தும் நிலையற்றவை; அழியக் கூடியவை. ஆகவே நான் அவிநாசிப் பிரபுவைப் பதிவடிவாக வணங்கி, வர்ணனை செய்தேன்; இதைக் காலம் என்கிற பாம்பு கடிப்பதில்லை. (இது நிலையானது). என் பிரபு என் இதயத்தில் எப்பொழுதும் வசித்துக்கொண்டிருக்கிருர். எப்பொழுது நான் அவரை வேண்டுகிறேனே, அவர், சிரித்துக்கொண்டு, எனக்குக் காட்சி தருகிருர். மீரா சொல்கிருள், "அவிநாசிப்பிரபு, நான் உம்முடைய திருவடித்தாமரைகளை அடி பணிந்தேன். நான் உம் அடிமை. நீர் என்னைக் காப்பாற்ற வேண்டும்."

231. மனமே, நீ எப்பொழுதும் என்றும் அழியாத பிரபு கண்ணனுடைய திருவடித் தாமரைகளை நினைப்பாயாக.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தப் பூமிக்கும் வானத்திற்கும் நடுவே எவை காணப்படு கின்றனவோ, அவை எல்லாம் ஒரு சமயம் அழிந்துவிடும். தீர்த்தயாத்திரை செய்வது, நோன்புகளை மேற்கொள்வது, ஞானநெறிகளைச் சொல்வது, காசியில் இலைக்குடிலை மாற்றிக் கொள்வது, ஆகிய யாவும் பொய்; அவை எல்லாம் வெளி மயக்கு. இந்த உடலில் பற்றுவைக்கக் கூடாது. இஃது அழியக் கூடியது. மண்ணோடு மண்ணாகப் போய்விடுகிறது. இந்த உலகவாழ்க்கை குருவிகளின் விளையாட்டைப் போன்றது. மாலை வேளை ஏற்பட்டதும், அந்த விளையாட்டு முடிவடைவதுபோல, இந்த உலக வாழ்க்கையும் விரைவில் முடிவை அடையக் கூடியது. அழகான ஆடைகளை அணிவ தால் யாது இலாபம்? வீட்டை விட்டுத் துறவு வாழ்க்கையை நடத்துவதனால் யாது இலாபம்? யோகியைப்போல ஆனாலும், வீடுபேற்றை அடைய விருப்பம் உண்டாகாது போனால் யாது இலாபம்? இந்த விதமாக ஆடம்பரமாக வெளித்தோற்றம் ஏற் படுமாகில், பிறப்பு இறப்பு என்கிற நோயிலிருந்து விடுதலை எவ்வாறு ஏற்படும்? ஏ கண்ணா, உம்முடைய, அடிமை மீரா, கைகளை அஞ்சலி செய்துகொண்டு, பணிவுடன் சொல்கிறாள், ஏ கிரிதரநாகர், என் உலகக் கட்டுகளை நாசம் செய்வீர்.

232. இப்படிப்பட்ட மேலான மனிதப்பிறப்பு அவ்வளவு எளிதாக ஏற்படுகிறதில்லை. மனிதப்பிறப்பு முன்பிறவியின் புண்ணியப் பயனைப் பொறுத்திருக்கிறது. இந்த வாழ்க்கையும் கணந்தோறும் நாசமடைகிறது. 'ஒவ்வொரு நிமிடத்திலும் குறைகிறது. வாழ்நாட்கள் சீக்கிரமாகவே முடிவடைகின்றன. மரத்தின் இலைகள் ஒருதடவை மரத்திலிருந்து விடுபட்டு, கீழே விழுவதுபோல, மீண்டும் அவை மரத்தில் ஒட்ட மாட்டாதது போல, மனிதப் பிறப்பு கிடைத்த பின்பும் நல் வினைகள் செய்யாமல் போனால், மீண்டும் அவற்றைச் செய் வதற்கு வாய்ப்பு ஏற்படுவதில்லை. இந்தச் சம்சார வடிவாகிய பெருங்கடல் எல்லை காணமுடியாதது. தாண்ட முடியாதது. ஏ கிரிதரகோபாலா, நீர் தாம் இந்தப் பெருங்கடலைத் தாண்ட வைப்பதற்கு ஓடக்காரன் போல இருக்கிறீர். என்னைச் சீக்கிர மாக அக்கரை சேர்ப்பீர். கிரிதரின் அடிமையாகிய மீரா சொல்கிறாள், "இந்த உலகவாழ்க்கை மிகக் குறுகியது. இதைப் புரிந்துகொண்டு, நற்செயல்களைச் செய்ய வேண்டும்."

233. ஏ மனிதா, இந்த உலகவாழ்க்கையில் சில நாள் களே உயிருடன் வாழ முடிகிறது. ஆகவே எதற்காக உலக வாழ்க்கையில் ஆசை ஏற்படவேண்டும்? ஏன் செருக்கு,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சினம் முதலியவை உனக்கு இருக்க வேண்டும்? தாய், தகப்பன் பிறப்புத் தருவதற்குக் காரணர்கள். ஊழ்வினையின் பலனை எழுதுவது பகவானே. உணவு உட்கொள்வது, செலவிடுவது, போன்ற உலகக் கட்டுகளில் ஈடுபட்டு, உயிர் சீக்கிரமாக முடிவடைகிறது. இவற்றால் பயனுள்ள செயல்கள் ஒன்றும் ஏற்படுவதில்லை. எனக்கு இவற்றில் சிறிதும் ஆசை இல்லை. வாழ்க்கை இன்பத்தில் நாட்டமும் இல்லை. நான் சாதுக்கள் கூட்டத்தை அடைந்து, அரிபகவானின் புண்ணியப் பண்புகளின் புகழ்களைப் பாடி மகிழ்வேன். மீரா சொல்கிறாள், "கிரிதரநாகர், உம் உதவியால் இந்தப் பவக்கடலைத் தாண்ட என்னால் முடியும். நீர் தாம் அருள்செய்ய வேண்டும்."

234. ஏ மனிதா, பகவானை வணங்குவதற்கு மறந்து விடாதே. நான்கு நாள்கள்—சில குறைந்த நாள்களுக்கு இன்பசுகங்களைத் துய்ப்பாய். மாதுளம்பூ சில நாள்களுக்குப் பூத்து அழகாக இருப்பதுபோல, உலகவாழ்க்கையும் நிலையற்றது. அதற்குப் பின்பு அந்த மலர் மறைந்து போகிறது. அது போலத்தான் இந்த வாழ்க்கையும். நீயும் மிக்க ஆசைகளுடன் இந்த உலக பூமிக்கு வந்திருக்கிறாய், "இங்கு இதைச் செய்வேன்" என்கிற ஆசையுடன் வந்திருக்கிறாய். சில நாள்களுக்குப் பிறகு இந்த ஆசை மறந்து போய்விடுகிறது. எது உன் கையில் இருந்ததோ, அதுவும் தொலைந்து போகிறது. மீரா சொல்கிறாள், "கிரிதரநாகர் என் சுவாமி. அவர் முன்னிலையில் அவாவற்ற அறிவினால் நீ வாழ வேண்டும்."

235. ஏ மனிதா, இராமநாம (ரஸத்தை) அம்ருதத்தைக் குடி. இராம நாமத்தை நாவில் உச்சரித்து இன்பமடைவாய். தீயவர்களின் சேர்க்கையை விடுத்து, நல்ல சாதுக்களின் சேர்க்கையை அடைந்து. எப்பொழுதும் அரிபகவானை வணங்குவாய். அரிகதைகளைக் கேட்பாய். மனத்திலிருந்து காம, க்ரோத, மத, லோபம், மோஹம் (செருக்கு, சினம், சிறுமை, இவறன்மை) முதலியவற்றை விட்டுப் பகவானை வணங்குவாய். மீரா சொல்கிறாள், "கிரிதரநாகர் என் பிரபு, நான் அவரிடம் காதலன்பு கொண்டேன். ஏ மனிதா, அவரிடம் அன்புப் பிச்சை கேள்."

236. ஏ தோழீ, என் மனம் கண்ணனுடைய நாமத்தில் ஊறியிருக்கிறது. உயிர்த்தோழீ, நீ இந்த உலகத்தில் இருந்துகொண்டு, கண்ணன நாமத்தை மிழற்றிக் கொண்டிருப்பாய். அதனால் உன் தீவினைகள் மாய்ந்து நீ பிறவி பிறவியாக முன்புள்ள வினைகளால் வரும் கண்ணன் நாமத்தை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

